# சிரவையாதீனப் பதிப்புகள்

ப.வெ. நாகராஜன்




INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113.

# சிரவையாதீனப் பதிப்புகள்

ப.வெ. நாகராஜன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம்

தரமணி, சென்னை - 600 113.

கழகம் சுப்பையாபிள்ளை அறக்கட்டளைச் சொற்பொழிவு
அறக்கட்டளை நிறுவியோர்
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்
வரிசை எண்: 9 நாள்: 18-08-04

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Ciravai Ātina pathippukaḷ** |
| Author | : | P.V. Nagarajan |
| General Editor | : | Dr. S. Nirmala Devi,<br>Dip. in Epi., & Arch.,<br>Dip. in Manus.<br>Research Assistant<br>International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai 600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Taramani, Chennai - 600 113. |
| Publication No | : | 510 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2004 |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii+96 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty only) |
| Printing | : | Sri Bharathi Art Printers<br>Chennai |
| Subject | : | Editions in Saivism |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

சமயம் பரப்பும் மையங்களாகத் திகழ்ந்ததோடு, தமிழையும் வளர்த்த மடங்களுக்கென்று தமிழக வரலாற்றில் தனித்த இடம் உள்ளது. 'மடம்' என்ற சொல் திருமந்திரத்தில் தான் 'சமயம் பரப்புபவை' என்ற பொருளோடு முதன் முதலாகக் கையாளப்பட்டுள்ளது. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இராமானுசர் வைணவ சமயம் பரப்பச் சிலமடங்களை முதன் முதலில் தோற்றுவித்தார் எனத் தெரிய வருகிறது. தொடர்ந்து கி.பி. 14ஆம் நூற்றாண்டில் ஆதீனங்கள் எனப்படும் சைவ மடங்கள் தோன்றின.

ஆதீனம் என்பது 'உரிமை நிலையம்' எனப் பொருள்படும். அருளாளர்களின் அருள் நலம் கனிந்த உரிமை நிலையங்களாக இவை திகழ்ந்து வருகின்றன. ஆதீனங்கள் அனைத்தும் சைவமும் தமிழும் தழைக்கவும் சமுதாயத்தில் அவ்வப்போது வேண்டப்படும் அரிய பல தேவைகளை நிறைவு செய்வதுமான நோக்கங்களை உட்கொண்டவையாக உள்ளன. தமிழகத்தில் தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள், திருவ்ண்ணாமலை ஆகிய இடங்களிலுள்ள சைவத்திருமடங்கள் ஆற்றிவரும் தமிழ்த் தொண்டு தமிழ்ச் சான்றோர்கள் அறிந்த ஒன்றே. இவ்வகையில் கோவையிலுள்ள சிரவையாதீனத்தின் தமிழ்ப் பணிகளைத் தமிழுலகிற்கு வெளிக்காட்டும் முகமாகச் **சிரவையாதீனப் பதிப்புகள்** என்ற இந்நூல் நிறுவனத்தால் வெளியிடப் பெறுகிறது.

சிரவையாதீனப் பதிப்புகள் குறித்து ப.வெ. நாகராஜன் அவர்கள் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவே நூலாக வெளிக் கொணரப்பெறுகிறது. இத்தகு ஒரு சொற்பொழிவை நிகழ்த்துவதற்குப் பல வகையிலும் பொருத்தமானவராக நூலாசிரியர் திகழ்கிறார்.

சிரவையாதீனம் அமைந்துள்ள கோயமுத்தூரைச் சேர்ந்தவர், சிரவையாதீனம் மூலம் பல பதிப்புகளை வெளியிட்டவர், 'சிரவையாதீனக் கவிஞர்' என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர், சிரவை யாதீனத்தின் இலக்கியத் துறை இயக்குநர், இவ்வாதீனத்திலிருந்து

வெளியாகும் 'கௌமார அமுதம்' என்ற திங்களிதழின் ஆசிரியராக அமைந்துள்ளவர் என்ற பல்வேறு கோணங்களிலும் சிரவையாதீனத்துடன் அணுக்கத் தொடர்புடையாராகத் திகழ்ந்து வரும் ப.வெ. நாகராஜன் அவர்கள் சிரவை யாதீனப் பதிப்புகள் குறித்த ஆய்வுக் கருத்துகளை இந்நூல்வழி வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நூல் சிரவையாதீனம் ஓர் அறிமுகம், சிரவையாதீனப் பதிப்புகள் - ஆய்வு வரலாறு, சிரவையாதீனப் பதிப்பு நெறிமுறைகள், சிரவையாதீனப் பதிப்புகள் என்ற நான்கு உட் தலைப்புகளில் இவ்வாதீனத்தின் சைவசமயத் தொண்டையும் தமிழ்த் தொண்டையும் ஒருங்கே வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சிரவையாதீனப் பதிப்புகளை அறிமுகப்படுத்துவதுடன் சிறந்த இலக்கியத் திறனாய்வாகவும் இந்நூல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிரவையாதீனப்பதிப்புகளின் வரலாற்றை எடுத்துக் கூறும் முழு ஆய்வுநூலாக அமைந்துள்ள இந்நூலைத் தமிழுலகம் வரவேற்று மகிழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்நூல் தமிழ்ப் பதிப்பு வரலாற்றின் ஓர் எல்லைக்கல்· ஓர் எடைக்கல்.

இந்நூலை வெளிக்கொணர்வதில் முனைப்புடன் செயல்பட்ட இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்களுக்கு என் பாராட்டுகள்.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், **தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த கணிப்பொறி உதவியாளர் திருமதி இரா. வெண்ணிலா அவர்களுக்கும் அழகுற அச்சிட்டுத்தந்த சென்னை ஸ்ரீ பாரதி ஆர்ட் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

சென்னை
*18-08-2004*

**இயக்குநர்**



## ஆசிரியரைப் பற்றி . . .

கோயமுத்தூரைச் சேர்ந்த இவர் சிதம்பரத்தை அடுத்த கடவாச்சேரியில் உள்ள தம் தாய்வழிப் பாட்டனார் வீட்டில் 25-5-1937 அன்று பிறந்தவர். மின்னணுவியல் சார்ந்த வேறு துறையில் பட்டயக் கல்வியும் பயிற்சியும் பெற்று அத்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுதே தம் சொந்த முயற்சியால் தமிழ் கற்றுப் புலவர், பி.லிட். பட்டங்களைப் பெற்றவர். இந்தியில் விஷாரத் பட்டம் பெற்ற இவர் தெலுங்கு, கன்னடம், வடமொழி ஆகிய மொழிகளிலும் பயிற்சி உடையவர்.

உரை காணப்படாத நூல்களுக்கு உரை இயற்றுதல், பதிப்பித்தல் ஆகிய பணிகளில் 1969 முதல் தொடர்ந்து ஈடுபட்டுள்ளார். சிரவை ஆதீனக் கவிஞர் (1976), திரிபு மடக்கு தெளிவுரை வல்லார் (1985), தேவார மணி (1987), சுவடியியற் கலைமணி (2003) ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ள இவர் 2002 ஆம் ஆண்டு பொன்மனச் செம்மல் கே.ஆர். பாண்டுரங்கனார் விருதையும் பொற்கிழியையும் அடைந்துள்ளார்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஓலைச்சுவடித் துறை தொடங்கியது முதலாக 31-5-1995 வரை மூத்த தொழில்நுட்ப உதவியாளராகப் பணிபுரிந்து பிறகு திருவனந்தபுரத்தில் உள்ள பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனத்தில் முதுநிலை ஆய்வாளராகப் பணிபுரிந்தார். இப்பொழுது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி விரிவாக்கத் திட்டத்தில் துணைப் பதிப்பாசிரியராகத் தொண்டாற்றுகிறார்.

கவிதை இயற்றும் பயிற்சியும் உடைய இவர் சிற்றிலக்கியம், மரபிலக்கணம், சித்திரகவிகள், சுவடியியல், அகராதியியல் ஆகிய துறைகளில் தோய்ந்த ஈடுபாடு உடையவர். இவர் நூல்களுள் திருப்பேரூர்க் கலம்பக உரை (1978), செழியதரையன் பிரபந்தங்கள் (1986), அறுவகை இலக்கண உரை (1991), திருவேட்டை நல்லூர் ஐயனார் பள்ளு (1992), நாகைக் கனக சபைநாதன் உலா (1995), தொல்காப்பிய மூலம் - பாட வேறுபாடுகள் ஆழ்நோக்காய்வு (1996), தொல்காப்பியச் சிறப்பகராதி (2000), வெள்ளியங்கிரிச் சிற்றிலக்கியத் திரட்டு உரை (2002) ஆகியன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

பல்வேறு ஆய்வுக் கருத்தரங்குகளில் தலைமை ஏற்றும் பங்கேற்றும் ஏறத்தாழ ஐம்பது ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். பல்வேறு சிறப்பு மலர் வெளியீடுகளில் பதிப்பாசிரியராகவும் மலர்க்குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். மாநில முருக பக்தர் பேரவையின் சிறப்பு ஆலோசகராகவும் சிரவையாதீனத்தின் இலக்கியத்துறை இயக்குநராகவும் விளங்கும் இவர் அந்த ஆதீனத்திலிருந்து வெளியாகும் கௌமார அமுதம் என்னும் திங்களிதழின் ஆசிரியரும் ஆவார்.

இந்த ஆய்விற்காகத் திருமடத்தின் மூலை முடுக்குகளில் உள்ள புத்தகங்களையெல்லாம் சோதனை போட எனக்கு நிலையான அநுமதி வழங்கிய சிரவையாதீனகர்த்தர் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள் அவர்களுக்கும், பல பழம் பதிப்புகளைப் பேணிப் பாதுகாத்து வைத்திருந்து ஆய்விற்குக் கொடுத்துதவிய சுவடிக்கலைஞர் உயர்திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுக்கும் என் தமிழ்ப்பணிகளுக்குத் தொடர்ந்து எல்லா வகையிலும் பேருதவி புரிந்து வருபவராகிய தவத்திரு. இராமானந்த அடிகளார் மேனிலைப் பள்ளித் தமிழாசிரியர் சிரவை ஆதீனப் புலவர் உயர்திரு. கு. சிவலிங்கம் எம்.ஏ., பி.எட். அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

நிறுவனத்தின் அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்கள் இச்சொற்பொழிவிற்கான ஏற்பாடுகளைச் செம்மையாகச் செய்து சிறப்பாக நிறைவேற்றியுள்ளார். முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்களுக்கு என் நன்றி உரியது.

இப்பணியில் தொடர்புள்ள அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

1-6-2004
சென்னை-5

ப.வெ. நாகராஜன்

# நுதலிப் புகுதல்

சிரவையாதீனப் பதிப்பு வரலாறு ஒரு நூற்றாண்டுக் கால வரலாறு - 97 ஆண்டுகளையும் 249 வெளியீடுகளையும் உள்ளடக்கிய ஒன்று. அவற்றோடு நான் நாற்பது ஆண்டுகளாகப் பழகி வருபவன் என்றாலும் இந்தச் சொற்பொழிவுக்காக எல்லாப் புத்தகங்களையும் கால வாரியாக அடுக்கி மீண்டும் புரட்ட நேர்ந்தது ஒரு புதிய அனுபவம்.

இந்த ஆய்வை இன்னமும் ஆழமாகவும் நுட்பமாகவும் செய்திருக்க முடியும். இதிலும் ஓரிரு குறைகள் உள்ளன. எனினும் காலக்கட்டுப்பாடும், என் பணிச்சூழலும் மேலும் காலத்தைச் செலவிட அநுமதிக்காததால் உள்ளதைக் கொண்டு உவகை கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. இவ்வுரையில் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கும் நூல்களில் மிகப் பெரும்பான்மையானவை தமிழ் இலக்கிய ஆய்வுலகத்திற்குப் புதியவை. இந்த நூல்களை அறிமுகப் படுத்த ஒரு நல்ல வாய்ப்பை அளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்கள் பரந்த நூலறிவு வாய்ந்தவர்; சிறந்த பதிப்பாசிரியர்; தெளிந்த சிந்தனையாளர்; கடுமையான உழைப்பாளி. அவரோடு நான் பல ஆண்டுகளாகப் பழகி வருகிறேன். ஆக்கபூர்வமான சிந்தனையும் ஊக்கமான உழைப்பும் மிக்க இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

இச்சொற்பொழிவு நிகழ்த்த எனக்கு அநுமதி வழங்கி ஊக்கப்படுத்திய சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறைத் தலைவரும் பேராசிரியருமாக விளங்கும் முனைவர் வ. ஜெயதேவன் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன். தமிழ் இலக்கிய உலகத்தில் கழகம் என்றாலே சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தான். இன்று பல்லாயிரக் கணக்கானவர்கள் தமிழாசிரியர்களாகப் பிழைப்பு நடத்திக் கொண்டிருப்பதற்கு முழு உதவி செய்தவை கழகப் பதிப்புகளே. அந்நிறுவனத்தை நிறுவிய தாமரைச் செல்வர் வ. சுப்பையாபிள்ளை அறக்கட்டளையை ஏற்படுத்திப் பரிபாலித்து வரும் சான்றோர்களுக்கும் நன்றி.

# பொருளடக்கம்


1. சிரவை ஆதீனம் - ஓர் அறிமுகம் 1

2. சிரவை ஆதீனப் பதிப்புகள் - ஆய்வு வரலாறு 6

3. சிரவையாதீனப் பதிப்பு நெறிமுறைகள் 9

4. சிரவையாதீனப் பதிப்புகள் 15

# சிரவையாதீனம் - ஓர் அறிமுகம்

இந்தியப் பண்பாடு என்பது பெரும்பாலும் சமயத்தை அடிப்படையாகக் கொண்ட கலாச்சாரமே எனில் மிகை அன்று. இங்கு பயன்கலைகளும் கவின்கலைகளும் மிக நீண்ட காலமாகவே சமயத்தைச் சார்ந்தனவாகத் தான் தோன்றி வளர்ந்து வந்துள்ளன. சமயம் என்பது கடவுள் வழிபாடு, சமயக்கல்வி என்னும் இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது. இவற்றில் தெய்வ வழிபாட்டிற்கு உரிய இடங்களாகத் திருக்கோவில்களும், சமயக்கல்வியைப் பரப்புவதற்கும் மேலாய்விற்கும் உரிய நிறுவனங்களாகத் திருமடங்களும் தோன்றியுள்ளன. எனவே இந்தியச் சமயங்களுக்கு ஆலயங்களும் திருமடங்களும் இரு கண்களைப் போன்று இன்றியமையாதன ஆகும்.

சமயக் கல்வி என்பது கட்டடக்கலை, சிற்பம், இசை, நாட்டியம், ஓவியம், ஒப்பனை முதலிய கவின்கலைகளும், மெய்ப்பொருள் ஆய்வு (தத்துவ ஆராய்ச்சி), அதற்கு அடிப்படை ஆகிய மொழியறிவு, அம்மொழியைச் செம்மைப்படுத்துவது ஆகிய இலக்கணம் ஆகிய அனைத்தையும் தன்பாற் பெற்றது ஆகும். எனவேதான் சமய நிறுவனங்களாகிய திருமடங்கள் இக்கலைகளை எல்லாம் வளர்க்கின்ற பல்கலைக்கழகமாகப் பணி செய்ய வேண்டி உள்ளது. இத்திருமடங்களோடு இணைந்தனவாகத் திருக்கோவில்களும் இருப்பதாலும், இந்நிறுவனங்களே புனிதமானவையாகக் கருதப் பெறுவதாலும் இவை மடாலயங்கள் என வழங்கப் பெறுகின்றன.

இத்தகைய மடாலயங்கள் - குறிப்பாகத் தமிழகச் சைவத் திருமடங்கள் - ஆதீனம் என்றும் அழைக்கப்பெறுகின்றன. ஆதீனம் என்னும் சொல் உரிமை, வசம் (அநுபவம்) என்னும் இரு பொருள்படும். குறிப்பிட்ட சமயப் பிரிவின் தத்துவ விளக்கங்களும், வழிபாட்டு மரபுகளும் எந்த நிறுவனத்திற்குச் சிறப்புரிமை வாய்ந்ததோ - கிட்டத்தட்ட இன்றைய காப்புரிமை (Copy right) போல அந்தச் சமயத்தை வளர்ப்பதற்காக வழங்கப்பெற்ற அறக்கொடைகள் எல்லாம் எந்த நிறுவனத்தின் வசத்தில் உள்ளனவோ (possession) அது அந்த ஆதீனம் எனப் பெயர் பெறுகிறது. தமிழ்நாட்டில் மட்டுமே வழக்கில் உள்ள இப்பெயர் பெரும்பாலும் அந்தத் திருமடம் அமைந்துள்ள தலத்தின் பெயரைக் கொண்டே - தருமபுர ஆதீனம்,

திருப்பேரூர் ஆதீனம் என்பன போல - வழங்கப்படுகிறது. இம்முறையிலேயே கோவையை அடுத்த சிரவணம்பட்டியில் அமைந்துள்ள கௌமார மடாலயம் சிரவை ஆதீனம் எனப்படுகிறது. சிரவை என்பது சிரவணம்பட்டி அல்லது சிரவணபுரம் என்பதன் மரூஉ.

இந்து சமயத்தின் ஆறு பெரிய பிரிவுகளுள் ஒன்று கௌமாரம் ஆகும். மேலோட்டமாக இதற்குக் குமரக்கடவுளாகிய முருகப் பெருமானை முழுமுதற்பொருளாக வழிபடும் நெறி என்று பொருள் கூறப்படும். இது முழுமையான பொருள் ஆகாது. கௌமாரம் அல்லாத ஏனைய ஐந்து சமயங்களையும் தனக்கு அங்கமாக ஏற்றுக்கொள்ளுவதும், குருநாதருடைய வடிவமே பரம்பொருளின் வடிவங்களுள் மிகச் சிறப்புடையது என்பதுவும், வாழ்க்கை நெறியில் கொலையையும் புலால் உணவையும் எல்லா நிலையிலும் நீக்குதலும் இத்தத்துவ நெறியின் தலையாய கொள்கைகள் ஆகும். முருக வழிபாடு மட்டும் கௌமார நெறி ஆகி விடாது; விரிப்பிற் பெருகும்.

இந்தக் கௌமார சமயத்தைப் பரப்புவதற்காகத் தோன்றிய நிறுவனம் கௌமார மடாலயம் எனப்படும். இது சிரவணபுரத்தில் இருப்பதால் சிரவையாதீனம் ஆகும். இது கோவை காந்திபுரத்திலிருந்து சத்தியமங்கலம் செல்லும் பெருவழியில் எஸ்.ஆர்.பி. மில்ஸ் பேருந்து நிறுத்தத்திற்கு மேல்திசையில் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. தவத்திரு இராமானந்த சுவாமிகள் என்னும் மெய்ஞானியால் இது 1890ஆம் ஆண்டு நிறுவப் பெற்றது.

தவத்திரு இராமானந்தர் சரவணம்பட்டியில் 1857ஆம் ஆண்டு வேலப்பக்கவுண்டர், ஆண்டாளம்மை என்னும் பெற்றோருக்கு மகவாகத் தோன்றினார். கந்தர் நாடி சாதகம் என்னும் நாடி சோதிட நூலில் இவர் அகத்திய முனிவரின் அம்சமாக அவதரித்தவர் என்னும் குறிப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. உள்ளூர்த் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் மட்டுமே படித்த இவருக்கு நல்ல தமிழ்ப் புலமை எளிதில் வந்து விட்டது. சிறுவயதிலிருந்தே ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டிருந்த இவர் புலவர் புராணம், அறுவகை இலக்கணம் முதலிய ஏராளமான நூல்களை இயற்றியுள்ள வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் இயற்றப் பெற்றதாகிய தியானாநுபூதி என்னும் சாத்திர நூலினால் ஈர்க்கப்பட்டு அவருடைய சீடரானார். நிறைய நிலபுலங்களை உடைய வளம்மிக்க குடும்பத்தில் தோன்றிய இராமானந்தர் 1908ஆம் ஆண்டு

பிப்ரவரி ஏழாம் தேதியன்று தம் பங்கு நிலங்களை எல்லாம் கௌமார மடாலயத்திற்குச் சாசனம் மூலம் உரிமையாக்கி விட்டார்.

திருமடம் முன்னரே தோன்றியிருந்தாலும் இந்தச் சாசனத்தின் அடிப்படையிலேயே சிரவையாதீனத்தின் தோற்றம் 1908 எனக் கொள்ளப்படுகிறது. தொடக்கத்தில் கட்டப்பெற்ற தவச்சாலைக்கு வரும் அன்பர்கள் பெருகிவிட்டதால் பெரிய கட்டடங்கள் கட்டப்பெற்றன. இராமானந்தர் அவ்வப்பொழுது செய்யுளாகவும் உரைநடையாகவும் சிறுசிறு நூல்களை இயற்றினார். இவற்றுள் சண்முகமாலை என்னும் தோத்திரப் பிரபந்தம் இப்பகுதியில் பரவலாகப் பயிலப்பட்ட ஒரு நூலாகும். இவருடைய படைப்புகள் அனைத்தும் தொகுக்கப் பெற்று இராமானந்தத்திரட்டு எனப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

ஆதீனத்தின் சமய, உலகியல் பொறுப்புக்களை நிர்வகிக்க 28-1-1923 அன்று தவத்திரு கந்தசாமி சுவாமிகள்அவர்களை இரண்டாம் பட்டமாக நியமித்தார். இந்தக் கந்தசாமி சுவாமிகள் இராமானந்தரின் பூர்வாசிரமத் தம்பி ஆகிய வெங்கடசாமிக் கவுண்டரின் மைந்தராக 18-4-1892 அன்று பிறந்தவர். முறைப்படியான கல்வி நிலையங்களிற் சேர்ந்து பயிலா விட்டாலும் தமிழ், வடமொழி, மலையாளம் ஆகிய மும்மொழிகளில் நல்ல தேர்ச்சி பெற்றவர். பெரும் தமிழ்க் கவிஞராகத் திகழ்ந்த இவர் பக்தமான்மியப் பெருங்காப்பியம் உள்ளிட்ட பல தமிழ் நூல்களை இயற்றியுள்ளார். இவரால் இயற்றப் பெற்றுள்ள செய்யுள்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 16,000 ஆகும். சிரவை ஆதீன வெளியீடுகளில் - இன்றுவரை பதிப்பானவற்றில் - பெரும்பாலானவை இந்தக் கந்தசாமி சுவாமிகளுடையனவே. இச்சுவாமிகள் 10-12-1948 அன்று இறைவன் திருவடி நீழலை அடைந்தார். ஆதீன நிறுவனர் ஆகிய இராமானந்த சுவாமிகளும் 21-12-1956இல் தம் 99 ஆவது வயதில் முக்தியடைந்தார்.

சிரவை ஆதீனத்தின் மூன்றாவது பட்டமாகப் பெரும் புகழுடன் விளங்கியவர் தவத்திரு. கஜபூசைச் சுந்தர சுவாமிகள் அவர்கள். தம்முடைய தலைசிறந்த இலக்கியச் சொற்பொழிவு ஆற்றலாலும் பெரியபுராணப் பேரறிவாலும் அறிஞர் உலகத்தில் இவர் மிகவும் மதிக்கப்பட்டார். கோவில் திருப்பணிகள், சிறப்பு வழிபாடுகள், இடைவிடாத திருத்தல யாத்திரை ஆகியனவற்றால் கௌமார ரிஷி, திருப்பணிச் சக்கரவர்த்தி, அலங்காரச் சக்கரவர்த்தி என்றெல்லாம் போற்றப்பட்டார். இந்தியக் கண்டம் முழுவதையும்

பல வெளிநாடுகளையும் பலமுறை கண்டுவந்தவர். இந்தச் சுந்தர சுவாமிகள் தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் பூர்வாசிரமத் தம்பியான திரு. வேலப்பக் கவுண்டரின் மகனாக 29-11-1929 அன்று தோன்றினார். தமிழ்வித்துவான் பட்டம் பெற்றுப் பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் சிறிது காலம் ஆசிரியப் பணியாற்றினார்.

9-2-1964 அன்று சுந்தர சுவாமிகள் சிரவையாதீனத்தின் மூன்றாவது குருமகா சந்நிதானமாக அருளாட்சி ஏற்றார். இவருடைய அருளாட்சியில் தான் கௌமார மடாலயத்தின் புகழ் எட்டுத் திக்குகளிலும் பரவியது. மடாலயத்தின் அறுசமய ஆலயங்களிலும் தொடர்ந்து திருப்பணிகளும் குடமுழுக்குகளும் செய்து கொண்டே இருந்தார். தமிழ் அருச்சனை மட்டும் அல்ல; கும்பாபிஷேகத்தையே முதன் முதலில் 1954ஆம் ஆண்டில் திருநெறிய தீந்தமிழால் மிகச் சிறப்பாகச் செய்தார். இவரால் குடமுழுக்காட்டப் பெற்ற கோவில்கள் ஆயிரத்திற்கு மேல் இருக்கும்.

சமயத் துறையில் மட்டுமன்றிக் கல்வித்துறையிலும் இவர் செய்த பணிகள் சமுதாயத்திற்கு நல்ல பயன் தந்து கொண்டுள்ளன. மழலையர் பள்ளி, ஆங்கிலவழி மெட்ரிக் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளி, பொறியியல் கல்லூரி எனப் பலநிலைக் கல்வி நிலையங்களைத் தோற்றுவித்தார். அவை இன்றும் சிறப்பாகச் செயல்புரிந்து வருகின்றன. உலக நலன் கருதிச் சுந்தர சுவாமிகள் செய்த ஆனை வேள்வி (108 ஆண் யானைகளை நிறுத்திச் செய்யப் பெறும் பெருஞ்சிறப்பு வழிபாடு) இவருக்குப் பெரும்புகழ் ஈட்டித் தந்தது. நன்கு செய்யுள் இயற்றவல்ல இவர் ஏறக்குறைய 900 பாடல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் வாழ்க்கை வரலாற்று வண்ணம் மிகச் சிறப்பானது.

இவ்வாறு சிரவையாதீனத்தின் புகழை உலகெங்கும் பரப்பிய தவத்திரு. சுந்தரசுவாமிகள் 14-6-1994 அன்று இறைவன் திருவடி நீழலை அடைந்தார்கள். அன்றே நான்காம் பட்டமாகத் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் அருளாட்சி ஏற்றார்.

இந்தச் சுவாமிகள் தவத்திரு. சுந்தரசுவாமிகளின் பூர்வாசிரமத்தம்பி திரு. நடராசக் கவுண்டரின் குமாரராக 6-8-1970 அன்று பிறந்தவர். அறிவியலில் இளநிலைப்பட்டமும் (B.Sc) தமிழில் முதுகலைப் பட்டமும் (எம்.ஏ) பெற்றுள்ள இவர் இப்பொழுது

முனைவர் பட்டத்திற்காகத் தவத்திரு. கந்தசாமி சுவாமிகளின் சிற்றிலக்கியங்களில் ஆய்வு மேற்கொண்டுள்ளார். முறையான இலக்கிய ஆய்வு, சரியான நூல் பதிப்புகள், அறிவியல் வசதிகளோடு கூடிய மிகப்பெரிய நூலக அமைப்பு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவு ஈடுபாடு காட்டிவரும் சுவாமிகள் சமயப்பணிகளையும் சற்றும் குறைவில்லாமல் நிறைவேற்றி வருகிறார். இவர் அருளாட்சி ஏற்று ஏழு ஆண்டுகளுக்குள்ளாகவே மூன்று கருத்தரங்கங்கள், பல தரமான நூல் வெளியீடுகள், தவத்திரு. சுந்தர சுவாமிகள் சிறப்பு நூலக அமைப்பு எனச் சிறப்பாகப் பணிகளைத் திட்டமிட்டு முடித்துள்ளார். இவர் அருளாட்சிக் காலத்தில் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிரவையாதீனத்திற்கு உரிய இடம் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது. சமய, சமுதாயப் பணிகளும் சற்றும் தொய்வில்லாமல் தொடர்ந்து வளர்ந்து வரும் என்பதிலும் ஐயம் இல்லை.

# சிரவையாதீனப் பதிப்புகள் - ஆய்வு வரலாறு

சிரவணபுரக் கௌமார மடலாயம் தோத்திர, சாத்திர, வரலாற்று நூல்களையும், கட்டுரைத் தொகுப்புகளையும், நினைவு மலர் சிறப்பு மலர் போன்றனவற்றையும் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. இவ்வெளியீடுகள் பலவற்றில் கௌமார சபை வெளியீடு என்றும் சிலவற்றில் கௌமார மடாலய வெளியீடு என்றும், சிலவற்றில் சிரவை ஆதீன வெளியீடு என்றும், மிகச் சிலவற்றில் அந்தந்த விழாக்குழுக்களின் வெளியீடு என்றும் குறிப்பிடப் படுகின்றன. எப்படிக் குறிப்பிடப்பெற்றாலும் அனைத்தும் சிரவை ஆதீனத்தின் வெளியீடுகளே ஆகும். எனவே இந்தப் பெயர் மாற்றங்களில் கவனம் செலுத்த வேண்டியது இல்லை.

இப்பொழுது தெரிந்தவரையில் 1907ஆம் ஆண்டு முதல் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. என்றாலும் திருமடத்தில் பதிப்புகளைப் பதிவு செய்து பதிவேடு பராமரிக்கும் பழக்கம் இன்மையாலும், வெளியிடப்பெற்ற நூல்களிலும் சில படிகளைத் தனியாக எடுத்து வைத்துப் போற்றிப் பாதுகாக்கத் தவறிவிட்டதாலும், பதிப்புகளில் வெளியீட்டு வரிசை எண் முறையாகக் குறிக்கப்பட்டு வராததாலும் சிரவையாதீனப் பதிப்பு வரலாறு என்பதே நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது.

இந்நிலையில் முதன் முதலாக 1978 ஆம் ஆண்டில் பதிப்பு வரலாற்றைக் கண்டறிவதற்கான முயற்சி இந்தச் சொற்பொழிவாளரால் தொடங்கப்பெற்றது. அப்பொழுது கிடைத்த நூல்களையெல்லாம் திரட்டி, இயன்ற அளவு ஒழுங்குபடுத்தி 140 வெளியீடுகள் பட்டியல் இடம்பெற்றன. (128 முதல் பதிப்புகள், 9 மறு பதிப்புகள், 3 பதிப்பு வருடம் அறியப்படாதவை). இந்தப் பட்டியல் தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகளின் பொன்விழா மலரில் இடம் பெற்றது (பக். 43-46).

இப்பட்டியல் வெளியான பிறகும் இந்தச் சொற்பொழிவாளர் சிரவை ஆதீனப் பதிப்புகளையும், அவற்றைப் பற்றிய விவரங்களையும் தொடர்ந்து தொகுத்துக் கொண்டும் முதல் பட்டியலைச் செம்மைப் படுத்திக் கொண்டும் இருந்தார். அதனால் பல செய்திகள் தெளிவாயின.

எடுத்துக்காட்டாக,

அ. முதல் பட்டியலில் 1921ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற இராமானந்தத் திரட்டு என்னும் நூல்தான் சிரவையாதீனத்தின் முதல்

வெளியீடாகக் காட்டப் பெற்றது. ஆனால் தொடர்ந்த மேலாய்வுகளின் விளைவாக 1907ஆம் ஆண்டிலேயே தவத்திரு இராமானந்த சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ள சண்முகமாலை என்னும் தோத்திரப் பிரபந்தம் வெளியிடப் பெற்றதாகவும், 1913இல் அதே ஆசிரியரால் இயற்றப் பெற்ற உருவக உரைநடை நூலாகிய ஆத்துமராம சரித்திரம் வெளிவந்ததாகவும் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் 1913க்கும் 1921க்கும் இடைப்பட்ட எட்டு வருடங்களில் நூல்கள் எவையேனும் வெளியாயினவா இல்லயா என இன்னமும் தெரியவில்லை.

ஆ. 1949ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியான குருந்தமலை ஸ்ரீ குழந்தை வேலாயுதசாமி பிள்ளைத் தமிழ் என்னும் கந்தசாமி சுவாமிகளின் சிற்றிலக்கியப் பதிப்பில் தான் முதன் முதலாகச் சிரவைக் கௌமார சபை வெளியீடு எண் 65 என்னும் குறிப்பு இடம் பெற்றுள்ளது. இதற்கு முன்வந்த பதிப்புகளில் இந்த வரிசை எண் எதுவும் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதே 1949ஆம் வருடம் ஜூலை மாதத்தில் வெளியான குணியமுத்தூர் குமரகுருபரக் கடவுள் தோத்திரப் பிரபந்தத் திரட்டு என்னும் நூலில் வரிசை எண் 64 என உள்ளது.

இவ்வாறு ஜனவரியில் வந்த நூலில் 65 என்றும் ஜூலை மாதத்தில் வெளியான பதிப்பில் 64 என்றும் இருப்பது கால முரண்பாட்டைக் காட்டுகிறது. இதன் காரணத்தை எளிதில் யூகித்து விடலாம். இரு நூல்களின் கையெழுத்துப் படிகளும் ஒரே சமயத்தில் எழுதி முடிக்கப்பெற்று வெவ்வேறு அச்சகங்களுக்கு அனுப்பப் பட்டிருக்கும். 64 என எண்ணிடப் பெற்றுள்ள தோத்திரத்திரட்டு அளவில் சிறியது (26 பக்கங்கள்) என்பதால் முதலில் முடிந்துவிடும் என்னும் எதிர்பார்ப்பில் முதல் வரிசை எண் தரப்பட்டிருக்கும். ஆனால் பெரிய நூலாகிய பிள்ளைத் தமிழ் (76 பக்கங்கள்) விரைவில் அச்சுப்பணி நிறைவேறி முதலாவதாக வெளிவந்து விட்டது. கையெழுத்துப்படியில் எழுதியிருந்த வரிசை எண் பற்றிய குறிப்பை அச்சுப்படியைப் பார்த்துத் திருத்தும் வாய்ப்பே திருமடத்திற்குக் கிடைத்திருக்காது. (இந்த வரிசை எண் முரண்பாடு பற்றிய செய்தி இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவிற்காக மீண்டும் ஒருமுறை பழம் பதிப்புகளைத் தேடி ஆராய்ந்த போது அறியப் பெற்றது.)

பற்பல பதிப்புகளையும் தேடித் தொகுத்துக் காலவரிசைப் படுத்திப் பார்க்கும் போது இந்தத் தோத்திரப் பிரபந்தம், பிள்ளைத் தமிழ் ஆகியவற்றின் வரிசை எண்கள் முறையே 92, 91 ஆக உள்ளன. மேலாய்வில் இதுவரை கிடைக்காத பழம்பதிப்புகள் கிடைத்து மறுபடியும் காலவரிசைப்படி எண்கள் தரப்படும் போது இந்த

எண்கள் கூடலாமே தவிரக் குறைய வாய்ப்பில்லை. இதனால் இந்தப் பதிப்புகளில் வரிசை எண்கள் முறையாகக் கணக்கிட்டுப் பார்த்துத் துல்லியமாகக் கொடுக்கப்படாமல் ஏதோ உத்தேசமாகத் தரப்பட்டுள்ளன என்பது உறுதியாகிறது.

இ. 69, 75, 98, 153 ஆகிய வெளியீட்டெண்கள் இரண்டிரண்டு பதிப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய குளறுபடிகளை எல்லாம் நீக்கிச் சிரவை யாதீனத்தின் பதிப்பு வரலாற்றைச் சற்றும் ஐயத்திற்கு இடமில்லாமல் முழுமையாகக் காணும் முயற்சியில் இந்தச் சொற்பொழிவாளர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளார். இதன் பயனாக 2001 ஆம் ஆண்டில் அன்று வரை அறியப்பட்ட பதிப்புகளின் திருந்திய பட்டியல் ஒன்று உருவாயிற்று. இந்தப் பட்டியலை உருவாக்க இயன்ற அளவு தெளிவான ஆய்வியல் நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன. இந்த இரண்டாவது பட்டியலில் 223 வெளியீடுகளின் விவரமும் பதிப்பு ஆண்டு அறியப்பெறாதனவாக மூன்று நூல்களும் இடம் பெற்றுள்ளன. இந்தத் திருந்திய பட்டியல் சிரவையாதீனத்தின் நான்காவது குருமகா சந்நிதானம் தவத்திரு குமரகுருபர சுவாமிகளின் அருளாட்சி விழாச் சிறப்பு மலரில் (8-12-2001) வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் இச்சொற்பொழிவாளருக்கு இன்னமும் மனநிறைவு உண்டாகவில்லை. 1913க்கும் 1921க்கும் இடைப்பட்ட எட்டு ஆண்டுகளில் எந்த நூலும் வெளியிடப்பெறவில்லை என்பதை ஏற்க இயலவில்லை. அதுமட்டும் அல்லாமல் எவ்வளவு துருவித் துருவித் தொகுத்த போதிலும் இன்னமும் பார்வையிற் சிக்காத பதிப்புகளும் ஒரு சில இருக்க வாய்ப்பு உண்டு. எனவே சிரவையாதீனப் பதிப்பு வரலாற்று ஆய்வு ஒரு தொடர் ஆய்வாக இன்னமும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. ஆய்விற்கு முடிவு இல்லை என்னும் கோட்பாடு இவ்விஷயத்தில் நூற்றுக்கு நூறு உண்மையாக உள்ளது.

2004 ஆம் ஆண்டு இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவிற் கான வாய்ப்பளிக்கப் பெற்ற போது மற்றுமொரு முறை சில பழைய பதிப்புகளைத் தேடிப் பெற்றுப் பார்வையிடப்பட்டதால் சில புதிய தரவுகள் கிடைத்தன. அவை இவ்வரலாற்றாய்வில் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன. இப்பொழுது கண்டறியப்பட்டுள்ள புதிய செய்திகளின் அடிப்படையில் அமைந்துள்ளதும் 249 நூல்களின் செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதும் ஆகிய இப்புதிய பட்டியல் பிற்சேர்க்கையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

*******

# சிரவையாதீனப் பதிப்பு நெறிமுறைகள்

பேரா. வையாபுரிப் பிள்ளை அவர்கள் 1946ஆம் ஆண்டில் தம் திராவிட மொழிகளில் ஆராய்ச்சி என்னும் நூலில்,

> "பொதுப்பட நமது பதிப்புகள் குறித்து ஒருசில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். மேலைநாட்டினர் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் நூல்களைப் பதிப்பிப்பதோடு நம் பதிப்பாளர்களின் முயற்சியைச் சிறிதேனும் ஒப்பிடுவதற்கில்லை. அவசியம் வேண்டும் முன்னுரையோ, செய்யுள் முதற்குறிப்பகராதி, சொல்லகராதி, பொருளகராதி முதலியனவோ பல பதிப்புகளில் காணப்படமாட்டாது" (ப. 62)

எனக் குறிப்பிட்டுள்ளார். நூல் வெளியீட்டையே தம்முடைய தொழில்களில் ஒன்றாகக் கொண்ட பதிப்பாளர்களும், தமிழ் ஆசிரியர்களுமே இப்படி இருக்கும் போது நூல் வெளியீட்டை ஓர் இலக்கியப் பணியாகவே கருதாது, சமயச் சடங்குகளில் ஒன்றாகவே எண்ணிச் செயல்பட்டவர்களின் நிலை எப்படி இருந்திருக்கும்? தம் பணத்தைக் கொண்டு தம்மால் வணங்கப்பெறுபவரால் இயற்றப் பெற்றுள்ள "பாட்டை அச்சுப் போட்டுத் தருவது பெரிய புண்ணியம்" எனப் பலர் நினைக்கின்றனர். இந்த மனநிலையை ஊக்குவித்துச் சில சமய நிறுவனங்கள், "அக்கனவான்களின் புண்ணியப் பொருளால் புத்தகத்தை அச்சு வாகனம் ஏற்றி" உலா வரச் செய்தன. கையெழுத்துப் படியாக இருந்த நூல் ஒன்றை அச்சு ஊடகத்தின் வழிப் பல பிரதிகளாகப் பெருக்கித் தம் வட்டாரத்திற்குப் பெயரளவில் அறிமுகப்படுத்துவது மட்டுமே அவற்றின் நோக்கமாக இருந்தது. நூலை "அச்சுப் போட்டு" வெளியிட்டதோடு வேலை முடிந்து விட்டது. அந்நூலை யாராவது படிக்க வேண்டும் என்றோ, கற்பிக்க வேண்டும் என்றோ, அறிஞர்களால் ஆராயப்பெற்று இலக்கிய வரலாற்றில் இடம் பெற வேண்டும் என்றோ யாரும் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. இந்த நோக்கம் இன்மையால்தான் அச்சடித்த புத்தகங்கள் ஆய்வு நிறுவனங்களுக்கோ, நூலகங்களுக்கோ அனுப்பப்படவில்லை. மதிப்பீட்டுக்காகப் பத்திரிகைகளுக்குக் கூட நூல்கள் அளிக்கப்படவில்லை. யார் நூல்களை ஆர்வத்தோடு பொருள் உணர்ந்து கற்பார்களோ அவர்களுக்குப் புத்தகங்களைப்

பற்றிய செய்தியே சென்றடையாது. யாருக்கு நூல்கள் கிடைக்கின்றனவோ அவர்கள் முறையாகப் படிக்க மாட்டார்கள். இதுதான் உண்மையான நிலை. இது சமய நிறுவனங்களின் தவறு அன்று; அவற்றின் சூழல் அத்தகையது.

அந்நாளைய தமிழ் நூற் பதிப்புகளைப் பார்த்தால் இந்நிலை தெற்றென விளங்கும். 100 செய்யுள்களைக் கொண்ட சிற்றிலக்கியம் ஒன்றுக்கு இருபது பேர் ஐம்பது பாடல்களில் சாத்துகவி வழங்கியிருப்பர். ஆனால் ஒரே ஒரு செய்யுள்கூட அந்நூலின் முறையான திறனாய்வாக இருக்காது. நூலாசிரியரையும் நூலையும் இயற்கை வரம்பிகந்து வானளாவப் புகழ்ந்து தள்ளியிருப்பார்கள். இவ்வாசிரியர் அகத்தியருக்கு இணையானவர்; வள்ளுவருக்குச் சமமானவர்; கம்பருக்கு நிகரானவர்; இந்நூல் தேவர்களின் அமுதம் அனையது; கலைமகளின் மணிமுடியின் நாயகமணியாக ஒளிர்கிறது என்றெல்லாம் உயர்வு நவிற்சியின் உச்சியில் நின்று பாராட்டி யிருப்பார்கள். ஆனால் அந்த நூலின் நுவல்பொருள் என்ன, தன்மை என்ன, இலக்கியத்தில் அதற்கு உரிய இடம் எது என்பன போன்ற இன்றியமையாத குறிப்புகள் அச்சாத்துகவிகளில் மருந்துக்குக்கூட இருக்காது. இந்தச் சாத்துகவிகளே புத்தகத்தின் பாதிப்பக்கங்களைச் சாப்பிட்டு விடுவதால் தேவையான ஏனையவற்றிற்கு இடம் இருக்காது. அருஞ்சொற்பொருளே சரியாகத் தரமுடியாதபோது ஏனைய ஆய்வுக் குறிப்புகளுக்கு இடம் ஏது?

அக்காலகட்டத்தின் பொதுவான இந்தச் சமயநூற் பதிப்பு நெறிக்குச் சிரவையாதீனம் விதிவிலக்காக இருக்கவில்லை. தவத்திரு கந்தசாமி சுவாமிகள், தவத்திரு இராமானந்த சுவாமிகள், வண்ணச் சரபம் தவத்திரு. தண்டபாணி சுவாமிகள் ஆகியோரின் படைப்புகளை மூலத்தில் உள்ளதை உள்ளபடி சாத்துகவிகளுடன் ஒரு பதிப்புப் பாயிரம் அல்லது முன்னுரையைச் சேர்த்து அச்சுப் போட்டு அடியார்களுக்கு வழங்கியுள்ளனர். முறையான பதிப்புரை, குறிப்புரை, செய்யுள் முதற் குறிப்பகராதி போன்ற பதிப்பு அம்சங்கள் இல்லை என்பது உண்மைதான். ஆனால் சந்தி பிரிக்காத பழைய மரபில் மூலபாடம் மிகத் தெளிவான யாப்பு வரையறையுடனும், பெரும்பாலும் அச்சுப் பிழைகளே இல்லாமலும் மிகுந்த கவனத்துடனும், பக்தி சிரத்தையுடனும், அழகான எழுத்துகளால் சிறப்பாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பதிப்புகளின் காரணமாகத் தான் சிரவையாதீனத்திற்குரிய அரிய இலக்கியச் செல்வங்கள் அழியாமல் பாதுகாக்கப் பெற்றுள்ளன என்பது மறுக்க

முடியாத உண்மை. இவ்வாறு கையெழுத்துப்படிகளாக இருந்து கறையான் வாய்ப்பட்டு மறைந்து போகாமல் மூல நூல்கள் நமக்குக் கிடைக்குமாறு அச்சிட்டு உதவிய சிரவையாதீனப் பதிப்பாசிரியர்கள் நமது வணக்கத்திற்கும் நன்றிக்கும் உரியவர்கள் ஆகிறார்கள். சுவர் பத்திரமாக இருக்கிறது; எப்பொழுது வேண்டுமானாலும் சித்திரம் தீட்டிக் கொள்ளலாம்.

சிரவையாதீனத்தின் தொடக்க காலப்பதிப்புகளில் யாப்பு, சிற்றிலக்கிய வகைகள் பற்றிய குறிப்புகள் சிற்சில இடங்களில் இலக்கிய மரபிற்கு மாறாகக் கொடுக்கப்பட்டிருக்கக் காணலாம். ஆனால் மடாலயத்தில் முறையான யாப்பு, பாட்டியல் நூல்களின் பயிற்சி ஏற்பட்ட பிறகு அத்தகைய மரபுப் பிழைகள் ஏற்படவில்லை. இச்சொற்பொழிவில் பழம் பதிப்புகளில் காணப்படுகின்ற இத்தகைய பிழைகள் ஆங்காங்கு சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. பிற்காலத்தில் இக்குறைபாடு முற்றிலும் நீங்கி விட்டது என்பது குறிப்பிடத்தக்கதாம்.

சிரவை ஆதீனத்தில் நூற்பதிப்புக்கான கட்டமைப்பு வசதிகள் எதுவுமே இருக்கவில்லை. பல நூல்கள் இருப்பினும் முறையான நூலகமாக இருக்கவில்லை. திருமடத்தின் தலைவர்களே பதிப்புப் பணிகளையும் மேற்கொண்டு செய்த வந்தனர். அச்சுப்படி, முகவுரை போன்றவற்றை எழுதுதல், மெய்ப்புத் திருத்துதல் ஆகியவற்றை யெல்லாம் ஆதீனகர்த்தர்களே செய்து வந்தனர். சமயப் பணிகள், நிர்வாகப் பணிகள், காலையிலிருந்து இரவு வரை வந்து கொண்டே இருக்கும் பலதரப்பட்ட அன்பர்களைக் கவனித்தல் ஆகிய இடையீடற்ற பணிகளுக்கு நடுவே அச்சுப்பணிகளையும் கைக்கொண்டு, பொறுப்போடு கவனித்துச் சிறப்பாக நிறைவேற்றியுள்ளனர். இவ்வாறு பல நூல்களை அழிவிலிருந்து காப்பாற்றி நிலைக்கச் செய்துள்ள சிரவையாதீனத் தலைவர்களின் திருவடிகளுக்கு இலக்கிய ஆர்வலர்களின் நன்றி மலர்கள் உரியனவாகின்றன.

மற்றொன்று பதிப்பகங்கள், ஆய்வு நிறுவனங்களைப் போலப் பதிப்பாசிரியர்கள் தாங்களே ஒரு நூலைத் தேர்ந்தெடுத்து, தம் பாணியில் பதிப்புப் பணிகளை நிறைவேற்றி அச்சகத்திற்கு அனுப்பி, அச்சுப் புத்தகத்தின் அளவையும் வடிவையும் தானே முடிவு செய்து, ஒரு முறைக்கு இருமுறை மெய்ப்புத் திருத்தி, தெளிவான பதிப்புரையுடன் வெளியிடும் நடைமுறை பெரும்பாலும் சமய நிறுவனங்களுக்கு ஒத்துவராது. ஓர் அன்பர் வந்து குறிப்பிட்ட ஒரு திருவிழாவில் குறிப்பிட்ட ஒரு தொகைக்குள் ஒரு நூலை வெளியிட

வேண்டும் என்று கேட்டுக் கொள்வார். அத்திருவிழாவிற்குப் பதினைந்து நாள்கள்தான் இருக்கும். இந்த நிலையில் பதிப்பு நெறிமுறைகளைப் பற்றிச் சிந்திக்காமல் போர்க்கால அடிப்படையில் ஒரு நூலை அச்சேற்றி விடவேண்டிய கட்டாயம் நேர்ந்து விடுகிறது. எனவே இயன்ற அளவு நல்ல முறையில் மூலத்தை மட்டும் வெளியிட வேண்டிய சூழல் ஏற்பட்டு விடுகிறது. இந்த நிலை இன்றும் ஒரு தொடர்கதை தான்.

இது உண்மைதான் எனினும் இலக்கியத்தரம் வாய்ந்த சிற்றிலக்கியங்களையும், தலபுராணங்களையும், பெருங்காப்பியங் களையும் இரண்டாவது பதிப்பாகவாவது நல்ல முறையில் வெளிக்கொணர்ந்திருக்கலாம். மாலை, பிள்ளைத் தமிழ், அலங்காரம் போன்ற சில சிற்றிலக்கிய வகைகள் இரண்டு மூன்று பதிப்புகளைப் பெற்றுள்ளன. அவையும் முதல் பதிப்பின் மறுதோன்றியாக - சில நூல்கள் முதல் பதிப்பை விடமோசமாக அமைந்துள்ளனவேயன்றிப் பதிப்புத் தரத்தில் வளர்ச்சி பெற்றுவிடவில்லை. சிரவையாதீன நூல்கள் எல்லாம் சிறந்த பதிப்புகளாக இலக்கிய அறிஞர்களின் கரங்களில் தவழ வேண்டும் என்னும் எண்ணமே ஏனோ அந்தக் காலத்தில் தோன்றவே இல்லை.

ஆனால் இன்றுநிலைமை முற்றிலும் மாறிவிட்டது. சிரவை ஆதீனத்தின் நான்காவது பட்டத்தில் அருளாட்சி செய்து வரும் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள் அவர்கள் சிரவையாதீனத் தொடர்பான நூல்கள் எல்லாம் உரையுடன் சிறந்த ஆய்வுப் பதிப்புகளாக வெளிவர வேண்டும் என விரும்புகிறார். இந்த நூல்கள் சமய உலகத்தில் மட்டுமன்றித் தமிழ் இலக்கிய அறிஞர்களுக் கிடையேயும் ஆய்வாளர்களிடையேயும் பரவ வேண்டும் எனக் கருதுகிறார். வெறும் விழைவாகக் கனவாக நின்று விடாமல் செயல் வடிவம் பெற்று இந்த எண்ணம் நிறைவேறுவதற்குரிய அடிப்படைப் பணிகளிலும் கவனம் செலுத்தி வருகிறார்.

கௌமார மடாலயத்தில் தலைசிறந்த தமிழ் இலக்கியப் பதிப்பாசிரியர்கள் உருவாக வேண்டும் எனத் திட்டமிட்டு அதற்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகளையும் முற்றிலும் இலவசமாக நடத்தி வருகிறார். ஓலைச் சுவடிகளைப் பராமரிக்கவும், படியெடுக்கவும் சுவடியியற் பயிற்சி வகுப்பு, அடிப்படை இலக்கண வகுப்பு, சிறப்பு யாப்பிலக்கண வகுப்பு எனக் கோடை விடுமுறையில் சிறப்பு வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தமிழ் இலக்கிய மரபு நன்கு பிடிபடவேண்டும் என்பதற்காகவே மாதக் கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்துள்ளார். அவ்வப்பொழுது பெரிய

கருத்தரங்கங்களும் நடத்தப் பெறுகின்றன. இதுவரை இத்தகைய மூன்று கருத்தரங்கங்களுக்கு ஏற்பாடு செய்யப் பெற்று ஆய்வு மலர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நூல்களுக்கு உரை காணவும், பதிப்பிக்கவும், முறையாக ஆய்வு செய்யவும் வாய்ப்பாக இலக்கண, இலக்கிய, சாத்திர தோத்திர நூற்படிப்புக்குத் தேவையான கருவி நூல்களைத் தொகுத்துத் தவத்திரு. சுந்தர சுவாமிகள் நூலகம் என்னும் பெயரில் சிறப்பு நூலகம் ஒன்றைக் கௌமார மடாலயத்தில் நிறுவியுள்ளார்.

சிரவையாதீனகர்த்தர் அவர்கள் தம் பல்வேறு பணிகளுக் கிடையில் இத்துறையில் இவ்வளவு பணிகளைச் செய்து வருவது சிரவை ஆதீனத்தில் அடுத்த தலைமுறையில் சிறந்த பதிப்பாசிரியர்கள் உருவாகிக் கௌமார இலக்கியங்கள் எல்லாவற்றிற்கும் தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. பதிப்புகளுக்கு நிகரான பதிப்புகளைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகத் தான்.

சுவாமிகளுடைய இந்தப் பேரார்வமும், சிரவை ஆதீனத்தில் இப்போது உள்ள வசதிகளும் மற்ற அன்பர்களால் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப் பெறுகின்றனவா என்றால் உற்சாகமாகப் பதில் கூற முடியவில்லை. சுவாமிகளின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வேகம் இல்லாவிடினும் ஓரளவு முன்னேற்றம் தெரிகிறது. தொடுவானத்தில் மங்கலாகக் கண் சிமிட்டும் நம்பிக்கை நட்சத்திரம் விரைவில் நடுவானில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் என எதிர்பார்க்கலாம்.

சிரவை யாதீன இலக்கியங்கள் என்னும் போது அவற்றில் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளின் நூல்கள் (ஏறத்தாழ 49,000 செய்யுள்கள்) தவத்திரு. இராமானந்த சுவாமிகளின் நூல்கள் (கிட்டத்தட்ட 1000 பாக்கள்), தவத்திரு. கந்தசாமி சுவாமிகளின் படைப்புகள் (ஏறக்குறைய 16,000 கவிகள்) தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகளின் ஆக்கங்கள் (சற்றொப்ப 800 பாடல்கள்) என அறுபத்து ஐந்தாயிரம் செய்யுள்களுக்கு மேல் உள்ளன. மேலும் இந்த அருளாளர்களைப் போற்றி எழுந்த நூல்களும் உள்ளன. ஆகக் கூடிச் சிரவையாதீன இலக்கியச் செய்யுட்டொகை ஒரு நூறாயிரத்தை (இலட்சம்) எட்டும். இவற்றுள் ஏறக்குறைய பாதி ஒரு முறை அச்சு வாகனம் ஏறி உள்ளது எனினும் செம்பதிப்புகளாக அமையவில்லை. ஒரு 3000 செய்யுள்கள் மட்டுமே முறையான உரையுடன் வெளிவந்துள்ளன. அவற்றிலும் ஆய்வுக் குறிப்புகளை உடைய பதிப்புகள் மிகச் சிலவே.

பத்து கம்பராமாயண அளவு நூல்கள் உரையுடனும் ஆய்வுக் குறிப்புகளுடனும் செம்பதிப்பாக வரவேண்டும். இதற்கு எவ்வளவு அறிவாற்றலும், அறிவுழைப்பும் தேவை என்பதை அறிஞர் உலகம் நன்கு அறியும். இதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும், எவ்வளவு பொருள் தேவை என எண்ணிப் பார்க்கவே மலைப்பாக உள்ளது. காலத்தைக் குறைக்கக் கணிப்பொறி இருக்கிறது; பொருளுக்குத்தான் பலவாறு முயல வேண்டியுள்ளது.

சிரவையாதீன இலக்கியங்களைப் பற்றி முன்னணித் தமிழ்ப் பேராய்வாளர்களே பெயரளவில் கூட அறியாமல் இருக்கும் இன்றைய நிலை தவத்திரு குமரகுருபர சுவாமிகளின் அருளாட்சிக் காலத்தில் முற்றிலும் மாறிவிடும் என்பதில் சற்றும் ஐயமில்லை. அப்பொன்னாள் விரைவில் விடிவதாகுக.

*******

# சிரவையாதீனப் பதிப்புகள்

சிரவணபுரக் கௌமார மடாலயம் 1907ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை சிறியதும் பெரியதுமாக நூல்களை வெளியிட்டு வருகிறது. முன்பே குறிப்பிடப் பெற்றுள்ளபடி இப்பதிப்புகள் பலவற்றில் சிரவைக் கௌமார சபை வெளியீடு என்றும், சிலவற்றில் கௌமார மடாலய வெளியீடு என்றும், சிலவற்றில் சிரவை ஆதீன வெளியீடு என்றும், மிகச் சிலவற்றில் அந்தந்த விழாக்குழுக்களின் வெளியீடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறு குறிக்கப் பெற்றிருப்பினும் அவை அனைத்தும் சிரவை ஆதீனப் பதிப்புகளே.

சிரவையாதீன வெளியீடுகளைச் செய்யுள், உரைநடை என இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம். செய்யுள் நூல்களைச் சிற்றிலக்கியம், தோத்திரம், சாத்திரம், தலபுராணம், வரலாற்றுக் காப்பியம், நீதி நூல், கையறுநிலைப் பாக்கள், பாராட்டுப் பாக்கள், பாடல் திரட்டுகள் என ஒன்பது வகையாகவும், உரைநடை நூல்களைச் சாத்திரம், வாழ்க்கை வரலாறு, கோவில் வரலாறு, ஆய்வுக் கட்டுரைகள், நினைவு மலர்கள், பொன்மொழித் தொகுப்புகள், வழிபாட்டு நூல்கள் என ஏழு வகையாகவும் பாகுபடுத்திப் பார்க்கலாம். மூலமும் உரையுமாக அமைந்த செய்யுள் நூல்கள், சிறப்பு மலர்கள் போன்றவை இருவகையான படைப்புகளையும் தன்னுள் பெற்றுள்ளன.

ஆனால் வெளியீடுகள் இத்தகைய தனித்தனியான பிரிவில் அடங்கா. மிகப் பெரும்பாலான நூல்களில் சிற்றிலக்கியமும் தோத்திரமும் கலந்திருக்கும். (தசாங்கம், ஊர்ப்பதிகம் என்பன போலத் தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாத தோத்திரப் பதிகங்கள் எல்லாம் இந்த ஆய்வில் தோத்திரம் என்றே கொள்ளப்பட்டுள்ளன. இவை இலக்கியமாகப் பயிலப்படுவதற்காக அல்லாமல் இறையடியார்களால் வழிபாடாகத் துதிக்கப்படுவதற்காகவே எழுந்தனவாதலின் இக்கோட்பாடு.) ஓரிரு வெளியீடுகளில் தோத்திரமும் உரைநடையில் சாத்திரமும் உள்ளன. எல்லாவற்றையும் தன்னுட்கொண்ட சிறப்பு மலர் போன்ற பதிப்புகளையும் சிரவையாதீனம் வெளியிட்டுள்ளது. எனவே தான் இச்சொற்பொழிவில் பதிப்புகள் அமைப்பு பொருள்வாரியாக வகைப்படுத்தப்படாமல் வரலாற்று முறையில் அவை தோன்றிய முறையிலேயே அறிமுகப்படுத்தப்படுகின்றன.

பொதுவாகப் பதிப்பு வரலாற்றில் நூல்களைப் பற்றிய செய்திகள் கூறப்படுவதில்லை. இந்த அணுகுமுறை ஆய்வாளர்களால் பரவலாக அறியப்பட்டுள்ள நூல்களுக்கு ஏற்புடையது தான். தொல்காப்பியப் பதிப்பு வரலாறு, சங்க இலக்கியப் பதிப்பு வரலாறு, கம்ப ராமாயணப் பதிப்பு வரலாறு எனக் கூறும் போது ஆய்வாளர்கள் அனைவருக்கும் அந்த நூல்களைப் பற்றித் தெரியும். எனவே அவற்றைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் சிரவையாதீன வெளியீடுகள் அறிவுலகத்திற்கு முறையாக அறிமுகப்படுத்தப் படாததால் அந்த நூல்கள் பற்றிய செய்திகள் பரவலாக அறியப்படவில்லை. ஆதலின் இந்தச் சொற்பொழிவில் இப்பதிப்பில் இடம்பெற்றுள்ள நூலைப் பற்றியும் மிகச் சுருக்கமாகப் பேசப்பட்டுள்ளது. அந்த வகையில் இப்பொழிவு சிரவை ஆதீனப் பதிப்பு வரலாற்றோடு மிகச் சுருக்கமான இலக்கிய வரலாறாகவும் அமைந்துள்ளது எனலாம்.

மடாலயத்தைச் சேர்ந்த துறவிகளோ அல்லது ஆதீன அன்பர்களோ காலமாகும் பொழுதெல்லாம் பரிபூரணப் பாக்கள் என்னும் பெயரில் சில கையறுநிலைப் பாக்களை வெளியிடுவது வழக்கம். அம்முறையில் இந்தச் சொற்பொழிவாளர் அறிந்தவரை 28 வெளியீடுகள் வந்துள. இவற்றுள் இரங்கற்பாக்களுடன் சில தோத்திரப் பாக்களும் இடம் பெறுவது உண்டு. இவை பற்றி விளக்குவதால் பெரும் பயன் இன்மையின் உரைப்பகுதியில் பேசப்படவில்லை. ஆனால் ஆதீன வெளியீட்டுப் பட்டியலில் ஒன்று விடாமல் காலக் குறிப்புடன் தரப்பட்டுள்ளன.

அவ்வாறே சிவபுராணம், கந்தரநுபூதி, விநாயகர் அகவல் போன்ற பாராயண நூல்கள் மிகச் சிறியனவாகக் கையடக்கப் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளன. அவை பற்றியும் விளக்கிக் கூறாமல் பட்டியலில் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒரு நூலின் மறுபதிப்பு பற்றிய செய்திகள் முதல் பதிப்பு பற்றிய விவரங்களுடன் சேர்த்துக் கூறப்பட்டிருப்பதோடு அந்தந்த இடங்களிலும் (காலவரிசையில் உரிய இடம்) தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நூல்கள் வேறு பதிப்பாக வெளிவந்திருந்ததால் தெரிந்த அளவு சுட்டப் பெற்றுள்ளன. அகர நிரல், ஆசிரியர் அகர நிரல், உரையாசிரியர் அகர நிரல், பதிப்பாசிரியர் அகர நிரல், சிறப்புப் பெயரகராதி எனப் பல பின்னிணைப்புகளைத் தர வேண்டும் என்னும் ஆசை இருந்தும் காலமின்மையாலும் பணிப்பளுவாலும் நிறைவேற்ற முடியவில்லை.

சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினனாகிய இந்தச் சொற்பொழிவாளன் கூறியவற்றை அவ்வாறே மறைமொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. இதிலே சில விடுபாடுகள் இருக்கலாம்; அறியாமையால் நேர்ந்த தவறுகள் இருக்கலாம். இயன்ற அளவு உண்மையாக உழைத்து, கிடைத்த தரவுகளை எல்லாம் முழுமையாகப் பயன்படுத்தி, காய்தல், உவத்தல் இல்லாத நடுநிலையில் நின்று கருத்துகள் கூறப்பட்டுள்ளன என்பது உறுதி.

**1. சண்முகமாலை**

**ஆ. . . . . ர். தவத்திரு இராமானந்த சுவாமிகள்.**

இதுவரையில் அறிந்தவற்றில் 1907ஆம் ஆண்டு வெளியாகி இருக்கலாம் எனக் கருதப்பெறும் சண்முகமாலைப் பதிப்பே சிரவை யாதீனத்தின் முதல் வெளியீடு ஆகும். இந்தப் பதிப்பு இதுவரை பார்வைக்குக் கிடைக்கவில்லை. 1913இல் வெளியிடப்பட்டுள்ள ஆத்தும ராம சரித்திரத்தில், "சண்முக மாலை என்னும் தோத்திர நூல் முன்னமே அச்சிடப்பட்டுள்ளது" (முகவுரை ப. 3) என்னும் குறிப்பு உள்ளது. 1935இல் வெளியான இந்நூலின் மூன்றாம் பதிப்பில், "இந்த அரிய துதி நூலானது இருபத்தெட்டு வருடங்களுக்கு முன் தனியாக முதற் பதிப்பு அச்சிடப்பெற்றும்" (முகவுரை ப. 4) என உள்ளதால் இதன் காலம் 1907 ஆகலாம் என ஊகிக்கப்படுகிறது. 29-11-1977 அன்று இதன் நான்காம் பதிப்பில் எழுதப் பெற்ற தலைப்பற்ற முகவுரையில் (?), "இந்நூலானது எழுபது ஆண்டுகளுக்கு முன் முதற் பதிப்பும், இராமானந்தத் திரட்டில் இரண்டாம் பதிப்பும், ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் மூன்றாம் பதிப்பும் வெளிவந்து தற்போது நான்காம் பதிப்பாக வெளிவருகிறது" (ப. 4) எனக்குறிக்கப் பெற்றுள்ளது. இதில் மூன்றாம் பதிப்பு 55 ஆண்டுகளுக்குமுன் என்பது சரி அன்று. அப்பதிப்பு வந்தது பவ வருஷம் மாசி மாதம் ஆகிய 1935ஆம் ஆண்டில் எனத் தெளிவாக அறிய முடிகிறது. இரண்டாம் பதிப்பு ஆகிய இராமானந்தத் திரட்டு வெளியான 1921ஆம் ஆண்டை நினைத்துக் கொண்டு 1977இல் 55 வருடங்கள் எனக் கூறப்பட்டு விட்டது. முதல் பதிப்பைத் தவிர ஏனைய மூன்றும் பார்க்கப் பெற்றன.

சண்முக மாலை என்பது மாலை என்னும் சிற்றிலக்கிய வடிவில் அமைந்துள்ள தோத்திர நூல் ஆகும். இப்பிரபந்தம் காப்பு வெண்பா ஒன்று, நூலாக எழுசீர் ஆசிரிய விருத்தங்கள் நூறு, வாழி விருத்தம் ஒன்று என மொத்தம் 102 செய்யுள்களால் ஆனது. நூலுக்குப்

புறம்பாகப் போற்றி விருத்தம், அடியார் வணக்கம் என இரண்டு அறுசீர் விருத்தங்கள் இடம் பெற்றுள்ளன. "சரவணா னந்தசண் முகனே" என்பது இம்மாலையின் மகுடமாக அமைக்கப்பட்டுள்ளது.

சிரவை இலக்கியங்களிலேயே பொதுமக்களிடம் மிக அதிகமாகப் பரவியுள்ளது இந்தச் சண்முகமாலை தான் எனலாம். கௌமார மடாலயத்தைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த முருகனடியார்கள் காவடி எடுக்கும் போது இந்த மாலையின் பாடல்களை ஒருவகையான நாட்டுப்புற இசையில் பாடிக்கொண்டு ஒவ்வொரு பாடல் முடிந்ததும் அரஹரா அரஹரா அரஹரோஹர என மகுடம் கூறி ஆடிப்பாடி மகிழ்வதைக் காணலாம். ஆனால் அவ்வாறு பாடியாடுகின்ற அன்பர்களில் மிகப்பலருக்கு அப்பாடல்கள் சிரவையாதீன நிறுவனர் தவத்திரு இராமானந்த சுவாமிகளால் இயற்றப் பெற்றவை என்பது தெரியாது. எனினும் விருத்தங்கள் பரவலாக வழக்கத்தில் உள்ளன.

**ஒரு செய்தி:** இந்தச் சண்முகமாலை தனியாகப் பதிப்பிக்கப் பெற்ற நான்கு பதிப்புகள் அல்லாமல் ஆதீனத்தில் மாத இதழிலும் (முந்தைய பேர் மாதாந்தர அமுதம்; இப்போது கௌமார அமுதம்) பலமுறை பகுதி பகுதியாகப் பிரசுரம் செய்யப்பட்டு வந்துள்ளது. இம்மாலையின் பாடல் ஒன்று:-

*மற்றும்ஓர் தெய்வம் உண்டுஎன நினையேன்;*
*வையகத்து ஆசையை மதியேன்;*
*பற்றிடும் உறவோர் தம்மையும் பற்றேன்;*
*பதமலர் தஞ்சம் என்று அடைந்தேன்*
*குற்றமே தினமும் கோடிசெய் திடினும்,*
*குமரனே! மனம்பொறுத்து இந்நாள்*
*சற்றுநீ தயைசெய்து என்னைஆண்டு அருள்வாய்!*
*சரவணா னந்தசண் முகனே! (5)*

முதல் பதிப்பு - 1907? பார்வைக்குக் கிடைக்கவில்லை.
இரண்டாம் பதிப்பு - 1921 இராமானந்தத் திரட்டில்
மூன்றாம் பதிப்பு - 1935 பவ.மாசி.
நான்காம் பதிப்பு - 24-1-1978.

**2. ஆத்தும ராம சரித்திரம் என்னும் தத்துவ விசாரணை முதலியன**
**ஆ. . . . ர் தவத்திரு இராமானந்த சுவாமிகள்**

14 செ.மீ 11 செ.மீ என்னும் சிறிய அளவில் 46 பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ள இப்புத்தகத்தில் ஆத்தும ராம சரித்திரம்

என்னும் தத்துவ விசாரணை எனப் பெயரிய உரைநடைப்பகுதி (24 பக்கங்கள்), பெண் விஷய வெண்பா என 11 நேரிசை வெண்பாக்கள், விந்தின் பெருமை வெண்பா என 11 வெண்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

ஆத்தும ராம சரித்திரத்திற்கு விநாயகர் காப்பு வெண்பா, சற்குருநாதர்துதி (அறுசீர் விருத்தம்), நூற்பொருள் (எண்சீர்) அவையடக்கம் (அறுசீர்) என நான்கு பாடல்கள் பாயிரமாக அமைந்துள்ளன. ஈற்றில் எழுசீர் வாழி விருத்தம் ஒன்றும் உள்ளது. இஃது ஓர் உருவகச் சிறுகதை. மனிதன் நல்லறிவை இழந்து ஐம்புலன் வசப்பட்டு உலகியல் இன்பங்களில் உழன்று இறுதியில் நரகத்தை அடைகிறான். நல்ல குருநாதரும் தூய துணையும் இறையருளும் இருந்தால் தீநெறியில் புகுந்தவர்களும் திருந்தி நன்னெறிக்கு மீண்டு உய்யலாம் என்பதே இக்கதையின் கருத்து.

பெண் விஷய வெண்பா என்பது காமத்தின் தீமையைப் புலப்படுத்தும் ஒரு பதிகம். மங்கையர்களைக் காமப்பொருளாகக் கருதினால் அவர்கள் மாயைப் பெருக்காவர்; அவர்களையே தாயாக எண்ணினால் நற்கதி பெறலாம் என்பது நூல்நுதல் பொருள். கீழ்க்கண்ட இரு வெண்பாக்களால் இப்பதிகத்தின் போக்கை உணர்ந்து கொள்ளலாம்.

**அறிவேமெய் ஆண்சொருபம்; அங்கனையார் என்றும்**
**பிறியாத மாயைப் பெருக்குஆம்; – செறிவான**
**சேர்க்கையினால் புத்தி திடம்குலைந்து மாயைஎனும்**
**வாழ்க்கைநிசம் என்றார் மகிழ்ந்து. (8)**

**மந்திரத்தில் ஆர்க்கும் அடங்காது மாதுஎனும்பேய்;**
**தந்திரத்தில் வெல்லத் தகும்கண்டாய்; – சொந்தம்உறு**
**தாய்என்று அனைவரையும் தன்மனத்துள் தங்கவைத்தால்**
**மாயாமல் வைக்கும் மருந்து (10)**

விந்தின் பெருமை வெண்பா என்பதும் காமத்தால் உள்ளத்தையும் உடலையும் சிதைத்துக் கொள்ளக் கூடாது என அறிவுறுத்தும் ஒரு பதிகம் ஆகும். சித்தர்கள், யோகியர், தாந்திரிகள் ஆகியோர் கூறுவது போல் இந்தப் பதிகமும் ஜீவசக்தியை வீணாக்காமல் சேமித்தால் ஆன்மலாபம் பெறலாம் என வலியுறுத்துகிறது.

முதல் பதிப்பு - 1913 பிரமாதீச ஆனி
இரண்டாம் பதிப்பு - 1921 இராமானந்தத் திரட்டில் உள்ளது.

### 3. இராமானந்தத் திரட்டு

**ஆ. . . . ர் தவத்திரு இராமானந்த சுவாமிகள்**

சிரவை ஆதீனத் தாபகராகிய தவத்திரு. இராமானந்த சுவாமிகளின் நூல்கள் அனைத்தும் இதில் ஒன்றாகத் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவர் முழுநேரமும் செபத்திலும் தியானத்திலும் மூழ்கி இருந்ததால் நூல்கள் அதிகமாக இயற்ற வில்லை. டெம்மி அளவில் ஒரு நூற்றுப் பத்துப் பக்கங்களில் இவர் படைப்புகள் யாவும் அடங்கி விடுகின்றன. இந்நூல் தோத்திரப்பகுதி, சாத்திரப்பகுதி என இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

தோத்திரப்பகுதி ஆறு சமயங்களுக்கும் சமயாதீதத்திற்கும் என ஏழு உட்பிரிவுகளைக் கொண்டது. ஆறு சமயங்களையும், இவற்றைக் கடந்து சமயாதீதத்தையும்,

**பரிதி ஈசன் பராசக்தி மாயவன்**
**கரிமுகன் குகன் என்னக் கவின்தரும்**
**பெரிய சற்குரு பொற்பதம் பேணுவார்**
**அரியதாள் மகரந்தம் அணிந்து உய்வாம்**

(குருபர தத்துவம் – பாயிரம் 1)

என்னும் வரிசையில் நோக்குவதும், இந்த முறையில் வழிபடுவதற்காகவே வாரத்தின் ஏழுநாள்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதுவும் வண்ணச்சரபர் வகுத்தளித்த நெறி. அதைப் பின்பற்றியே இந்தத் தோத்திரத்திரட்டு தொகுக்கப்பட்டுள்ளது. முருகப் பெருமானைப் பரம்பொருளாகக் கொள்ளும் கௌமார மடாலயத்தில் இன்றும் இந்த அறுசமய நெறியே தவறாமல் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

சூரியனைப் போற்றும் கௌமார சமயத்திற்குரியது முதலாவதாக அமைந்துள்ள பதிகம். இது ஆதித்தர் பன்னிருவர் என்னும் மரபு பற்றி பன்னிரு வெண்டளைக் கலிப்பாக்களால் இயற்றப் பெற்று ஈற்றில் திருக்கடைக்காப்புச் செய்யுள் ஒன்றைப் பெற்றுள்ளது.

அடுத்துச் சைவத்திற்காகப் பதிகம் ஒன்றும் தனிப்பாக்கள் மூன்றும் பாடப் பெற்றுள்ளன. பதிகம் பத்து அறுசீர் விருத்தங்களால் ஆனது. தனிப்பாக்கள் வெண்பாக்கள்.

மூன்றாவதாகிய சாத்தேய சமயப் பகுதியில் பல்லவி, அநுபல்லவி, சரணம் என அமைகின்ற கீர்த்தனைகள் இரண்டு

உள்ளன. பாடலின் ஈற்றில் ஆசிரியரின் பெயரைக் குறிப்பதாகிய வாக்கேய முத்திரையை உடைய இந்த இசைப்பாடல்கள் மோகனம், நாதநாமக்கிரியை ஆகிய இராகங்களில் இயற்றப் பெற்றுள்ளன.

அடுத்து வைணவத்திற்கு உரியதாக,

**வேதனைப் பயந்த நாதன்**
**விண்ணவர்க்கு அருளும் தேவன்**
**காதலாய் உருகு வோர்க்குக்**
**கதிஅருள் கமலக் கண்ணன்**
**மாதவா முகுந்தா என்போர்**
**வல்வினை அகற்றும் மாயோன்**
**பாததா மரைஎந் நாளும்**
**இதயத்துள் பதித்து வாழ்வாம்**

என்னும் அறுசீர் விருத்தம் ஒன்று மட்டும் உள்ளது.

ஐந்தாவதாகிய காணாபத்திய நெறிக்குப் பதினைந்து தனிப்பாடல்கள், பதிகம் மெஞ்ஞானக் காதல், பஞ்சகம், கீர்த்தனை ஒவ்வொன்று என ஐந்து பனுவல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் தனிப்பாடல்களில் வெண்பாக்கள் 12, அறுசீர் 2, கலித்துறை ஒன்று. இந்தப் பதிப்பில்,

**பிரண வப்பொருள் ஆகிய பெருவெளிப் பொருளே!**
**திரணம் ஆகிய சிறியனேன் சிறுமைநீங் கிடஉன்**
**சரணம் ஆகிய உபயதா மரைத்துணை சார்ந்தேன்;**
**மரண வாதனை தீர்த்தருள் வள்ளலே! அபயம்.** (ப. 10)

என்னும் ஐஞ்சீர்க் கலித்துறையைத் தவறாகக் கலிவிருத்தம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. பதிகம் அறுசீர் விருத்தங்களால் ஆனது; நூலுக்குப் புறம்பாகப் போற்றி விருத்தம் ஒன்று இணைக்கப் பட்டுள்ளது.

மெஞ்ஞானக் காதல் என்பது 32 ஈரடித்தாழிசைகளால் ஆனது. தாழிசைகள் யாவும் ஒருவகையில் அந்தாதித் தொடை பெற்றுள்ளது; ஆனால் மண்டலிக்கவில்லை. பொதுவாகப் பஞ்சகம் என்றால் ஒரே யாப்பில் அமைந்த ஐந்து பாக்கள் - பெரும்பாலும் ஒரே மகுடம் பெற்று - வருதல் மரபு. ஆனால் பஞ்சகம் எனக் குறிப்பிடப்பெற்றுள்ள இப்பனுவலோ, "மகோர்க்கட மூர்த்தி வள்ளலே எம் குரு மணியே" என்னும் மகுடம் பெற்ற நான்கு எழுசீர் விருத்தங்களோடு ஐந்தாவதாக அறுசீர் விருத்தம் ஒன்றைக் கொண்டுள்ளது. (கௌமார மடாலயத்தில் தலவிநாயகரின் திருநாமம்.

சித்திமகோர்க்கட விநாயகர் என்பதாம்; அதுவே மகுடத்தின் குறிப்பு). இந்நெறியின் ஈற்றுப் படைப்பு பியாக் இராகத்தில் அமைந்து எட்டுக் கண்ணிகளை மட்டும் கொண்ட (அதாவது பல்லவி இல்லாத) இசை உருப்படியாக அமைந்து ஈற்றுக் கண்ணியில் வாக்கேய முத்திரையைப் பெற்றுள்ளது.

தவத்திரு இராமானந்த சுவாமிகள் முருகக் கடவுளைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டவர் ஆதலின் ஆறாவதாகிய கௌமாரப் பகுதியில் மூன்று பதிகங்கள், ஒரு மாலை, பத்துத் தனிப்பாடல்கள், ஆறு கீர்த்தனைகள் என மொத்தம் 155 செய்யுள்கள் உள்ளன. முதலாவது எண்சீர் விருத்தங்களால் அமைந்த பதிக அந்தாதி. அடுத்தது கட்டளைக் கலித்துறைப் பதிக அந்தாதி. மூன்றாவதற்குப் பிடித்த பதிகம் எனப் பெயர் சூட்டப் பெற்றுள்ளது. இது, "விடவும் மாட்டேன்; விட்டாலும் பிழைபொறுக்கப் பிதாநீ தானே என்னும் மகுடம் பெற்ற பதினொரு எண்சீர் விருத்தங்களால் ஆனது.

அடுத்ததாகிய சண்முகமாலையைப் பற்றி ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது (வரிசை எண். 1) தனிப்பாடல்கள் பல்வேறு காலங்களில் இயற்றப் பெற்றனவாகப் பல்வேறு யாப்பில் அமைந்துள்ளன. ஈற்றில் உள்ள ஆறு கீர்த்தனைகளும் முறையே முகாரி, மோகனம், ஆனந்த பைரவி, கேதார கௌளம், சாவேரி, முகாரி ஆகிய இராகங்களில் அமைந்துள்ளன. அனைத்திலும் நேராகவோ குறிப்பாகவோ வாக்கேய முத்திரை அமைக்கப்பட்டுள்ளது. நான்காவது ஆகிய ஆனந்த பைரவி உருப்படி காவடிச் சிந்தாக உள்ளது.

ஆறுவகையான சமயங்களையும் கடந்ததாகப் பரம்பொருளைப் போற்றுவதும், அதனைக் குருவடிவத்தில் கண்டு வழிபடுவதும் தான் உண்மையான கௌமார சமயம். முன் கூறப்பெற்ற ஆறு சமயங்களும் - முருகவழிபாடாகிய கௌமாரம் உட்பட - குருபரத்துவம் கூறும் இந்தச் சதுர்வேத சித்தாந்த சன்மத சமயாதீத அத்துவித கௌமாரத்தின் அங்கங்கள் தான்; குருவழிபாடே முடிந்த முடிபு. இதுவே சமயாதீதம் எனப்படும்.

தோத்திரத்திரட்டின் இறுதிப் பகுதியாகிய இந்தச் சமயாதீதப் பகுதியில்தான் மிக அதிகமாக 9 பிரிவுகளில் 171 செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. இதன் முதல் பதிகம் முன்னர்க் காட்டப் பெற்ற செய்யுளைப் போல ஐஞ்சீர் அடிகளால் அமைந்த கலித்துறையால் யாக்கப்பட்டுள்ளது. ஆனால் பதிப்பில் யாப்புக் குறிப்பு 'கலிவிருத்தங்கள்' (ப. 49) எனத் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது பனுவலுக்குச் சற்குரு அந்தாதி மாலை எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஓர் அந்தாதியைச் சுட்டும் போது வேறொரு செய்யுளிலோ உரைநடையிலோ அந்தாதியாகிய பாமாலை என்னும் பொருளில் அந்தாதி மாலை என ஆளப்பட்டால் தவறில்லை; அங்கு பொதுப்பொருள். சிறப்புப் பொருளைச் சுட்டிக் காட்ட வேண்டிய கடப்பாடுடைய தலைப்பில் அந்தாதி மாலை என்பது தவறே. ஏனெனில் பாட்டியல் வகைகளின் படி அந்தாதி வேறு; மாலை வேறு. ஒரே நூலுக்கு இரண்டையும் இணைத்துக் கூறுவது பாட்டியல் மரபிற்கு மாறுபட்டதாகும். இங்கு இடம் பெற்றிருப்பது முப்பது அறுசீர் விருத்தங்கள் மண்டலித்த அந்தாதிப் பனுவலே. ஆதலால் சற்குரு அந்தாதி என்றே இது வழங்கப் பெற வேண்டும். மூன்றாவதும் பத்து பாக்களால் ஆன பதிகம். 4 மாத்திரை மாச்சீர்கள் ஐந்து 6 மாத்திரைக் காய்ச்சீர் ஒன்று ஆக ஆறுசீர்களைப் பெற்றுவரும் இந்த யாப்பை 6 மாச்சீர் ஒரு நேரசை ஆக ஏழுசீர் எனப்பிரித்து எழுசீர்த்தாழிசை எனச் சிலர் கூறுவர். இப்பதிப்பில் இவ்வாறு எழுசீர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மாதிரிக்குச் செய்யுள் ஒன்று.

**வானாய் நிலனாய் வளியாய் ஒளியாய்**
**மழையாய் யாவர்க் கும்**
**கோனாய் நின்றே கூட்டிப் பிரிக்கும்**
**கூத்தா! கொடியேற் கும்**
**ஊனாய் உயிராய் ஒளியாய் வெளியாய்**
**உருவாய் அருவாய் நீ**
**ஆனாய் என்கண் அறியா திருந்த**
**அகிதம் அறியே னே. (9)**

அடுத்தது சந்தப் பதிகம் எனப் பெயரிடப்பெற்றிருந்தாலும் ஒரே யாப்பில் அமைந்த பத்துப்பாடல்களின் தொகுப்பாகிய பதிகப் பிரபந்தம் ஆகாது. இந்தப் பத்துப் பாடல்களில் மூன்று யாப்பு வகைகள் உள்ளன. முதல் இரு செய்யுள்கள் எண்சீர்ச் சந்த விருத்தங்கள். (கந்தர் அநுபூதி யாப்பை இரட்டித்த வகை). அடுத்த மூன்று பாக்கள் திருப்புகழின் கலைகளின் அமைப்பில் நான்கு அடிகள் பெற்று வந்த வண்ணக் கழிநெடில் விருத்தங்கள். ஏனைய ஐந்தும் முறையான திருப்புகழ் யாப்பின. இப்பதிகத்தின் முதல் இரு பாக்கள் சந்த விருத்தத்திலும் மீதம் உள்ள எட்டும் வண்ண விருத்தத்திலும் அடங்கும்.

இப்பகுதியில் ஐந்தாவதாக அமைவது தயாநிதிக் கண்ணி. இப்பனுவல் தயாநிதியே என முடியும் 60 ஈரடித் தாழிசைகளால்

ஆனது. ஆறவதாகிய பதிகம் மூன்று கனிச்சீர்களும் ஒரு மாச்சீரும் ஓரடியாக வரும் சந்தக் கலிவிருத்தங்கள் பதின்மூன்றினைக் கொண்டது. இதன் யாப்புக் குறிப்பு கலித்தாழிசைகள் எனப் பதிப்பாகியுள்ளது.

**செடிசேர்உடல் தனில்மேவிய தீஆகிய பிணிஇந்**
**நொடிநேரமே அகலும்படி நோக்கால்அருள் புரிவாய்**
**அடியார்பிழை குறியான்என அகிலம்சொலும் முறையால்**
**கொடியேன் எனை ஆள்வாய்என்றன் குருவே! அடைக்கலமே (4)**

இப்பதிகத்திற்கு அடைக்கலப்பதிகம் என மிகப்பொருத்தமாகப் பெயர் அமைந்துள்ளது. ஏழாவது பலவகை யாப்புகளில் அமைந்த 18 தனிப்பாடல்கள்.

குருகீதரசம் என்னும் எட்டாவது பகுதி பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் ஞானரசத் தெம்மாங்கு, காமரசத் தெம்மாங்கு என்னும் இரு பாடல்களைப் பின்பற்றி எழுந்தது எனலாம். இவை ஆறு அடிகளைக் கொண்டு காபி ராகத்தில் அமைந்த இசைப்பாக்கள். ஒரே பாட்டின் பத்துச் சரணங்களாக அல்லது கண்ணிகளாகக் கொள்ளினும் இழுக்கின்று. ஈற்றுச் சரணத்தில், "நேசம் மிக இராமதாசனைக் கா ஐயா" என வாக்கேய முத்திரை காணப்படுகிறது.

தோத்திரப் பகுதியின் நிறைவாக அமைவது சமயாதீதக் கீர்த்தனைகள் ஆகும். இங்கு பியாக், அரிகாம்போதி, சங்கராபரணம், பூரிகல்யாணி, சௌராட்டிரம், சங்கராபரணம், காம்போதி, ஆரபி ஆகிய இராகங்களில் அமைந்த ஒன்பது இசை உருப்படிகள் உள்ளன. ஒன்பதாவது இசைப்பாடல் மங்களமாக அமைந்து தோத்திரப் பகுதியை இனிது நிறைவு செய்கிறது.

இராமானந்தத் திரட்டின் சாத்திரப்பகுதி குறள், திருஉந்தியார், பெண் விஷய வெண்பா, விந்தின் பெருமை வெண்பா, அநுபவானந்தம், தனிக்கவிகள், ஆத்தும ராம சரிதம் என ஏழு சிறு பகுதிகளைக் கொண்டது. முதலாவதாகிய குறள் பிறனில் விழையாமை, அறிவுடைமை, அதிநட்பு என்னும் தலைப்புகளில் அமைந்த 33 குறள் வெண்பாக்களாலானது.

திருவாசகத்தின் உந்தியார் பாடல்களைப் போன்று முப்பத்தாறு ஈற்றடி மிக்க ஈரடிக் கலித்தாழிசைகளைக் கொண்டது திருஉந்தியார் என்னும் இரண்டாவது பகுதி.

**ஓட்டோடு பொன்னையும் ஒக்க மதிப்போர்க்குக்**
**கூட்டாளி ஆவான்என்று உந்தீபற! (27)**

என்பது இதில் ஒரு பா.

பெண் விஷய வெண்பா, விந்தின் பெருமை வெண்பா பற்றி ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது. (ப. 20) அனுபவானந்தம் என்பது 18 ஈரடித் தாழிசைகளால் ஆனது; கருதிய பொருளை வெளிப் படையாகக் கூறாமல் சித்தர் பாடல்களைப் போலப் பூடகமாகப் பாடப்பட்டுள்ளது.

அடுத்தவீட் டுக்குவர அஞ்சும் மனம்உண்டயோர்
நடுத்தெருவில் நிற்க நாணம் ஒழிந்ததென்னே? (13)

என்பது இந்நூலின் ஒரு கண்ணி. ஆறாவதாகப் பல தலைப்புகளிலும் யாப்புகளிலும் அமைந்துள்ள 41 தனிப்பாடல்கள் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. இதில் வியப்புக்குறி என்னும் தலைப்புடன் அமைந்து "செத்த குரங்கைத் தலைமீது சூடினள் சேயிழையே" (செத்த குரங்கு - சாம் மந்தி, சாமந்திப்பூ) என முடியும் கட்டளைக் கலித்துறை மாம்பழக் கவிச்சிங்க நாவலருடையது ஆகும். தவத்திரு இராமானந்த சுவாமிகள் இணையற்ற ஆன்ம ஞானியாகவும் யோகியாகவும் விளங்கியவரேயன்றி இலக்கியக் கூறுகளைக் கொண்ட செய்யுள்களை இயற்றிய கவிஞராக அறியப்பட்டவர் அல்லர். இந்தத் தனிப்பாடல்கள் யாவும் அவருடைய வாக்குத்தானா என்பது கவனமான மேலாய்வுக்கு உரியது.

ஒருமூர்த்தி யே உலகு எங்கணும்
ஆகி ஒளிரும் மற்றை
வருமூர்த்தி ஆகக் கருதுவர்
சிந்தை மயக்கம்அல்லால்
பெருமூர்த்தி வேறுஇலை என்றுஅறி
வார்க்குப் பிறப்புஅறும்;மெய்
தரும்மூர்த்தி உண்மைக் குருமூர்த்தி
என்பது சத்தியமே. (14)

என்பது தனிப்பாடல்களுள் ஒன்று. இறுதிப் பகுதியாகிய ஆத்தும ராம சரிதம் என்னும் உரைநடை பற்றி முன்னர்ச் சுட்டப் பெற்றுள்ளது. (பக். 20)

முதல் பதிப்பு - 1921 துன்மதி வைகாசி.

### 4. இராமானந்தப் பிரதாபம்

ஆ. . . ர் விளாங்குறிச்சி சுந்தரசுவாமிகள்

தலைப்புப்பக்கம், முகவுரை, சாத்துகவிகள், சிறப்புப்பாயிரம், சருக்க அட்டவணை, பக்க எண்கள் என எல்லாக் கூறுகளாலும்

இது ஒரு தனிப்பதிப்பாக இருந்தாலும் முற்கூறப்பெற்ற இராமானந்தத் திரட்டோடு சேர்த்து ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளதால் பழைய பட்டியல்களில் தனிப்பதிப்பாக எண்ணப்படாமல் விடுபட்டுப் போய்விட்டது. இராமானந்தத் திரட்டின் முகவுரை, "இராமானந்தத் திரட்டு, இராமானந்தப் பிரதாபம், சற்குரு சரித வண்ணக் கோவை என்னும் மூன்றையும்" (ப. 6) எனத் தெளிவாகப் பிரித்துக் கூறுவதால் இது தனிப்பதிப்பாகவே கொள்ளத்தக்கது.

இந்த நூல் தவத்திரு. இராமானந்த சுவாமிகளின் வரலாற்றை 255 விருத்தப்பாக்களால் நுவலும் காப்பியம் ஆகும். இது 13 சருக்கங்களையும் நான்கு துதிப்பாடல்களையும் கொண்டது. இதன் ஆசிரியர் இராமானந்த சுவாமிகளின் முதல் சீடர்கள் நால்வருள் ஒருவராகிய தவத்திரு. சுந்தர சுவாமிகள் என்பவர் ஆவார். இவர் விளாங்குறிச்சி என்னும் சிற்றூரைச் சேர்ந்த திரு. மருதமலைக் கவுண்டர் என்பவரின் மைந்தரும், திரு. செங்கணக் கவுண்டர் என்னும் இயற்பெயர் உடையவரும் ஆவார். இவர் இல்லறத்திலிருந்து துறவு பூண்டவர். பிற்காலத்தில் கௌமார மடாலயத்திற்குச் சொந்தமாகப் பேரூரில் இருக்கும் தெற்கு நந்தவனம் என்னும் பூஞ்சோலையைப் பராமரித்து வந்ததால் தெற்கு நந்தவனம் சுந்தர சுவாமிகள் என வழங்கப்பட்டார்.

இராமானந்தர் தம் முதல் நான்கு சீடர்களுக்குச் சம்பந்தசாமி, அப்பர்சாமி, சுந்தரசாமி, மாணிக்கசாமி எனத் தீட்சா நாமம் வழங்கினார். அவ்வகையில்தான் விளாங்குறிச்சிச் செங்கணக் கவுண்டர் சுந்தரசாமி ஆனார். இவர் 1967ஆம் ஆண்டு சற்குருநாதர் திருவடியை அடைந்தார். (இவர் வேறு; சிரவை யாதீனத்தின் மூன்றாம் பட்டத்தில் பெரும்புகழுடன் வீற்றிருந்த தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள் வேறு. முன்னவர் ஆதீனத்தின் ஆரம்பகால அடியார்களுள் சிறப்பு மிக்க ஒருவர்; பின்னவர் ஆதீனகர்த்தர். இவ்வுரையில் இவ்விருவர் பெயர்களும் பலமுறை இடம் பெறுமாதலின் குழப்பத்தை நீக்குவதற்காகவே இவ்வளவு விளக்கப்படுகிறது. இனி இவர்கள் இருவரும் தெற்கு நந்தவனம் சுந்தரசுவாமிகள் எனவும், கஜபூசைச் சுந்தர சுவாமிகள் எனவும் அடைமொழி சேர்த்தே குறிப்பிடப்படுவர்.)

இராமானந்தப் பிரதாப நூலாசிரிய சுவாமிகள் தனியாகப் பெரிய இலக்கியங்கள் ஏவற்றையும் படைக்கவில்லை எனினும் நிறையச் செய்யுள்களை இயற்றியவர். எல்லா நூல்களுக்கும் மிக நீண்ட சாத்துகவிகளை இயற்றுவது இவர் வழக்கம்.

**குருப ரற்றுதி தமிழ்மிகக் குழறல்உற் றாலும்**
**சருவ மும்தெரி பெரியவர் பிழைஎணித் தணவார்;**
**மிருகம் அன்னவர் புகழினும், மிக இகழ்ந் தாலும்**
**நிரும லத்தவன் அடியர்ஓர் பொருள்என நினையார்**

என்பது இச்சிறுகாப்பியத்தின் அவையடக்கம் (15)

இந்தப் பதிப்பில் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளின் தன் வரலாற்றுக் காப்பியமாகிய குருபரதத்துவத்தின் குருமகிமை உணர்ந்த சருக்கம் (19 பாக்கள்), சமயாதீதச் சருக்கம் (30 பாடல்கள்) என்னும் இரு பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

முதல் பதிப்பு: 1921 துன்மதி வைகாசி

**5. சற்குரு சரித வண்ணக்கோவை**
**ஆ. . . . ர் தவத்திரு. கந்தசாமி சுவாமிகள்**

இதில் இராமானந்தரின் வரலாறு இரு அறுபத்துநாலு கலை வண்ணங்களிலும் ஒரு எண்கலை வண்ணத்திலும் பாடப்பட்டுள்ளது. முதல் இரண்டும் வண்ணக் குழிப்பைக் கொண்டு நடத்தலால் உபசார வழக்காக வண்ணம் எனக் கூறப்பட்டுள்ளது என்னலாம். இவை தொடங்கல்களோடு அமைந்த வண்ணப்பாவோ ஒரு பொருளின் பெருமையை மட்டும் வகுத்துக் கூறுகின்ற வகுப்போ (புயவகுப்பு, பாதாரவிந்த வகுப்பு போல) ஆகா. தெளிவான யாப்பு வரையறையின் படி இவை இரண்டும் வண்ணக்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களே ஆகும். இதன் பகுதிகளைக் கலை என வழங்குவது வண்ணத்தியல்பின்படி ஏற்புடைத்தன்று. விரிப்பிற் பெருகும். இந்த இரண்டு வண்ண விருத்தங்களும் குளகமாக அமைந்து இராமானந்தரின் வாழ்க்கையை விளக்குகிறது.

மூன்றாவது இலக்கணத்தின்படி அமைந்துள்ள சரியான வண்ணப்பா ஆகும். அருமையான துள்ளல் குழிப்பையும், தனனதன தனனதன தாத்தனா என்னும் தொங்கல் குழிப்பையும் கொண்டு இவ்வண்ணப்பா சிறப்பாக அமைந்துள்ளது. இதன் எட்டுத் தொங்கல்களையும் தனியாகக் கூட்ட,

**நசைவிரவும் அதிசயஞர் காட்சியே**
**நரர்அறிவில் அறிவரிய சீர்த்தியே**
**இசைபணிசெய் அடியர்திரு நாட்டமே**
**இறுதிநிலை பெறஅடையும் மார்க்கமே**

வசைகொள்பவ வினைஅகல வாட்டவே
　　　　வனம்மருவும் தளியதனின் நாப்பனே
திசைஅறிஞர் கடவுள்என ஏத்தவே
　　　　திகழ்குரவ! நினதடிகள் போற்றியே!

என்னும் முழுத் தொங்கல் தாழிசை உருவாகிறது. இந்த வண்ணப்பா முன்னிரு பாக்களின் தொடர்ச்சியாக அமைந்து வரலாற்றை நிறைவு செய்கிறது.

இப்பதிப்பு வரலாற்றில் இடம் பெற்றுள்ளனவற்றில் மிகப்பலவற்றை இயற்றியளித்துள்ளவர் இந்தத் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் அவர்களே.

முதல் பதிப்பு. 1921 துன்மதி வைகாசி
இரண்டாம் பதிப்பு. 1929 சுக்ல வைகாசி

(வண்ணத் திரட்டு எனப் பெயரிய நூலில்)

6. ஆத்தும ராம சரித்திரம்
　　ஆ. . . . ர் தவத்திரு இராமானந்த சுவாமிகள்

இந்நூல் பற்றி ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது (வரிசை எண். 2). இந்த மூன்றாம் பதிப்பு பார்வைக்குக் கிட்டாததால் பதிப்பு விவரங்களை அறிய இயலவில்லை.

முதல் பதிப்பு 1913 பிரமாதீச ஆனி
இரண்டாம் பதிப்பு 1921 இராமானந்தத் திரட்டில் உள்ளது.
மூன்றாவது பதிப்பு 1924 பார்வைக்குக் கிடைக்கவில்லை.

7. சிந்துத்திரட்டு
　　ஆ. . . . கள்:　1. தவத்திரு கந்தசாமி சுவாமிகள்
　　　　　　　2. திருவாமாத்தூர் தி.மு. செந்தினாயக ஐயா
　　　　　　　3. திருவாமாத்தூர் தி.செ. முருகதாச ஐயா

இவர்கள் மூவரும் முறையே இராமானந்தச் சுவாமிகள் அலங்காரச் சிந்து, பிரதாபச் சிந்து, அநுபந்தச் சிந்து என மூன்று நூல்களை இயற்ற அவை இப்பதிப்பில் நன்றாக வெளியிடப் பட்டுள்ளன.

அ. இராமானந்த சுவாமிகள் அலங்காரச் சிந்து

தவத்திரு கந்தசாமி சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ள இது காப்பு வெண்பா ஒன்று, விநாயகர் துதியாக இரண்டு சிந்துப் பாடல்கள் என மொத்தம் மூன்று பாக்களைப் பாயிரமாகப் பெற்றுள்ளது. நூல் பல்வேறு தலைப்புகளிலும் பல்வேறு

மெட்டுகளிலும் அமைந்த 22 சிந்துப் பாடல்களாலானது. இவற்றில் பெரும்பாலானவை சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துப்பாக்களின் அமைப்பில் புனையப்பட்டுள்ளன. 18, 22 ஆகிய இரு சிந்துகளில் மட்டும், "நேயம் மிக்க கந்தசாமி சொல் பாடல்கள் நேர்ந்தணியும் தோளா" எனவும், "கந்தசாமிச் சிறியேன் அன்பில் அணி கவிமுற்றிலும் உனது பதந்திடை சூடுவாய்" எனவும் ஆசிரியர் முத்திரை இடம் பெற்றுள்ளது. இச்சிந்துப் பாடல்களுக்குப்பின் இதே ஆசிரியரால் இயற்றப் பெற்ற இராமானந்த சுவாமிகள் அவதார விழாப் பதிகம் (காப்புக் கட்டளைக் கலித்துறை + 13 எண்சீர் விருத்தங்கள்) ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

## ஆ. இராமானந்த சுவாமிகள் பிரதாபச் சிந்து

திருவாமாத்தூர் தி.மு. செந்தினாயகம் ஐயாவால் இயற்றப் பெற்ற இது பாயிரமாக மூன்று சிந்துக்கவிகளையும் அதே நடையில் அமைந்து சுவாமிகளின் வரலாற்றைக் கூறும் 354 சிந்துகளையும் பெற்றுள்ளது. நூற்பயன் தனியாக, "செந்தின் மாநகரந் தனில்" என்னும் புகழ்பெற்ற காவடிச்சிந்து மெட்டில் அமைந்து இறுதியாக அறுசீர் விருத்தம் ஒன்றனையும் பெற்றுள்ளது. நூற்பயன் கூறும் சிந்துப் பாடலில் நூல்பெயர் ஆசிரியர், யாப்பு ஆகிய மூன்றும், "தண்கொள் மாதையிடம் குலாவிய செந்தினாயக தொண்டன் வாய்கொடு சந்தம்ஆர் தமிழ்ச் சிந்ததனால் மொழி தன் பிரதாபமும் ஏற்றான்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இ. இராமானந்தப் பிரதாபச் சிந்தின் அநுபந்தச் சிந்து

செந்தி நாயகம் பிள்ளை அவர்களின் மைந்தராகிய தி.செ. முருகதாச பிள்ளையால் இயற்றப்பெற்ற இப்பனுவல் பிரதாபச் சிந்திற்குப் பிறகு நிகழ்ந்த வரலாற்றைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. இந்நூலில் காப்புக் கலிவிருத்தம் ஒன்று. வெவ்வேறு மெட்டுகளில் அமைந்துள்ள சிந்துகள் நான்கு, வாழ்த்துச் சிந்து ஒன்று என மொத்தம் ஆறு பாக்கள் காணப்படுகின்றன. நான்காவது சிந்தில், "தினம் முருகதாசன் சொலும் தமிழ்க்கவி அத்தனையும் மனக் களிப்பொடுகொள் தலைவன்" என ஆசிரியர் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

நூல் பதிப்பு நெறியில் இவ்வெளியீட்டில் இரண்டு முன்னேற்றங்களைக் காண முடிகிறது. முதலாவது சிரவை (க்) கௌமார மடாலய வெளியீடு என்னும் தலைப்புக் குறியீடு; அடுத்தது நூல் இறுதியில் அச்சுப் பிழை திருத்தப் பட்டியல். இந்த முன்னேற்றத்திற்குக் காரணம் இந்நூல் அச்சிடப்பெற்ற சென்னைக்

கேசரி அச்சுக் கூடத்தின் உரிமையாளர் திரு. வை. சுந்தரமையர் ஆக இருக்கலாம். அவர் இந்நூலுக்கு ஒரு பக்கத்தில் சுருக்கமாக முகவுரை எழுதியுள்ளார். (ஆம்! அச்சக உரிமையாளர் பதிப்புப் பணியின் ஒரு பகுதியைச் செய்துள்ளார்.) அதில் இந்நூல் நுதலிய பொருள், சுவாமிகள் வாழும் மடாலயத்தின் இருப்பிடம், நூலைப் பதிப்பிக்கப் பொருள் வழங்கியவர் என்பன பற்றிய விவரங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இந்தச் சுந்தரம் ஐயர் அவர்கள் பக்தமான்மியம் உட்பட ஆதீனத்தின் நூல்கள் பலவற்றை அச்சியற்றியுள்ளார். அவற்றில் எழுத்துகள் அழகாகவும், பிழையில்லாமலும் இருப்பதோடு பக்க அமைப்புகளும் முறையாக இருக்கின்றன.

முதல் பதிப்பு 1926 அட்சய சித்திரை.

**8. சங்கராசாரிய வைபவம் (பக்தமான்மியத்தின் 24ஆவது பிரிவு)**
**ஆ. . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

பக்தமான்மியம் என்னும் பெருங்காப்பியம் அந்தப் பதிப்பில் அறிமுகப்படுத்தப்படும். நூறு கதிகளை (படலம்) உடைய அந்நூலின் 24ஆவது பகுதி ஆதி சங்கரரின் பெருமையைக் கூறும் சங்கராசாரிய வைபவம் என்பதாகும். 750 விருத்தங்களை உடைய இந்தப் பிரிவுதான் நூறு கதிகளிலும் மிகப் பெரியது. இதில் ஸ்ரீ சங்தர பகவத் பாதர் தலைசிறந்த திருமாலடியாராகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். பக்தமான்மியப் பெருநூல் முழுவதையும் (7373 விருத்தங்கள்) படிக்க வாய்ப்பு இல்லாதவர்கள் இதை மட்டுமாவது கற்றுப் பயனடைய வேண்டும் என்பதற்காகத் தனி நூலாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தனிப் பதிப்பிற்காகச் சங்கராசாரிய கதி என்னும் பெரு நூலில் உள்ள தலைப்பு மட்டும் சங்கராசாரிய வைபவம் என மாற்றப்பட்டுள்ளது. முதலில் இரண்டு பக்கங்களில் அமைந்துள்ள உபோற்காதம் (தோற்றுவாய்) இப்பதிப்பைப் பற்றிய அடிப்படைச் செய்திகளைத் தெரிவிக்கிறது. இந்நூலின் அச்சு, பக்க அமைப்பு, புத்தக அமைப்பு, கட்டு ஆகிய எல்லாம் சிறப்பாக உள்ளன. சிரவை ஆதீனத்திற்குப் பெருமை சேர்க்கும் சில பதிப்புகளில் இதுவும் ஒன்று.

முதல் பதிப்பு 1927 பிரபவ ஐப்பசி
இரண்டாம் பதிப்பு 1928 பக்தமான் மியத்தில் உள்ளது.

**9. வள்ளி நாயக மாலை, ஞானாநுபூதி**
**ஆ . . . ர் அருணகிரி நாதர்?**

இந்த நூல்களைத் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் இயற்றினார் என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை. வண்ணச் சரபம் சுவாமிகள் தம் புலவர் புராணத்தில்,

சென்று,கயி லாயவெற்பின் மேற்றிசையின்
கந்தகிரிச் சிகரத்து உற்றுப்
பொன்றுதல்உ றாமுனிவோர் பலர்வினவ
ஞானாநு பூதி பாடிற்று

(அருணகிரிநாதர் சருக்கம் 74)

என்று ஞானாநுபூதியைக் குறிப்பிடுகின்றார். அவர் கூட வள்ளிநாயக மாலை பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இவ்விரண்டையும் அருணகிரி நாதரின் வாக்காக ஏற்றுக் கொள்ள நம்புதற்குரிய சான்றுகள் தேவைப்படுகின்றன.

வள்ளி நாயகி மாலை 94 எழுசீர் விருத்தங்களால் ஆனது. வாக்கிற் கருணகிரி எனப் போற்றப்படுபவரின் படைப்புக்கு இருக்க வேண்டிய செறிவோ, மிடுக்கோ இல்லை. 18, 19ஆம் நூற்றாண்டில் யாரோ ஒருவரால் இயற்றப் பெற்றிருக்கலாம். ஞானாநுபூதி என்பதுவும் 12 எழுசீர் விருத்தங்களால் ஆனது. இதில் அநுபூதி எனச் சிறப்பாக ஞானாநுபூதி என - பெயர் வழங்குமளவு நுட்பமான சாத்திரக் கருத்துகள் இல்லை.

அருணகிரிநாதரைத் திருப்பதி ஆலயத்திற்குள் புகாமல் அங்குள்ள வைணவர்கள் தடுத்த போது அவர் தொடக்கத்தில் திருமாலைப் பாடத் தொடங்கி இறுதியில் அத்தகையவர் மருகனான முருகனே என முடித்ததைக் கண்டு கதவு தானே திறந்தது என்னும் கதை, "கன்னபுர மாலே கடவுளினும் நீ அதிகம்" என்னும் காளமேகப் புலவரின் தனிப்பாடலுக்குக் கட்டப்பட்ட கதையைவிட மோசமான ஒன்று. அருணகிரிநாதர் பாடியதாக இப்போது நான்கு திருப்புகழ்ப் பாக்கள் கிடைக்கின்றன. (244-247) இவற்றில் மூன்றில் திருமாலின் சிறப்புகள் இடம் பெற்றுள்ளன. அருணகிரிநாதரை யாரும் திருவேங்கட மலையில் தடுத்ததாக வரலாறு இல்லை.

இந்தப் பதிப்பில் இந்த இரு நூல்களும் எங்கிருந்து எடுத்துப் பதிப்பிக்கப்படுகின்றன என்னும் சிறு குறிப்புக்கூட இல்லை. மாலையின் 26ஆவது செய்யுளின் ஈற்றடியை, "மாகர - டனங்களை வதைத்தோன்" எனக் காட்டி கோடிட்ட பகுதி மூலப்பிரதியில் இல்லை என அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளது. மூலப்பிரதி என்பது ஓலைச்சுவடியா? அச்சுப் புத்தகமா? அது எங்குள்ளது? ஒன்றும் தெரியவில்லை. பொதுவாக இது வரலாற்றுச் சான்றோ, இலக்கியப் பயனோ, சமயச் சிறப்போ இல்லாத போலிப்பதிப்பு.

முதல் பதிப்பு 1927 பிரபவ ஐப்பசி.

## 10. அவிநாசிப் பிரபந்தத் திரட்டு
### ஆ. . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

அவிநாசி தேவாரம் பெற்ற கொங்கேழ் தலங்களுள் ஒன்று. சுந்தரர் முதலைவாய்ப் பிள்ளையை மீட்ட தலம். தலபுராணத்தையும் நிறைய இலக்கியங்களையும் பெற்றுள்ள திருக்கோவில். சிரவைக் கந்தசாமி சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ள சிற்றிலக்கியங்களின் தொகுப்பாகிய இந்த அவிநாசிப் பிரபந்தத் திரட்டில் அவிநாசியப்பர் பதிகம், பெருங்கருணாம்பிகை அம்மன் பதிகம், கருணாம்பிகை மாலை, கருணாம்பிகை யமக அந்தாதி, கருணாம்பிகைத் திருப்புகழ்ப் பஞ்சகம், விநாயகர் முருகர் திருப்புகழ்ப் பாக்கள் ஒவ்வொன்று என ஐந்து சிற்றிலக்கியங்களும் இரண்டு தனித் திருப்புகழ்ப் பாடல்களும் அடங்கியுள்ளன. இவை அனைத்தும் பக்திச்சுவையும் இலக்கிய நயமும் மிக்க அருமையான பனுவல்கள் ஆகும்.

கருணாம்பிகை மாலை காப்புடன் நூற்றொரு கட்டளைக் கலித்துறைகளால் ஆனது; அவிநாசி வாழ் கருணாம்பிகையே என்னும் மகுடத்தை உடையது. தமிழில் இறைவியைப் போற்றும் சிறந்த மாலை இலக்கியங்களுள் இதுவும் ஒன்று என்னத் தடையேதும் இல்லை.

செந்நிறம் தோய்பவ ளக்குன்று
அனைய சிவபெருமான்
தன்நிற மங்கல நாண்நின்
களத்தில் தரித்ததனால்
நின்நிறம் கண்டத்து அணிந்தமை
ஓர்சிலர் நீல்விடம்நல்கு
அந்நிறம் என்பர் அவிநாசி
வாழ்கரு ணாம்பிகையே (10)

என்பது மாலையின் ஒரு மலர்.

கருணாம்பிகை யமக அந்தாதி காப்புடன் முப்பத்தொரு யமகக் கட்டளைக் கலித்துறைகளால் இயற்றப் பெற்றுள்ளது. முதல் செய்யுள் ஒன்றைத் தவிர ஏனைய் முப்பது பாடல்களும் ககர மோனையிலேயே அமைந்துள்ளன என்பது குறிப்பிட்டுச் சொல்லத் தக்கதாம். பிற்காலத்தில் இவ் வந்தாதி உரையுடன் பதிப்பாகி உள்ளது.

முதல் பதிப்பு 1927 பிரபவ கார்த்திகை
கருணாம்பிகை மாலை மட்டும்

இரண்டாம் பதிப்பு 16-4-1975
கருணாம்பிகையம்மன் யமக அந்தாதி மட்டும் உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

உரையாசிரியர் - புலவர் ப.வெ. நாகராஜன்

மூலம் இரண்டாம் பதிப்பு உரை முதல் பதிப்பு - 6-12-1988.

**11. மருதமலைப் பிரபந்தத் திரட்டு**
**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

இத்தொகுப்பில் மருதமலை அலங்காரம், யமக அந்தாதி, திருப்புகழ்ப் பதிகம் ஆகிய மருதமலைக்கு உரிய சிற்றிலக்கியங்களும் கணபதி என்னும் ஊரைப் போற்றுகின்ற கணபதி விநாயகர் திருப்புகழ், கணபதி யமக அந்தாதி, கணபதி வேணுகோபாலசாமி திருப்புகழ்ப் பதிகம் என்னும் மூன்றும், சிரவைக் கௌமார மடாலய முருகனை முன்னிலைப் படுத்துகின்ற வாழாப்பதிகம் என ஒன்றும், பொதுவான வேற்றெய்வ மாலை, மயில் பதிகம் என இரண்டுமாக மொத்தம் ஒன்பது பனுவல்கள் இடம் பெற்றுள்ளன. அவை அனைத்துமே பக்திச் சுவை, சாத்திரக் கருத்துகள், இலக்கிய நயம், அரிய சித்திரத் தன்மை வாய்ந்த சிறந்த சிற்றிலக்கியங்கள் ஆகும்.

மருதமலை அலங்காரம் அருணகிரிநாதரின் கந்தர் அலங்காரத்தைப் போன்றது. காப்பு, நூல், நூற்பயன் என 102 கட்டளைக் கலித்துறைகளால் ஆனது. தலம், இறைவன் ஆகிய இரண்டும் சிறப்பாகப் போற்றப் பெற்றுள்ளன. கோவை வானொலியில் இந்நூல் பற்றி ஆறு உரைகள் ஒலிபரப்பப் பெற்றதாலும், பல கட்டுரைகளிலும் பேச்சுகளிலும் எடுத்தாளப் படுவதாலும் இஃது ஓரளவு அறிமுகமான சிற்றிலக்கியம் எனலாம். பார்வைக்கு ஒரு பாடல்:-

**உன்னைஒப் பாம்உயர் வுள்ளாரும்**
**எந்த உலகிடத்தும்**
**என்னைஒப் பாம் இழி வுள்ளாரும்**
**இன்று;இவ் இருவகையால்,**
**தன்னைஒப் பாநிலை பெற்றனம்**
**யாம்;இந்தத் தன்மையினால்**
**அன்னைஒப் பாய்!உகந் தென்னைஒப்**
**பாய்மரு தாசலனே! (14)**

மருதமலை யமக அந்தாதி நூறு யமகக் கட்டளைக் கலித்துறைகளால் இயன்றது. காப்பு, நூற்பயன் என இரு யமகக் கவிகளும் வாழி வெண்பா ஒன்றும் நூலுக்குப் புறம்பாக இடம் பெற்றுள்ளன.

வேற்றெய்வ மாலை என்னும் பிரபந்தம் குறிப்பிட்ட எந்த ஒரு தலத்தையும் குறிக்கொள்ளாமல் பொதுவாக முருகப் பெருமானின் வேலாயுதத்தைப் போற்றும் முப்பது கட்டளைக் கலித்துறைகளால் இயற்றப்பெற்றுள்ளது. காப்பும், நூற்பயனும் வெண்பாக்களாக உள்ளன. வேற்றெய்வமே என்பது இதன் மகுடம்.

வாழாப் பதிகம் என்பது சிரவை கந்தசாமி சுவாமிகளின் எண்ணற்ற பதிகங்களுள் (அவை முழுவதும் இவ்வுரையில் கூறப்படப் போவதில்லை) குறிப்பிட்டுக் கூறத்தக்க ஒன்று. இந்நூல் இராமானந்த சுவாமிகளைப் போற்றுவது. திருவாசகத்தின் வாழாப்பத்தைச் சொல்லாலும் பொருளாலும் வடிவத்தாலும் அப்படியே எதிரொலிப்பது இந்த வாழாப்பதிகம் - சிரவண புரத்துறை தேவே என்னும் விளிப்பகுதி இல்லாவிட்டால் திருவாசகமாகவே மயங்க நேரும். நீங்களே பாருங்களேன்.

**பதியவைத்து அருள்நின் பதத்துணை அல்லால்**
**பற்றுநான் மற்றும்ஒன்று அறியேன்;**
**திதிபெற ஆண்டாய்! சிவபுரத் தரசே!**
**சிரவண புரத்துஉரை தேவே!**
**பிறந்தும்மீண்டு இறந்தும் கெடப்புரி மாயைப்**
**பெருமயக் கடைந்துநின் அருளை**
**மறந்துநான் இங்கு வாழ்கிலேன் கண்டாய்;**
**வருகஎன்று அருள்புரி யாயே (10)**

கணபதி யமக அந்தாதி 30 கட்டளைக் கலித்துறைகளால் ஆனது. ஓர் அன்பரின் வேண்டுகோளின்படி மிகமிக முயன்று பொருள் வலிந்து கொள்ள வேண்டிய அளவு கடுமைவாய்ந்த தடையால் இரும்புக் கடலையாக - வேண்டுமென்றே நினைந்து இயற்றப் பெற்றது.

பதிப்பு 1927 பிரபவ கார்த்திகை
மருதமலை அலங்காரம் மட்டும் உள்ளது.
இரண்டாம் பதிப்பு 15-6-1979
கணபதி வேணுகோபாலசாமி திருப்புகழ்ப் பதிகம் மட்டும் உள்ளது.
இரண்டாம் பதிப்பு 23-3-1964

**12. பக்தமான்மியம்**

**ஆ. . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

சிரவையாதீனத்தின் இலக்கியப் பணிகளின் முடிமணியாகத் திகழ்வது பக்தமான்மியப் பெருங்காவியம். வடமொழியில் சந்திர

தத்தர் என்பவர் பக்தமாலா என்னும் பெயரில் சிவனடியார்கள், திருமாலன்பர்கள், தேவதாசர்கள் ஆகிய முத்திறத்தார் பலரையும் போற்றும் ஒரு மாபெரும் காப்பியத்தை இயற்றியுள்ளார். அந்த மாபெரும் நூலின் திருமாலடியார்களைப் பற்றிய வரலாற்றை மட்டும் தமிழில் மொழிபெயர்த்துரைக்கும் அரிய காப்பியம் இது. இந்தத் தமிழ்ப் பக்தமான்மியம் நாபதாசர் முதல் துக்காராமர் வரையான 103 திருமாலடியார்களின் வரலாற்றைக் கூறுகிறது; மொத்தம் 7373 விருத்தங்களை உடையது. இவர்கள் பெரும்பாலும் வடஇந்தியாவில் அவதரித்து வடமொழி, மராத்தி, இந்தி போன்ற மொழிகளில் இலக்கியம் படைத்தவர்கள் ஆவர். இது ஒரு மொழிபெயர்ப்பே ஆனாலும் தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் புலமையாற்றலால் மூலநூல் ஒன்றைப் போன்றே அமைந்துள்ளது. இந்த ஆசிரிய சுவாமிகளின் நடையில் திரிசொல் ஆட்சி, சித்திரத் தன்மை, செறிவு, பெருமிதம் ஆகியனவற்றைக் காணலாம். பொதுவாக இச்சுவாமிகளைக் கௌடநெறிப் புலவர் எனலாம். நிதானமாகப் படித்துச் சுவைக்க வேண்டிய அருமை உடையது.

இந்தப் பக்தமான்மியத்தை அச்சிட்ட போதே இரண்டு வகையாக அச்சிட்டுள்ளனர். முதலாவது 7373 செய்யுள்களும் ஒரே புத்தகமாக அமைந்த வழக்கமான பதிப்பு. இது நீண்டநேரம் கைகளில் தாங்கிப் படிக்க முடியாத அளவு கனமாக உள்ளது.

மற்றொருவகை இரு பகுதிகளாக அமைந்த பதிப்பு. இதன் முதல் பகுதியில் 3394 பாடல்களும், இரண்டாம் பகுதியில் 3979 கவிகளும் உள்ளன. இந்த இரண்டும் கனமற்ற சிறப்புத் தாளில் அச்சிடப்பெற்றுள்ளதால் கையில் எளிமையாகத் தாங்கிக் கொள்ள இயலுகிறது.

பதிப்பு முறையிலும் இது சென்னைக் கேசரி அச்சுக் கூடச் சுந்தரம் அய்யர் அவர்களின் கைவண்ணத்தால் நன்றாக அமைந்துள்ளது.

கௌமார மடாலயத்தில் இந்தப் பக்தமான்மியத்தின் படிகள் முற்றிலும் செலவாகி விட்டன. நூலகப்படி, வழிபாட்டுப்படி, ஆவணப்படி என மூன்று நான்கு புத்தகங்களே உள்ளன. இந்த நூலை இன்றைக்குத் தேவையானபடி சந்தி பிரித்து, தெளிவான உரை, இன்றியமையாத விசேட உரை, ஆய்வுக் குறிப்புகள், பிற நூல் ஒப்பீடு, செய்யுள் முதற்குறிப்பகராதி, சிறப்புப் பெயர் அகராதி முதலியவற்றோடு கைக்கடக்கமான எட்டுத் தொகுதிகளாக அடக்க

விலையில் பதிப்பிக்க வேண்டும் எனச் சிரவையாதீன கர்த்தர் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள் அவர்கள் விழைகிறார்கள். இப்பெருங் காப்பியம் நல்ல செம்பதிப்பாக உரையோடு வெளியானால் தமிழ் இலக்கிய உலகில் சில புதிய ஆய்வுக்களங்கள் உருவாக வாய்ப்பு ஏற்படுவதுடன் பிறமொழிக் கவிஞர்கள் பலரைப் பற்றி அறிந்து கொள்ளவும் முடியும். பக்தமான்மியத்திற்கு இலக்கிய மரபு பிறழாத தெளிவுரை காணல் எளிதன்று. உண்மையான ஈடுபாடும் தெளிவான அறிவும் கடினமான உழைப்பும் இருந்தால்தான் அப்பணி செம்மையாக நிறைவேறும். தவத்திரு. குமரகுருபர சுவாமிகளின் கனவு நனவாகி, பக்தமான்மியப் பெருங்காப்பியம் வைணவத் திருத்தொண்டர் மாக்கதையாக மாநிலத்தில் உலவி வரக் குருவருளும் திருவருளும் துணைபுரிய வேண்டுவோமாக.

பதிப்பு 5-6-1928

**13. பக்தமான்மிய சாரம் என்னும் குருதோத்திர மாலை**
**ஆ. . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

கௌமாரத்தின் தலைமைக் கொள்கையாகிய குருபக்தியில் இந்நூலாசிரிய சுவாமிகள் இணையற்றவர். இதன் வெளிப்பாடாகவே பக்தமான்மியத்தில் இடம் பெற்றுள்ள சுந்தரதத்தர் முதல் துக்காராமசாமி முடிய உள்ள பாகவதர்கள் எல்லோருமே ஒப்பற்ற பரம்பொருளின் அம்சமே என்றும், தம் ஞானாசாரியராகிய ராமானந்தரும் அதுவே என்றும் கொண்டு, ஒவ்வொருவர் வரலாற்றின் இறுதியிலும் அப்பாகவதரின் வாழ்க்கைச் சுருக்கத்தைக் குறிப்பிட்டு அவரே தம் குருநாதர் என முடித்துள்ளார். இப்பாடல்களின் போக்கை அறிவதற்காக ஓர் எடுத்துக்காட்டு:-

**தனக்குச் சிறப்புஆம் பொருளைஎல்லாம்**
**தயவுஆர் கிருட்டி ணற்குஎனவே**
**சமர்ப்பித்து உருகும் சயமல்லன்**
**றனது பொருளைக் கவர்ந்திடவே**

**கனக்கும் பகையாய் அடைந்தவரைக்**
**கதும்என்று ஒழித்துப் பத்தனைமுன்**
**காத்த கருணைக் கடல்ஆம்நின்**
**கவின்ஆர் ஆடல் திறம்உணர்ந்து**

**நினக்குப் பணிசெய்து உயிர்ஆதி**
**நின்பால் அளித்துச் சுகமயமா**
**நிலைத்துத் திரியும் அறிவுஇன்றி**
**நிலைஇல் உலகப் பொருள்சிலவற்று**

எனக்குச் சொந்தம் எனக்கொடுவேட்டு
எய்க்கும் மனத்தால் இளைக்கின்றேன்
இராமா னந்தப் பெயர்கொடுஎனது
இதயத்து இலங்கும் பெருமாளே!

*(சயமல்லகதி 31)*

இவ்வாறு அமைந்த 108 பன்னிருசீர் விருத்தங்களை மட்டும் திரட்டி, கௌமார அடியார்களுக்குப் பாராயணம் செய்ய வாய்ப்பாக இருக்கும் பொருட்டுத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இது பாகவதர்களின் வரலாற்றுக் குறிப்பை உட்கொண்டிருப்பதால் பக்தமான்மிய சாரம் என்றும், குருவின் துதியாக அமைந்திருப்பதால் குருதோத்திரமாலை என்றும் பெயரிடப்பட்டுள்ளது. இந்தத் தனிப் பதிப்பிற்காகப் பாயிரம் என இரு செய்யுள்களும், நூற்பயன், வாழி என இரு விருத்தங்களும் புதியனவாக இயற்றிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

பதிப்பு 5-6-1928

### 14. இரங்கசாமிக் கவுண்டன் புதூர்த் தோத்திரத் திரட்டு
ஆ. . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்
தெற்கு நந்தவனம். சுந்தர சுவாமிகள்

இவ்வூர் கோவைக்கு வடக்கே 10 கிமீ. தூரத்தில் உள்ளதொரு சிற்றூர். அங்குள்ள முருகன் திருக்கோவிலில் 24-4-1929 அன்று நடைபெற்ற திருக்குட நீராட்டையொட்டி வெளியிடப் பெற்றது இந்தத் தோத்திரத் திரட்டு. இதில் கந்தசாமி சுவாமிகளால் இயற்றப்பெற்ற பதிகம் ஒன்றும் மாலை ஒன்றும், மற்றவரின் பதிகம் ஒன்றும் இடம்பெற்றுள்ளன.

இவற்றுள் தண்டபாணி மாலை குறிப்பிடத்தக்கது. இது கந்த புராணத்தின் சுருக்கமாக 37 எழுசீர் விருத்தங்களால் பாடப் பெற்றுள்ளது. இரங்கசாமியூர்த் தண்டபாணியனே என்பது இம்மாலையின் மகுடம் ஆகும். அடிக்கடி கந்தபுராண வரலாற்றைக் கோவையாகப் பார்க்க விழையும் அன்பர்களுக்கு இது மிகவும் பயனுள்ள சிற்றிலக்கியம்.

பதிப்பு 24-4-1929 சுக்கில சித்திரை

ஒரு செய்தி: இந்த மாலையின் மகுடத்தை மட்டும் சிரவை சார்தளித் தண்டபாணியனே எனக் கௌமார மடாலய முருகனுக் குரியதாக மாற்றிப் பல அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கப்

ஒரு பதிப்பு வெளிவந்துள்ளது. இம்மாற்றத்தைச் செய்த தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள் அதற்கேற்பக் காப்பு, வாழி என வெண்பாக்களை இணைத்துள்ளார்.

மாற்றுப் பதிப்பு 12-6-1992

நூல் வடிவம் மாறியுள்ளதாதலின் இதனை இரண்டாம் பதிப்பாகக் கொள்வதற்கில்லை.

**15. வண்ணத்திரட்டு**

**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

கலைவண்ணம் என்பது தனியானதோர் பாவகை. இதன் இலக்கணத்தைச் சுருக்கமாக,

**எட்டுக் கலையாய் இடையிட்டு எதுகையாய்**
**கட்டுக் கலைக்குமுக் கண்ணியாய்த் – திட்டத்தில்**
**தொங்கலும் எட்டாய்த் தொடைமூன்று நான்காறாய்ப்**
**பங்குபெறும் வண்ணப் பரப்பு**

**(இலக்கண சூடாமணி 44)**

எனலாம். இந்த யாப்பில் அகப்பொருள் துறை ஒன்று பாடப்பெறும் போது அப்படைப்பு அகப்பொருள் வண்ணம் என ஒரு தனிச் சிற்றிலக்கியம் ஆகிறது.

இப்பதிப்பில் தண்டபாணி சுவாமிகள் பூர்வ அவதாரக் குறிப்பு வண்ணம், நற்றாயிரங்கல் துறை வண்ணம், சரித்திர சார வண்ணம், சாத்தேய வண்ணம், இராமானந்த சுவாமிகள் சரித்திர சார வண்ணங்கள் மூன்று என மொத்தம் 7 வண்ணப் பாக்கள் உள்ளன.

முதலாவதாகிய பூர்வ அவதாரக் குறிப்பு வண்ணத்தில் வண்ணச்சரபம் சுவாமிகளின் முந்தைய ஆறுபிறப்பு வரலாறுகள் அருணகிரிநாதர் புராணத்தின்படி சொல்லப்படுகின்றன. இரண்டாவது அகப்பொருள் வண்ணமாகிய பிரபந்தம். நற்றாயிரங்கல் துறையைப் பாடும் இது தனிச் சிற்றிலக்கியமாதலின் காப்பு வெண்பா ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது தண்டபாணி சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் கலைவண்ணம். இதற்கும் தனியாகக் காப்பு வெண்பா உள்ளது. வண்ண ஆசிரியரின் பெயர் எட்டாம் கலையில், "அடிச்சிறு கந்தசாமி சொரூப சிந்தி மெய்ப்பற்றுமாறு" என

முத்திரையாக அமைந்துள்ளது. நான்காவது வண்ணத்திற்குச் சத்துரு சங்கார விஞ்ஞாபனம் என்ற சாத்தேய வண்ணம் எனத் தலைப்பிடப் பட்டுள்ளது. இதற்குப் பகைவர்களை ஒழிக்க வேண்டிச் சத்தியிடம் விண்ணப்பித்தல் எனப்பொருள். இவ்வண்ணத்தின் முதல் நான்கு கலைகளில் பார்வதியும், ஐந்தாவது ஆறாவதில் முறையே திருமகள் கலைமகளும், ஏழு எட்டில் முறையே வள்ளி தெய்வயானையரும் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளனர்.

ஐந்து, ஆறு, ஏழாவதாக அமைந்துள்ள மற்ற மூன்று வண்ணங்களைப் பற்றி ஏற்கெனவே முன்னர்ச் சற்குருசரித வண்ணக் கோவைப் பதிப்பு வரலாற்றில் (வரிசை எண் 5) சுட்டப் பட்டுள்ளது.

பதிப்பு 1919 சுக்கில வைகாசி

### 16. இரத்தினாசலப் பிரபந்தத் திரட்டு
### ஆ. . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

கோவையிலிருந்து சத்தியமங்கலம் செல்லும் பெருவழியில் 12 கி.மீ. தொலைவில் ஒரு குன்று உள்ளது. அது உலக வழக்கில் சரவணம்பட்டிக் கரடு என்றும், சமய இலக்கியத்தில் இரத்தினகிரி (மணிக்குன்று, மணிக்கல்) என்றும் வழங்கப்படும். இக்குன்றின்மேல் கொலுவிருக்கும் குமரனைப் போற்றுவன இப்பதிப்பில் உள்ள பிரபந்தங்கள். இத்திருக்கோவில் நூலாசிரிய சுவாமிகளின் அபிமானத் தலமாதலின் இந்த இலக்கியங்கள் பக்திச் சுவையும் இலக்கிய நயமும் உணர்ச்சி வெளிப்பாடும் மிக்கனவாக அமைந்துள்ளன.

நூலாசிரியரால் பற்பல சமயங்களில் தனித்தனியாக இயற்றப் பெற்றிருந்த இத்தலவிநாயகர் பதிகம், குமாரக்கடவுள் திருப்புகழ்ப் பதிகம், குருமணிமாலை, சந்நிதி முறையீடு, யமக அந்தாதி ஆகிய ஐந்து பனுவல்களும் இப்பதிப்பில் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

குருமணிமாலை ஓர் அரிய தோத்திர நூலாக அமைந்துள்ளது. காப்பும் நூலுமாக நூற்றொரு எழுசீர் விருத்தங் களும், நூற்பயன் வெண்பா ஒன்றும் அடங்கியது இந்த மாலை இலக்கியம். இரத்தின கிரிவாழ் சிற்குணா! சற்குருமணியே" என்னும் மகுடத்தைக் கொண்டது. அடுத்ததாகிய சந்நிதி முறையீடு 110 (காப்பு 1 + நூல் 108 + நூற்பயன் 1) கட்டளைக் கலித்துறைகளால் யாக்கப் பட்டுள்ளது. இப்பிரபந்தம் அந்தாதியும் மாலையும் அல்லாத முத்தகச் செய்யுட்கோவை ஆகும். இதில் உள்ள பல செய்யுள்கள் சுவாமிகளின் பன்னூற் பயிற்சியைக் காட்டுமாறு அமைந்துள்ளன. இந்த இலக்கியத்தில் ஆசிரிய சுவாமிகளின் தன்னுணர்ச்சிப் பாடல்களை ஏனையவற்றிலும் மிகுதியாகக் காணலாம்.

சத்திக்கும் பல்கலை கற்றெதிர்-
வாருடன் சண்டையிட்டுப்
புத்திக் குழப்பம் அடைந்து அலை-
வீர்!இது யுத்திஅன்றே;
முத்திக்கு வித்துஎனும் நம்குரு
நாதன் முதிர் அருளோடு
எத்திக்கும் போற்ற மணிவெற்பில்
உற்றனன்; எண்ணுமினே! (27)

திருவேங்கடத்து அந்தாதியின் "சித்திக்குவித்து அதுவோ" என்னும் செய்யுள் (33) நினைவில் ஓடுகிறதுதானே!

இந்த இரத்தினகிரிக்குரிய மற்றொரு பிரபந்தம் யமக அந்தாதி. காப்பு, நூல், பயன் ஆகிய 102 கட்டளைக் கலித்துறைகளும் அடி முதல் மடக்கு என்னும் சொல்லணி அமைந்த யமகக் கவிகளே.

பதிப்பு 1929 சுக்கில வைகாசி

**17. இரத்தினாசல யமக அந்தாதி**
**ஆ. . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

மேலே கூறப்பெற்றுள்ள யமக அந்தாதி மட்டும் தனிப்புத்தகமாகவும் முற்பதிப்புடனேயே வெளியிடப்பட்டுள்ளது.

பதிப்பு 1919 சுக்கில வைகாசி

**18. இராமானந்த சுவாமிகள் ஜாதகத் திரட்டு**
**நாடி நூல் திரட்டு.**

இந்த நூலின் இறுதியில் நூல் வரலாறு தரப்பட்டுள்ளது. அது வருமாறு:- "ஸ்ரீகந்தர்நாடி, காக்கையர் நாடி, சிவ சிந்தாமணி என்னும் மூன்று சோதிட நூல்களிலும் இந்த ஸ்ரீ இராமானந்த சுவாமிகளது திவ்விய சரித்திர சாரமாய்க் கூறப்பட்டுள்ள கவிகள் ஸ்ரீமான் கௌமார சோதிடம் செ. தங்கவேற்புலவர் அவர்களுடைய ஏட்டுப் புத்தகங்களிலிருந்து தேடி எடுத்து எழுதி வைக்கப்பட்டிருந்த வற்றை அன்புமிக்க உத்தமபத்தர்கள் கற்றுணர்ந்து மகிழும் வண்ணம் கோயமுத்தூருக்கடுத்த சிரவணபுரம் கௌமார சபையார் அச்சிட்டு வெளியிட்டனர்" நாடி சோதிட ஏட்டு நூல்களைப் பற்றி ஆய்வு மேற்கொள்பவர்களுக்கு இப்பதிப்பு உதவலாம்.

பதிப்பு 1919 சுக்கில ஆனி

### 19. சீடாசாரம்
#### சாத்திரத்தொகை நூல்

சீடாசாரம் என்னும் தொடருக்குச் சமய நெறியில் ஒழுகுகின்ற மாணவர்களின் (சாதகர்களின்) ஒழுக்க முறை என்பது பொருள் ஆகும். இத்தொகுப்பு நூல் சிவப்பிரகாசப் பெருந்திரட்டு என்னும் புகழ்மிக்க சாத்திரத்தொகை நூலிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற 100 செய்யுள்களை உடையது.

மூலநூல் பற்றிய விவரம், தேர்ந்தெடுத்த ஆசிரியர், தெரிவு செய்த முறை முதலிய எந்த இன்றியமையாத தகவல்களும் கொடுக்கப்படவில்லை.

பதிப்பு 1919 சுக்கில கார்த்திகை.

### 20. பக்தி விசேடத் திரட்டு
#### திரட்டியவர் - தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

இத்திரட்டு நூலில் பக்தியின் பெருமையை விளக்கும் செய்யுட்கள் வண்ணச்சரபம் சுவாமிகளின் நூல்களிலிருந்தும், பக்தமான்மியத்திலிருந்தும் தேர்ந்தெடுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன. முதற் பாகத்தில் வண்ணச் சரபரின் ஐந்து நூல்களிலிருந்து 140 செய்யுள்களும், இரண்டாம் பாகத்தில் பக்தமான்மியத்தின் 177 பாடல்களுமாக மொத்தம் 317 கவிகள் திரட்டப் பெற்றுள்ளன. இறையன்பின் ஏற்றத்தைப் பலகண்ணோட்டங்களிலும் சிறப்பித்துக் கூறுபவை இவை.

பதிப்பு 1931 பிரசோத்பத்தி ஐப்பசி

### 21. இராமானந்த சுவாமிகள் நெஞ்சுவிடு தூது
#### ஆ. . . . ர் திருவாமாத்தூர் தி.செ. முருகதாச ஐயா

இந்தத் தூதுப் பிரபந்தம் தவத்திரு இராமானந்த சுவாமிகளிடம் தன் நெஞ்சைத் தூது அனுப்புவதாக இயற்றப் பெற்றுள்ளது. பாட்டியல் மரபிற்கேற்ப இது (144 கண்ணிகளை உடையது). நேரிசைக் கலிவெண்பாவால் பாடப்பட்டுள்ளது. பொதுவாகத் தூது நூல்களின் இறுதியில் அப்பொருண்மையிலேயே அமைந்துள்ள தனி வெண்பா ஒன்று இருக்கக் காணலாம். இதில் ஈற்று வெண்பா தூதுப் பொருண்மையில் அமையாமல் பாட்டுடைத் தலைவர், நூலாசிரியர், நூற்பெயர் ஆகியவற்றைக் கூறி நூற்பயன் உரைப்பதாக அமைந்துள்ளது. இது தற்சிறப்புப் பாயிரம் போல

இருப்பதால் தூதுக்கு முன்னர் இடம் பெற்றால் பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

தமிழ் இலக்கியத்தின் முதல் நெஞ்சுவிடு தூதுப் பிரபந்தமாகிய உமாபதி சிவாசாரியாரின் நெஞ்சுவிடு தூது (14 ) முதல் அண்மையில் தவத்திரு முத்துக்குமாரசாமித் தம்பிரான் அவர்களால் இயற்றப் பெற்றுள்ள ஆதி குமரகுருபர சுவாமிகள் நெஞ்சுவிடு தூது வரை (20 ) ஞானாசிரியர்பால் தூதனுப்பப் பெறுவது பெரும்பாலும் நெஞ்சாகவே அமைந்துள்ளன. அனைவரும் மாலை வாங்கி வரும்படியே நெஞ்சினை ஏவுகின்றனர். ஆனால் முருகதாச ஐயாவோ, "கைந்நீறு பெற்றுக் களிப்பொடுநீ வந்திடுவாய்" என்கிறார். இது ஒரு புதுமை.

இந்தப் பதிப்பில் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் அவர்கள் எழுதியுள்ள முகவுரை தத்துவச் செறிவு மிக்க மிக அருமையானதொரு கட்டுரை ஆகும். அத்துவித கௌமார நெறி இம்முகவுரையில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. அளவில் சிறியதாக இருப்பினும் (6 பக்கங்கள்) தரத்திலும் பயனிலும் மிகப் பெரியது.

பதிப்பு 1933 ஸ்ரீமுக வைகாசி

**22. இராமானந்த சுவாமிகள் பிள்ளைத் தமிழ்**
**ஆ. . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

இந்நூலாசிரிய சுவாமிகளால் இயற்றப் பெற்றன ஆகிய ஆறு பிள்ளைத் தமிழ் நூல்களில் இதுவே முதலாவது ஆகும். நூலுக்குப் புறம்பாகப் பாயிரம் மூன்று செய்யுள்களும், ஈற்றில் நூற்பயன், வாழி, அடியார் துதி என மூன்றும் இடம் பெற்றுள்ளன. பொதுவாகவே இச்சுவாமிகளது பாடல்கள் கருத்துச்செறிவு மிக்கவை. ஞானதேசிகரைப் போற்றுவதால் போலும் இதன்நடை தத்துவக் கருத்துகள் நிறைந்து மேலும் செறிவாகி விட்டது.

பொதுவாகப் பிள்ளைத் தமிழ்ப் பாடல்களில் இடம் பெறும் இயற்கை வர்ணனை கூட இதில் காணப்படவில்லை. இது முழுக்க முழுக்கச் சாத்திரக் கருத்துகள் நிறைந்ததொரு சிற்றிலக்கியம் ஆகும்.

பதிப்பு 1934 ஸ்ரீமுக மார்கழி

**23. சண்முக மாலை (மூன்றாம் பதிப்பு)**
**ஆ. . ர் தவத்திரு இராமானந்த சுவாமிகள்**

இந்நூல் பற்றிச் சிரவை யாதீன முதல் வெளியீட்டில் (பக்.18) கூறப்பெற்றுள்ளது.

முதல் பதிப்பு 1907? பார்வைக்குக் கிடைக்கவில்லை.
இரண்டாம் பதிப்பு 1921 இராமானந்தத் திரட்டில்
மூன்றாம் பதிப்பு 1935 பவ, மாசி
நான்காம் பதிப்பு 24-1-1978

**24. கோயில் பாளையம் என்னும் கௌசைத் தலபுராணம்**
**ஆ. . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

இந்நூலாசிரியரால் இயற்றப் பெற்றுள்ள மூன்று தலபுராணங்களுள் முதலாவதும் செய்யுள் தொகையில் சிறியதும் ஆகிய தலபுராணம் இது. இந்தக் கோவில்பாளையம் கோவையிலிருந்து சத்தியமங்கலம் செல்லும் பெருவழியில் கிட்டத்தட்ட 25 கி.மீ. தொலைவில் உள்ளது. இயம தருமனால் வழிபடப் பெற்றதாகக் கருதப்படும் இத்தலம் கொங்குநாட்டுத் திருக்கடையூர் எனப் போற்றி வழிபடப்படுகிறது. இது பாயிரத்தோடு 6 படலங்களையும் 193 விருத்தங்களையும் கொண்டது.

இது வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு அன்று. பழைய புராணங்கள் எதுவும் கிடைக்காததால் செவிவழிச் செய்திகளின் அடிப்படையிலேயே இது புனையப்பட்டுள்ளது. இந்தச் செய்தியை நூலாசிரியரே இப்புராணத்தில்,

**சாமிஆம் கால காலே**
**சன்திரு விளையாட்டு எல்லாம்**
**நேமிஅம் காவோர் சொல்கை**
**நேர்ந்திடும் நிறைவுஎய் தில்லேன்;**
**பூமியில் அறிவு அறிந்தோர்**
**புகல்மொழிச் சரதம் கொண்டுஎன்**
**நாமிளிர் பெரும்பேறு எய்த**
**நவிலுவன் சிறிது மாதோ**

**(இயமதருமன் வழிபடு படலம் 1)**

(காலகாலேசன் - இத்தலச் சிவபிரான்; நேமி அம்காவோர் - நைமிச ஆரணிய முனிவர்கள்)

செய்யுள் எண்ணிக்கையில் சிறியதாக இருந்தாலும் தலபுராண இலக்கியத்தின் கூறுகள் எல்லாவற்றையும் பெற்றுத் துலங்குகிறது. நாட்டுப் படலத்தில் ஐந்திணை வளம், நகரப் படலத்தில் சித்திர கவிகள், இயமதருமன் வழிபடு படலத்தில் தோத்திரக்கவிகள், ஆங்காங்கு மூர்த்தி, தலதீர்த்தங்கள் பெருமை,

இடையிடையே சாத்திரக் கருத்துகள் என இந்தத் தலபுராணம் செறிவாக அமைந்துள்ளது.

கந்தசாமி சுவாமிகள் இத்தலத் தொடர்பாகத் தலபுராணத்தைத் தவிரக் காலகாலேச்சுரர் பதிகம், நடராசர் பதிகம், கருணாகர வல்லி மாலை, கற்பக விநாயகர் பதிகம், சண்முக மூர்த்தி திருப்புகழ்ப் பதிகம், கரிவரதராஜப் பெருமாள் பதிகம், கௌசைக் காளியம்மன் பதிகம் என ஏழு இலக்கியங்களைப் படைத்துள்ளார். அவையாவும் தலபுராணத்துடன் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இப்பிரபந்தங்களுள் கருணாகரவல்லி மாலை குறிப்பிடத் தக்கது. காப்பு, நூல் (100), போற்றி, வாழிப்பா என 103 கட்டளைக் கலித்துறைகளால் யாக்கப்பட்டுள்ளது. கௌசைக் கருணாகரவல்லியே என்பது இம்மாலையின் மகுடம் ஆகும். திருக்கடையூருக்கு அமைந்துள்ள அபிராமி அந்தாதியைப் போலக் கொங்கு நாட்டுத் திருக்கடையூராகிய கோவில் பாளையத்திற்குக் கருணாகரவல்லி மாலை அமைந்துள்ளது எனில் மிகை ஆகாது.

**பண்ணே!பண் ஒன்றும் இசையே!**
**அதனில் பயில்சுகமே!**
**விண்ணே! தனியே! தனிகண்டு**
**உருகி விழைந்து அணையும்**
**பெண்ணே!கன் னித்தகை நீங்காது**
**அனைத்தையும் பெற்ற அருள்**
**கண்ணே! மணியே! கவுசைக்**
**கருணா கரவல்லியே!** (37)

என்பது மாலையின் ஒரு மலர்.

நூலின் தகுதிக்கேற்ற பதிப்பு எனக் கூற முடியாவிட்டாலும் அதிகப் பிழைகளற்ற பயன் உள்ள நல்ல பதிப்பு.

பதிப்பு 1936 தாது ஐப்பசி

குறிப்பு: சிரவை யாதீனப் பதிப்பாகிய கொங்கு நாட்டுத் திருக்கடையூர் என்னும் உரைநடை நூல் (வரிசை எண் 102) இந்தத் தலத் தொடர்புடையது.

### 25. வெள்ளக் கிணறு இராமானந்தாஸ்ரமத் தோத்திரத் திரட்டு ஆ. . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

வெள்ளக் கிணறு என்னும் ஊர் கோவைக்கு வடக்கே துடியலூர் இரயில் நிலையத்திற்கு அருகே உள்ளது. இவ்வூரின்

பெருநிலக்கிழார் திரு. காளியப்பக் கவுண்டர் அவர்கள் இராமானந்த சுவாமிகளின் சீடராகித் தம் தோட்டத்திலேயே இராமானந்த ஆஸ்ரமம் என ஓர் அமைப்பைத் தோற்றுவித்தார். அந்த ஆசிரமத் தொடர்பாகக் கந்தசாமி சுவாமிகளால் இயற்றப் பெற்ற சுப்பிரமணியக் கடவுள் பதிகம், வேற்கடவுள் மாலை, திருப்புகழ்த் திருவாறு (ஷட்கம்), திருமுருகக் கடவுள் வடிவேல் வகுப்பு ஆகிய தோத்திர இலக்கியங்கள் இப்பதிப்பில் இடம் பெற்றுள்ளன.

வேற் கடவுள் மாலை முப்பத்தாறு எண்சீர் விருத்தங்களால் ஆனது; மிக்க சுயஞ்சோதி வடிவேற் கடவுள் மணியே" என்னும் மகுடத்தை உடையது; காப்பு வெண்பா, நூற்பயன் விருத்தம் என இரண்டு செய்யுள்களைப் புறத்துறுப்பாகப் பெற்றுள்ளது. இந்த மாலை இலக்கியத்தில் எந்தத் தலத்தைப் பற்றிய குறிப்பும் இல்லாததால் இதனைப் பொது இலக்கியமாகக் கொள்வதே தக்கதாம். நூற்பயன் மட்டும் முருகானந்த சுவாமிகளின் (வெள்ளக் கிணறு காளியப்பக் கவுண்டரின் தீட்சா நாமம்) மனத்தகத்தும் புறத்தும் வேலாயுதம் விளங்கிக் கொண்டுள்ளது என்னும் குறிப்பு காணப்படுகிறது.

வகுப்பு என்பது ஓர் அரிய வண்ணப் பாவகை. குறிப்பிட்ட ஒரு பொருளின் சிறப்பை 16, 32, 64 கலைகளைக் கொண்ட வண்ணப்பாவால் வகுத்துரைப்பது வகுப்பு ஆகும். கலம்பக உறுப்பு ஆகிய புயவகுப்பு இதுவே. அருணகிரிநாதரின் பல வகுப்புகள் மிக அருமையானவை. வண்ணச்சரபம் சுவாமிகள் மொத்தம் 108 வகுப்புகளை இயற்றியுள்ளார். கந்தசாமி சுவாமிகளும் சில வகுப்புகளை இயற்றியுள்ளார். அவற்றுள் ஒன்று இப்பதிப்பில் இடம் பெற்றுள்ள திருமுருகக் கடவுள் வடிவேல் வகுப்பு என்பது ஆகும். இது பதினாறு கலைகளால் வேலாயுதத்தின் பெருமையை வகுத்துக் கூறுகிறது. இந்த வண்ணப்பாவையும் தலக்குறிப்பு இல்லாததால் பொது இலக்கியமாகக் கொள்ளலாம்.

பதிப்பு 1937 தாது தை.

### 26. அன்னியூர்த் தலபுராணமும் தோத்திரப் பதிகங்களும்
### ஆ. . . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

இது இச்சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ள இரண்டாவது தலபுராணம். இத்தலம் கோவையிலிருந்து சத்தியமங்கலம் செல்லும் பெருவழியில் அன்னூர் என வழங்கப்படும் பெரிய ஊர். இத்தலபுராணம் பாயிரம் உட்படப் பத்துப் படலங்களையும் 400 விருத்தங்களையும் உடையது. இது வடமொழி நூலின்

மொழிபெயர்ப்பாக அமையாமல் செவிவழிச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது என்னும் செய்தி பிரமதேவன் பூசித்த படலத்தின் முதற் செய்யுளில் குறிப்பாகக் கூறப்பெற்றுள்ளது.

நாட்டுப்படலத்தில் ஐந்திணை வளம் இலக்கிய நயம் பொதுளப் புனைந்துரைக்கப்பட்டிருக்கிறது. நகரப் படலத்தில் மடக்குகள் பலவும் திரிபங்கி ஒன்றுமாகச் சித்திரக்கவிகள் இடம் பெற்றுள்ளன. இந்த மடக்குகள் அனைத்திற்கும் நூலாசிரியரே உரை இயற்றியுள்ளார். சேரன் பணி செய்படலத்தில் அம்மன்னன் துதித்ததாக அமைந்துள்ள தோத்திரப் பாக்கள் பக்திச்சுவை மிக்கவை. இந்நூலாசிரியர் காலத்தில் நடைபெற்ற விரிவான திருப்பணிகள் தலோத்தாரணப் படலத்தில் விளக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் திருக்கோயில் கட்டட உறுப்புகள், கும்பாபிடேக முறை, திருமுழுக்காட்டு மரபு, கொல்லாமையின் மேன்மை ஆகியனவற்றை எடுத்துக்காட்டியுள்ளார்.

அன்னியூர்த் தலத்தொடர்பாக நூலாசிரிய சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ள ஐந்து பதிகங்களும் ஐந்து திருப்புகழ்ப் பாக்களும் அன்னியூர்த் தலபுராண வசனமும் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. கோவை கிழார் திரு. சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்களால் எழுதப்பெற்றுள்ள அன்னியூர்ச் சிலாசாசன ஆராய்ச்சி என்னும் அருமையான வரலாற்று ஆய்வுக்கட்டுரை ஒன்று (20 பக்கங்கள்) இப்பதிப்பின் சிறப்பை உயர்த்துகிறது.

சிரவை யாதீனத்தின் சிறப்பு மிக்க பதிப்புகளுள் இந்த அன்னியூர்த் தலபுராணப் பதிப்பும் ஒன்று ஆகும்.

பதிப்பு 1937 ஈஸ்வர வைகாசி

**27. கணபதிப் புத்தூர் விநாயகர் தோத்திரப் பிரபந்தங்கள்**
**ஆ. . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

கணபதி என்பது இன்றைய கோவை மாநகராட்சியின் ஒரு பகுதி. அப்பகுதியில் பல ஆலயங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றாகிய பிரசன்ன விநாயகர் கோவிலைப் பற்றிய பதிகமும் மாலையும் இவை. பிரசன்ன விநாயகர் மாலை 36 எண்சீர் விருத்தங்களால் ஆனது; கணபதிப் புத்தூர்க் கண் சார் இசை ஆலயம் கொள் பிரசன்ன விநாயகனே" என்பது இதன் மகுடம்; காப்பு வெண்பா, நூற்பயன் விருத்தம் தனியாக அமைந்துள்ளன.

பதிப்பு 19-8-1937 ஈஸ்வர ஆனி

கணபதி வேணுகோபாலசாமி திருக்கோயில் கும்பாபிஷேக நினைவு மலரில் இரண்டாம் பதிப்பு 1964.

**28. வெள்ளியங்கிரித் தோத்திரப் பிரபந்தம்**
**ஆ. . . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

கொங்குநாட்டின் மேற்கெல்லையாக விளங்குவது வெள்ளியங்கிரி. இது பெரும்புகழ் வாய்ந்த சிவத்தலம். இம்மலையின் பெயரையே தம் இயற்பெயராகக் கொண்டவர்கள் பலர். ஏறுவதற்கரிய ஏழு மலைகளின் உச்சியில் இயற்கையாக அமைந்த குகையில் சிவபெருமான் தான்தோன்றியாக எழுந்தருளியுள்ளார். கந்தசாமி சுவாமிகள் இந்த மலையைப் போற்றி இயற்றியுள்ள விநாயகர் பதிகம், வெள்ளிக்கிரியான் பதிகம், சத்திநாயக மாலை, பஞ்சகிரித் திருப்புகழ் என்னும் நான்கு நூல்கள் இப்பதிப்பில் அடங்கியுள்ளன.

சத்திநாயக மாலை 101 எழுசீர் விருத்தங்களால் ஆனது; தனியாகக் காப்பு வெண்பா ஒன்று உள்ளது. தென்கயிலை வித்தகா சத்திநாயகனே என்பது இம்மாலையின் மகுடம். தமிழில் சிவபரமாக உள்ள தலைசிறந்த மாலை இலக்கியங்களுள் இதுவும் ஒன்று என்பதற்கு யாதோர் தடையும் இல்லை. செய்யுளின் முற்பாதி வேண்டுகோளாகவும் பிற்பாதி இறைவனின் பெருமையைப் போற்று வதாகவும் அமைந்துள்ள இம்மாலையில் பல கற்பனை நயங்கள், முந்தையோர் நூல்களின் கருத்துகள், சொல்விளையாட்டுகள் ஆகியனவற்றைப் பெற்ற பக்திரசம் மிக்கதோர் இலக்கியக் கருவூலமாக மிளிர்கிறது.

ஒரு சோற்றுப் பதமாக ஒன்று. "இறைவனே! நீங்கள் ஒளிவடிவமாக விளங்குகிறீர்கள் என்பதால் "சோதி" எனக் கூறினேன். ஒரு செய்யுளில் அடியேன் பெயர்ச்சொல்லாகச் சொன்ன சோதி என்னும் சொல்லைத் தேவரீர் ஏவல் வினையாகக் கொண்டு எளியேனைச் சோதித்து விட வேண்டாம்" என்கிறார்.

**சோதிஎன்று உன்னைத் துதித்ததற் காகச்**
**சோதியேல்; எனக்குநின் அருளை**
**ஈதி;மிக் கேழை; ஏழைபங் காளன்**
**என்றபேர் புரந்திட எண்ணாய். (67)**

ஏழை பங்காளன் என்னும் சொல்லிலும் சிலேடையும் தொனியும் கூடியுள்ளன. தீனசரண்யன் என்பது ஒரு பொருள். அடியார்களைச் சோதிக்காத அன்னையை இடப்பாதியில் பெற்றுள்ள மாதொரு பாகன் என்பது தொனி.

பதிப்பு 1938 வெகுதானிய வைகாசி

**ஒரு செய்தி**

சிரவை யாதீனத்தில் இலக்கிய ஆய்வு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. 1998ஆம் ஆண்டில் கந்தசாமி சுவாமிகளின் முப்பது சிலேடை வெண்பாக்கள் இத்தலத் தொடர்பாகக் கிடைத்தன. இதனைத் தேடிக் கண்டு பிடித்தவர் சுவடிக் கலைஞர் திரு. ஆர். கிருஷ்ணன் அவர்கள்.

முற்கூறப்பெற்ற நான்கு பனுவல்களோடு இந்த வெள்ளி வெற்புச் சிலேடை வெண்பாவையும் சேர்த்துப் ப.வெ. நாகராஜன் அவர்களின் குறிப்புரையுடன் மதிப்பிற்குரிய அருட்செல்வர். உயர்திரு நா. மகாலிங்கம் அவர்கள் கோவை இராமானந்த அடிகளார் பவுண்டேஷன் என்னும் தம் அறக்கட்டளையின் வழி நல்ல பதிப்பாக வெளியிட்டுதவியுள்ளார். இந்தப் பதிப்பைச் சிரவையாதீனப் பதிப்பாகக் கருதமுடியாதெனினும் நூல்கள் பற்றிய தகவலுக்காக இச்செய்தி இங்கு தரப்படுகிறது.

**29. பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ்**
**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

கற்பனைக் களஞ்சியம் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் தங்கையின் கணவரும், முக்தி வீட்டின் நான்கு வாயில்களைப் போன்று நான்கு அரிய சாத்திரங்களை அருளிச் செய்தவரும் ஆகிய திருப்பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் மேல் பாடப்பட்டது இந்தப் பிள்ளைத்தமிழ். இது இச்சுவாமிகளால் இயற்றப் பெற்ற இரண்டாவது பிள்ளைத்தமிழ்.

இது ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய கூறுகளை முழுமையாகப் பெற்றிருப்பதோடு சாத்திரக் கருத்துகள் மிகுந்து சொற்செறிவோடு அமைந்துள்ளது.

**30. பேரூர்ப் பச்சை நாயகி பிள்ளைத் தமிழ், மாலை**
**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

தேவார வைப்புத் தலமாகிய பேரூர் இச்சுவாமிகளுக்கு முதன்மையான அபிமானத்தலம் ஆகும். இவர் மொத்தம் 51 தலங்களுக்குப் பிரபந்தங்கள் பாடியுள்ளார். இவரால் மிக அதிகமான பனுவல்களைப் பெற்ற தலம் (14 பிரபந்தங்கள், 1203 செய்யுள்கள்) இதுவே. சிறப்பித்துக் கூற வேண்டிய மற்றொரு செய்தி யாதெனில் இந்தப் பதினான்கில் எந்த ஒரு பிரபந்தத்தையும் பிறர் இயற்றிக்

கொடுக்குமாறு வேண்டாமல் சுவாமிகளே தம் விருப்பத்தால் பாடியன ஆகும்.

இத்தலத்தில் இறைவியின் திருநாமம் பச்சைநாயகி. இந்த அம்மையைப் போற்றுவன பிள்ளைத் தமிழும் மாலையும். கந்தசாமி சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ள ஆறு பிள்ளைத் தமிழ் நூல்களுள் இது ஒன்றுதான் பெண்பாற் பிள்ளைத்தமிழ். நல்ல கற்பனைகளும் அருமையான சொல்லாட்சிகளும் நிறைந்த வளமான பிள்ளைத் தமிழ் இது.

பேரூர்ப் பச்சை நாயகியம்மன் மாலை என்பது 101 கட்டளைக் கலித்துறைகளால் இயற்றப் பெற்றுள்ளது. காப்பு, வாழ்த்து என மேலும் இரு கட்டளைக் கலித்துறைகள் நூலுக்குப் புறம்பாக அமைந்துள்ளன. பேரைவாழ் பச்சை நாயகியே என்பது இம்மாலை யின் மகுடம். பேரை என்பது பேரூர் என்பதன் மரூஉ. பக்திச் சுவையும் இலக்கியத்தரமும் மிகுந்து நவில்தோறும் நூல்நயம் காட்டுகின்ற அரிய பிரபந்தம் இது. இதில் உள்ள கற்பனைகள் பேருவகை தருவன ஆகும்.

**பித்தன்என்று ஓதிய ஆரூரன்**
**மீதில் பிழைஉளதோ**
**ஒத்த குலப்பெண் மணம்போக்கி**
**வேசை உதவுபெண்ணின்**
**கைத்தலம் பற்றுவித்து அங்குஅவள்**
**ஊடல் களையும் ஒற்றாய்**
**நத்தம்முற்று உற்றுஅலைந் தால்பேரை**
**வாழ்பச்சை நாயகியே (10)**

நத்தம் - இரவு

இத்தகையன மட்டும் அன்றி,

**தேனே! மதுரச் செழும்கனி-**
**யே!சிற் அகப்பொலிவுஆர்**
**வானே! மவுன வெளியே!**
**வெளியில் வளர்நிறைவே!**
**ஊனே! எனதுஉயி ரே!இன்பம்**
**ஆர்ஒளிக்கு உள்ஒளியே!**
**நானே உனைநம்பி னேன்-பேரை**
**வாழ்பச்சை நாயகியே (45)**

என்பதைப் போன்ற உருக்கமான பாடல்களும் இம்மாலையில் இடம் பெற்றுள்ளன.

முதல் பதிப்பு 1940 பிரமாதி மாசி மகம்
இரண்டாம் பதிப்பு பிள்ளைத் தமிழ் மட்டும் 1974

இந்தப் பேரூர்ப் பச்சைநாயகி மாலையை ஆய்வுப் பொருளாகக் கொண்டு திருமதி. வெ.அ. பாக்கியலட்சுமி காவேரி என்னும் ஆய்வாளர் கோவைப் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஆய்வியல் நிறைஞர் (எம்பில்) பட்டம் பெற்றுள்ளார்.

**31. கணபதி அத்தனூரம்மை மாலை**
**ஆ. . .ர்கள் 1. தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**
**2. வி.நா. மருதாசலக் கவுண்டர்**

கணபதி என்னும் பகுதியில் அத்தனூரம்மன் காங்கயம் பகுதி அத்தனூர் என்னும் ஊரிலிருந்து கொண்டுவரப் பெற்ற தெய்வம். இக்கோவில் பால வேளாளர்க்கு முதல் உரிமை உடையது. இந்த அத்தனூரம்மை துர்க்கையின் அமிசமாகக் கருதப்படுகிறார்.

கந்தசாமி சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ள மாலை 34 எழுசீர் விருத்தங்களால் இயற்றப் பெற்றுள்ளது. கணபதி ஊர்வாழ் அத்தனூர் அம்மைஎம் தாயே என்பது இதன் மகுடம்.

வி.நா. மருதாசலக் கவுண்டர் அவர்களால் இயற்றப்பெற்ற அத்தனூர் அம்பிகை மாலை, பரதேவி சந்தப் பஞ்சகம் என்னும் இரு சிற்றிலக்கியங்கள் இப்பதிப்பில் சேர்க்கப் பெற்றுள்ளன. இந்த அம்பிகை மாலை "கணபதி அத்தனூர் அம்பிகையே" என்னும் மகுடத்தைக் கொண்ட 33 கட்டளைக் கலித்துறைகளால் ஆனது.

பதிப்பு 1941 விக்ரம தை

இரண்டாம் பதிப்பு, முதல் மாலை மட்டும் 1964. கணபதி வேணுகோபாலசுவாமி திருக்கோவில் கும்பாபிஷேக நினைவு மலரில் உள்ளது.

**32. திருப்பேரூர்த் தோத்திரப் பிரபந்தத் திரட்டு**
**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

மேலைச் சிதம்பரம் என வழங்கப்படுவதும், சுந்தரமூர்த்தி நாயனாரால், "பீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றாம் அன்றே" எனப் போற்றப் பெற்றதுமாகிய பேரூரைப் பற்றி ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது (வரிசை எண். 29, 30). இப்பிரபந்தத் திரட்டில் கந்தசாமி சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ள ஏழு பதிகங்களும், பட்டி நாயக மாலை என்னும் சிறப்புமிக்கதொரு பிரபந்தமும் இடம் பெற்றுள்ளன.

இத்திருப்பேரூருக்குத் திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு கச்சியப்ப முனிவரால் இயற்றப்பெற்ற திருப்பேரூர்ப் புராணம் என்னும் மிகச் சிறப்பு வாய்ந்த தலபுராணம் ஒன்று உண்டு. சைவ இலக்கியக் கலைக்களஞ்சியமாக விளங்கும் அப்பெருங்காப்பியம் 2220 அரிய திருவிருத்தங்களால் ஆக்கியருளப் பெற்றது. அப்பெருநூலின் சாரமாக இயற்றப் பெற்றிருப்பதே இந்தப் பட்டி நாயக மாலை. இது, "போற்றியல் அரசம்பலத் திருப்பேரூர்ப் புராணத்தின் சாரசங்கிரகம் ஏற்றியல் பட்டி நாயக மாலை இன்புற முடிய" எனக் காப்புச் செய்யுளிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாலை காப்பு (1), நூல் (111), பின்னுரை (1) என மொத்தம் 113 எழுசீர் விருத்தங்களால் இயற்றப்பெற்றுள்ளது; "பேரூர்ச் சிட்டனே! பட்டிநாயகனே" என்னும் மகுடத்தை உடையது. செய்யுளின் முற்பகுதி வேண்டுகோளாகவும், பிற்பகுதி தலபுராண வரலாற்றுச் சுருக்கமாகவும் அமைந்துள்ளது. தமிழ் இலக்கிய உலகில் பெருநூல்களின் சுருக்கமாக இயற்றப் பெற்றுள்ள சிற்றிலக்கியங்களில் இந்தப் பட்டிநாயக மாலைக்குச் சிறப்பு மிக்கதோர் இடம் உண்டு

***இதம்பர னவயின்பால் ஓதியும் நம்பி***
***யின்திருப் பாட்டுஅணிந் தனை;நின்***
***பதம்பரவு எனக்குஎன் அருள்கிலை? கலிநின்***
***பண்பைமாற்று அடல்படைப் பதுவோ?***
***கதம்பர வியசூ ரன்செய்துன்பு அமரர்***
***கயிலைஉற்று ஓதநம் மேலைச்***
***சிதம்பரம் புகும்என்று உரைத்தருள் பேரூர்ச்***
***சிட்டனே! பட்டிநா யகனே! (26)***

என்பது மாலையின் ஒரு மணி.

பதிப்பு 1941, விக்கிரம, பங்குனி

## 33. குருந்த மலைப் பிரபந்தத் திரட்டு
### ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

குருந்த மலை என்பது கொங்கு நாட்டின் புகழ்மிக்க குன்றுதோறாடல் தலங்களுள் ஒன்று. கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் பெருவழியில் உள்ள காரைமடை என்னும் வைணவத் திருத்தலத்திற்கு மேற்கில் 5 கி.மீ. தொலைவில் இச்சிறு குன்று உள்ளது. அழகான இந்தக் குன்றத்தின் மேல் குமரப் பெருமான் குழந்தை வேலாயுதன் என்னும் திருநாமம் தாங்கி

எழுந்தருளியுள்ளார். கந்தசாமி சுவாமிகளின் அபிமானத் தலங்களுள் இதுவும் ஒன்று.

இந்தப் பிரபந்தத் திரட்டில் குருந்தாசலப் பதிற்றுப் பத்தந்தாதி, திருப்புகழ்ப் பதிகம் என்னும் இரண்டு பனுவல்கள் மட்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. பாட்டியல் மரபின்படி பத்துப்பாடல்கள் ஒரு யாப்பாகப் பத்து யாப்புகள் கொண்ட நூறு பாடல்கள் மண்டலித்த அந்தாதியாக அமைந்துள்ளது.

பாவம் நீங்கப் பல்பரி காரநூல்
ஆவல் கொண்டுமிக்கு ஆய்ந்து வருந்துவீர்!
தேவ தேவன் திருக்குருந் தாசலன்
சேவ டித்துணை சென்னியில் கொண்மினே (33)

என்பது இப்பதிற்றுப்பத்தந்தாதியின் பாடல்களுள் ஒன்று.
பதிப்பு 1942 விஷு தை

34. (சின்ன வேடன் பட்டி) உடையாம்பாளையம் பிரபந்தத் திரட்டு
ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

கோவை மாநகராட்சியின் வடமேற்குப் பகுதி உடையாம் பாளையம் ஆகும். இது சின்னவேடம்பட்டி என்னும் ஊருக்கு மேற்கில் உள்ளது. இச்சிற்றூரில் உள்ள தெய்வங்களைப் போற்றும் விநாயகர் பதிகம், வரதராஜப் பெருமாள் பஞ்சகம், மாரியம்மை மாலை, வஞ்சியம்மன் பஞ்சகம் ஆகியன பதிப்பிக்கப்பட்டுள்ளன. மாரியம்மை மாலையில் காப்பு வெண்பா ஒன்றும் நூலாக முப்பதும் நூற்பயனாக ஒன்றும் ஆக முப்பத்தொரு எழுசீர் விருத்தங்கள் உள்ளன. "உடையான் பாளையக் கோயில் மிளிர் இசை மாரியம்பிகையே என்பது இம்மாலையின் மகுடம்.

பதிப்பு 1943 சுபானு சித்திரை
இரண்டாம் பதிப்பு இப்பிரபந்தத்திரட்டு

உடையாம்பாளையாம் ஸ்ரீமாரியம்மன் பாமாலை மற்றும் பல தெய்வத் துதிகள் என்னும் பெயரில் 10-9-1992 அன்று வெளிவந்துள்ளது. ஓரிரு அருஞ்சொற்களுக்குப் பொருள் கொடுத்திருப்பது புதிய அம்சம். ஒரு நூல் வெளிவந்து ஐம்பதாண்டுகளுக்குப் பிறகு வெளிவரும் இப்பதிப்பு அச்சக வசதிகள் வளர்ச்சி பெறாத பழங்கால முதற்பதிப்பை விடப் பக்க அமைப்பு, நூலமைப்பு, முகவுரை உள்ளிட்ட அனைத்துக் கூறுகளிலும் தரம் தாழ்ந்துள்ளது. சிற்றிலக்கியத் தொகுப்புகள் எவ்வாறு பதிப்பிக்கப்படக்கூடாது என்பதற்கு இப்பதிப்பு நல்ல எடுத்துக்காட்டு.

### 35. காரைமடை இரங்கநாதமாலை

**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

காரைமடை என்பது கோவைக்கும் மேட்டுப்பாளையத் திற்கும் இடையில் உள்ள புகைவண்டி நிலையம். இங்கு இரங்கநாதப் பெருமான் என்னும் பெயரில் எழுந்தருளியுள்ள திருமாலைப் பரவும் அருமையான மாலைப் பிரபந்தம் இது. 101 எழுசீர் ஆசிரிய விருத்தங்களான் இயன்று, "காரைமடை மருவு இரங்கநாதனே சீதர மணியே" என்னும் மகுடம் பெற்று நல்ல இலக்கியத்தரத்துடன் பொலிகிறது இம்மாலைப் பிரபந்தம்.

தமிழில் வைணவ பரமான மாலை இலக்கியங்கள் ஏனையவற்றைவிட எண்ணிக்கையில் குறைவாகவே காணப் படுகின்றன. இந்தக் காரைமடை இரங்கநாதமாலை தமிழ் வைணவ மாலை இலக்கியங்களுள் மிகச் சிறந்தனவற்றுள் உடன் வைத்து மதிக்கத் தக்க நல்ல பக்தி இலக்கியம் ஆகும்.

**எல்லைதோய் கல்லில் படைக்கலம் ஆகும்**
**இரும்பினில் இழிந்து,வன் பாவத்**
**தொல்லையே பெருக்கி, நல்லவர் தமையும்**
**துன்புறுத் திடும்மனப் பகையைக்**
**கல்லைமுன் பெண்ணாப் புரிதல்போல் தொண்டர்**
**கணம்பொருந்து அன்புஉறக் கணிப்பாய்**
**நல்லைதோய் காரை மடைமருவு இரங்க**
**நாதனே சீதர மணியே (53)**

என்பது மாலையின் ஒரு பா.

### 36. இட்ட சித்தி விநாயக மாலை

**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

திருவாவடுதுறை யாதீனம் தவத்திரு கச்சியப்ப முனிவர் பெருமானால் அருளிச் செய்யப் பெற்றது விநாயக புராணம். இது 3047 விருத்தங்களைக் கொண்ட பெருநூல் என்பது மட்டும் அன்றி எளிதில் விளங்கிக் கொள்ள முடியாத கடினமான காப்பியமும் ஆகும். இதன் சுருக்கமாகச் சிற்றிலக்கிய வடிவில் இயற்றப் பெற்றதே இட்ட சித்தி விநாயக மாலை. இதில் பெரும்பாலும் முன் இரண்டு அடிகள் வேழமுகப் பெம்மானிடம் வேண்டப்படும் விண்ணப்பம் ஆகவும் பின் இரண்டு அடிகள் புராண வரலாற்றுச் சுருக்கமாகவும் அமைந்துள்ளன.

மாலை நூல்களுக்கே சிறப்புரிமை வாய்ந்ததாக ஆகிவிட்ட விளம், மா, விளம், மா, விளம், விளம், மா என ஏழு சீர்கள் அமைகின்ற ஏழுசீர் விருத்தயாப்பில் அமைந்த 106 செய்யுள்களால் இட்ட சித்தி விநாயக மாலை இயற்றப் பெற்றுள்ளது. காப்புச் செய்யுள் தனி விருத்தமாக உள்ளது. 'இட்ட சித்தி விநாயக மணியே' என்பது இதன் மகுடம் ஆகும்.

விளாங்குறிச்சியைச் சேர்ந்த ஓர் அன்பரின் விருப்பப்படி இம்மாலை சுவாமிகளால் இயற்றப் பெற்றதால் இதனை விளாங்குறிச்சிக்கு உரிய தலப்பிரபந்தமாக எண்ணப்பட்டு விட்டது; உண்மையில் இது ஒரு பொதுப்பிரபந்தமே.

இந்த மாலையை அடுத்து இடம்பெற்றுள்ள திருப்புகழ்ப் பா அருணகிரிநாதரின் நாதபிந்து கலாதி நமோநம என்னும் திவ்வியத் திருப்புகழின் அமைப்பை உடையது. அதே இராக தாளத்தோடு (வர்ணமெட்டில்) நாள் வழிபாட்டிலும், கூட்டு வழிபாடுகளிலும், இசையரங்குகளிலும் பாடுவதற்கேற்ற அருமையான விநாயகர் திருப்புகழ் இது.

பதிப்பு 1945 தாரண ஆவணி

### 37. முதலிபாளையம் திருவருள் விநாயக மாலை
### ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

முதலிபாளையம் என்னும் ஊர் சத்தியமங்கலப் பெருவழியில் கோவில் பாளையத்திற்கு வடக்கில் மூன்று கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அவ்வூரில் தவத்திரு. சிவராமசாமி சுவாமிகள் என்னும் அடியார் (இயற்பெயர் திரு. சிவமலையப்பக் கவுண்டர்; இன்றைய திருப்பேரூர் ஆதீனகர்த்தர் திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் பூர்வாசிரமத் தந்தையார்) தம் ஞான தேசிகராகிய இராமானந்த சுவாமிகளின் பெயரில் ஓர் ஆசிரமம் அமைத்து வழிபட்டு வந்தார். அங்கு எழுந்தருளி விளங்கும் விநாயகரின் திருப்பெயர் திருவருள் விநாயகர்.

இவ்விநாயகப் பெருமானின் தோத்திரப் பனுவலாக முகிழ்த்ததுதான் திருவருள் விநாயகமாலை. இந்த மாலை காப்பு வெண்பா ஒன்று, நூல் 31, நூற்பயன் 1 என எண்சீர் விருத்தங்கள் முப்பத்திரண்டு ஆக மொத்தம் 33 செய்யுள்களால் யாக்கப் பட்டுள்ளது. "முதலி பாளையம்தோய் ராமானந்தமடா லயத்தருள் விநாயகப்பெம் மானே" என்னும் நீண்ட மகுடத்தை உடையது.

இம்மாலையை அடுத்துத் திருப்புகழ் ஒன்றும் வாழி விருத்தம் ஒன்றும் உள்ளன.

பதிப்பு 1944 தாரண ஆவணி

குறிப்பு: தெய்வத்திரு சி. வேலுசாமிக் கவுண்டர் அவர்கள் நினைவு வெளியீடாக 2004 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் திருப்பேரூர் சாந்தலிங்கர் அருள்நெறி மன்றம் இம்மாலையை வெளியிட்டுள்ளது.

### 38. குருந்தமலை குழந்தை வேலாயுதசாமி மாலை
### ஆ. . ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

இத்திருத்தலத்தைப் பற்றி முன்னர்க் கூறப்பட்டுள்ளது (வரிசை எண். 33). இம்மாலை 101 எழுசீர் விருத்தங்களால் பாடப்பட்டுள்ளது. காப்பும் கம்பீர விநாயகர் துதியும் தனியாக அமைந்துள்ளன. குருந்தமா மலைவாழ் குழந்தைவே லாயுத மணியே என்பது இந்த மாலையின் மகுடம். இந்த மாலை அருமையான சொல்லாட்சிகளும், நல்ல சாத்திரக் கருத்துகளும் நிறைந்துள்ள இனிய சிற்றிலக்கியம்.

கிரகவா தனையும், அற்பர்கள் புரிஅக்
கிரமவா தனைகளும், பவம்தோய்
நரகவா தனையும், கோத்திரம் சாதி
நவில்மதம் சமயவா தனையும்
சரகவா தனையும் தவிர,“என் பாதம்
சாரவா தனையா!” என்று ஏற்பாய்
குரகவா விகள்சூழ் குருந்தமா மலைவாழ்
குழந்தைவே லாயுத மணியே! (43)

காலைவந் திட்டது; அதன்பிறகு உச்சிக்
காலம்வந்து உற்றது; ஆங்க அந்தி
மாலைவந் திட்டது; இயல்மதி வருட
வந்தன வார்த்திகம் இயமன்
ஓலைவந் திட்டது என்றுஅமுது ஓய்வார்
உயிர்த்துணை உனைஅலது உண்டோ?
கோவைந் திட்ட குருந்தமா மலைவாழ்
குழந்தைவே லாயுத மணியே (76)

என்பன போன்ற பல கருத்தாழமிக்க செய்யுள்கள் இந்த மாலையில் நிறைய உள்ளன.

பதிப்பு 1947 விய தை.

**39. குன்னத்தூர்ப் புதூர்த் தோத்திரத் திரட்டு, இகபர சாதன விளக்கம்**
**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

இந்நூலில் மூன்று பதிகங்களை அடுத்துச் சுவாமிகளால் எழுதப்பெற்ற இகபரசாதன விளக்கம் என்னும் உரைநடை நூல் ஒன்று இடம்பெற்றுள்ளது. கந்தசாமி சுவாமிகள் தம் ஆசிரியர் ஆகிய இராமானந்தரின் வாழ்க்கை வரலாற்றை விரிவாக ஸ்ரீஇராமானந்த விஜயம் என்னும் பாட்டிடையிட்ட உரைநடையாக இயற்றியுள்ளார். அந்தப்பெரிய நூல் இன்றுவரை அச்சாகவில்லை. அதற்கடுத்தபடி உரைநடையில் எழுதப்பெற்ற நூலாக இந்த இகபர சாதன விளக்கம் அமைந்துள்ளது. 27 பக்கங்களில் எழுதப்பெற்றுள்ள இது, "ஆலய வழிபாட்டில் அன்பர்களுக்குச் சந்தேக விபரீதங்கள் இன்றி ஊக்கத்துடன் நுழைந்து பாடுபடத் தூண்டும் அளவில் நின்ற பொது நூற் சுருக்கம் ஆகும்" (வரிசை எண். 33) என நூலாசிரிய சுவாமிகளே கூறியுள்ளார்.

பதிப்பு 1947 சர்வசித்து ஆனி

**40. குருந்தமலை குழந்தை வேலாயுத சுவாமி பிள்ளைத்தமிழ்**
**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

சுவாமிகளின் அபிமானத் தலங்களுள் ஒன்றாகிய இத்தலத்தைப் பற்றி முன்பே கூறப்பட்டுள்ளது. (வரிசை எண். 33) இந்த ஆண்பாற்பிள்ளைத் தமிழ்தான் சுவாமிகளால் இயற்றப் பெற்ற கடைசிப் பிள்ளைத் தமிழ் ஆகும். அவர் 1948இல் இறைவன் திருவடிகளையடைந்த பிறகு பதிப்பிக்கப்பட்டுள்ளது. கருத்தாழமும் செம்மாந்த நடையும் பெற்ற இப்பிரபந்தத்தில் பக்திச்சுவை நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**தனதான தந்த தனதான தந்த**
**தனதான தந்த தனதானா**
**உவமானம் என்ப தறியாஅ கண்ட**
**உணர்வோர்கள் பற்று முதல்வோனே!**
**உமைஆர்வம் மிஞ்சு சிறுபாலன் என்ற**
**உருவேப டைத்த பெரியோனே!**
**தவமான தம்கொள் பெரியோர்கள் கொண்ட**
**தனுவூடு முற்றும் நிறைவோனே!**
**சகலாக மங்கள் மறைமோலி என்ற**
**சரணாக தத்தர் பெறுதாளா!**
**நவமான இன்ப மயவேட மங்கை**
**நகைவாச கத்தின் மகிழ்கோவே!**

*நலம்மேவு குன்று தொறும்ஆடி அன்பர்*
*நசையாவும் முற்ற அருள்கோவே!*
*சிவமான தந்தை குரவா!வி யன்கொள்*
*சிறுதேர்உ ருட்டி அருள்வாயே!*
*திருவார்கு ருந்த மலைமேவு கந்த!*
*சிறுதேர்உ ருட்டி அருள்வாயே (10)*

என்பது போன்ற பல பக்திச் சுவை மிக்க நயமான பாடல்களை இப்பிள்ளைத்தமிழில் பரவலாகக் காணலாம்.

பதிப்பு 1949 ஜனவரி
இரண்டாம் பதிப்பு 1970 திருப்பணிக் குழு வெளியீடு
மூன்றாம் பதிப்பு 1996 கௌமார மடாலயம் தம்பி சாமிகள்

என்னும் தவத்திரு மருதாசல சுவாமிகள் பொழிப்புடன் உள்ளது.

**41. குணிய முத்தூர்க் குமரகுருபரக் கடவுள் மாலை**
**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

கோவைக்குத் தெற்கில் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இவ்வூர் இப்போது குனியமுத்தூர் என வழங்கப்படுகிறது. இந்தக் குமரகுருபரக் கடவுள் மாலை 30 எண்சீர் விருத்தங்களால் "குணியமுத்தூர்க் கோயில்வளர் குமரகுரு பரனே" என்னும் மகுடத்தோடு இயற்றப் பெற்றுள்ளது. காப்பு, நூற்பயன் தனியாக உள்ளன.

பதிப்பு 26-6-1949 விரோதி ஆனி

**42. உதக மண்டலம் ஸ்ரீநிவாச மாலை**
**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

நீலகிரி மலையில் ஊட்டி என வழங்கப்படும் உதகமண்டலத்தின் பழைய அக்கிரகாரத்தில் தாச பளஞ்சிக வைசியப் பெருமக்களால் கட்டப் பெற்றுள்ள ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சீனிவாசப் பெருமாளைப் போற்றும் மாலைப் பிரபந்தம் இது. 30 எண் சீர் விருத்தங்களால் "நீல கிரி அணிஆ லயம்கொள்அருள் விரிமணிமே னியனே" என்னும் மகுடத்துடன் ஆக்கப் பெற்றுள்ளது. காப்பு வெண்பாவும் நூற்பயன் விருத்தமும் தனியாக உள்ளன.

பதிப்பு 1950 ஜனவரி

**43. கந்தசாமி சுவாமிகள் வாழ்க்கை வரலாறு வண்ணம்**
**ஆ. . .ர் தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள்**

வண்ணம் என்னும் யாப்பினத்தைப் பற்றி முன்னர்க் கூறப்பெற்றுள்ளது (வரிசை எண். 15). இந்த யாப்பில் வாழ்க்கை வரலாற்றைப் பாடிய செய்தியும் அங்கேயே உள்ளது. சிரவை ஆதீனத்தின் மூன்றாம் பட்டத்தில் இருந்த தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள் அவர்கள் தம் ஞானாசிரியரின் வரலாற்றை வண்ணப் பாவில் வடித்துள்ளார். கஜபூசைச் சுவாமிகளின் செய்யுட் படைப்புகளிலேயே தலைசிறந்த அரிய படைப்பு. இது தொங்கற்றாழிசை அமைந்த, முறையான கலைவண்ணம்.

முதல் பதிப்பு 24-11-1951
இரண்டாம் பதிப்பு 22-12-1975

### 44. திருத்துடிசைப் பிரபந்தத் திரட்டு
**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

துடிசை என்பது துடியலூர். இது கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் நெடுஞ்சாலையில் கிட்டத்தட்ட 15 கிமீ. தொலைவில் உள்ளது. தலபுராணம் பெற்றுள்ள பழைய ஊர். சுவாமி விருந்தீசர், அம்மன் விசுவநாயகி, விநாயகர், முருகப் பெருமான் ஆகியோரைப் போற்றும் நான்கு பதிகங்களும் ஐந்து திருப்புகழ்ப் பாக்களும் இப்பதிப்பில் இடம் பெற்றுள்ளன.

இதில் எண்சீர் விருத்தத்தில் அமைந்துள்ள விருந்தீசர் பதிகம் குறிப்பிட்டுக் கூறப்படவேண்டிய ஒன்று. இது துடியலூர்த் தலபுராணத்தின் சுருக்கமாக அமைந்துள்ளது. இந்தச் சுவாமிகள் இயற்றியுள்ள ஏனைய நான்கு புராண சாரநூல்களோடு இதுவும் எண்ணப்பட வேண்டியதாகிறது.

பதிப்பு 27-11-1952 நந்தன கார்த்திகை

### 45. சிரவைத் தண்டபாணிக் கடவுள் பிள்ளைத்தமிழ்
**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

இதன் முதல் பதிப்பு பார்வைக்குக் கிடைக்கவில்லை. 13-3-78இல் வெளிவந்த இரண்டாம் பதிப்பின் பதிப்புரையில், "தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் சொற்சுவை பொருட் சுவையுடன் 30 ஆண்டுகளுக்குமுன் இயற்றியருளிய அருள்மிகு தண்டபாணிக் கடவுள் பிள்ளைத் தமிழ் 25 ஆண்டுகட்குமுன் முதற்பதிப்பு வெளிவந்தது" என்ற குறிப்பு உள்ளது. கந்தசாமி சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ள ஆறு பிள்ளைத்தமிழ் நூல்களுள் க்கால வரிசைப்படி இது ஐந்தாவது ஆகலாம்.

சுவாமிகளின் ஏனைய பிள்ளைத்தமிழ்களைப் போன்றே இதுவும் செறிவானதொரு சிற்றிலக்கியம். கௌமார மடாலயத்தில் எழுந்தருளியுள்ள தம் வழிபடு கடவுளைப் போற்றும் பிரபந்தமாதலின் பக்திமிக்க பனுவலாக உருவாக்கியிருக்கிறார்.

முதல் பதிப்பு 1953
இரண்டாம் பதிப்பு 13-3-1978

**46. பத்திராசல இராமச்சந்திரன் பிள்ளைத்தமிழ் குறிப்புரையுடன்**
**ஆ. . .ர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**
**குறிப்புரை கவியரசு கு. நடேச கவுண்டர்**

ஆந்திர மாநிலத்தில் உள்ள மிகப் புகழ்பெற்ற திவ்விய தேசம் பத்திராசலம். திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோவில் வரலாறும் பத்திராசல இராமர் கோவில் வரலாறும் ஒரே மாதிரியானவை. நம் சுவாமிகள் இந்தத் தலத்திற்குப் போகவில்லை. அவ்வூருக்கு யாத்திரையாகச் சென்று வந்த ஓர் அன்பரின் கோரிக்கைப்படி இப்பிரபந்தத்தைப் பாடிக் கொடுத்தார் எனத் தெரிகிறது. சுவாமிகள் இயற்றியுள்ள பிள்ளைத் தமிழ்களுள் இது ஒன்று மட்டுமே வைணவ பரமானது ஆகும்; மிக எளிமையானதும் இதுதான் எனக் கூறலாம்.

இப்பதிப்பில் கோவைகிழார் திரு. சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் எழுதியுள்ள முன்னுரை மிக்க பயன் தருவதாக உள்ளது. குறிப்புரை ஆங்காங்கு அருஞ்சொற் பொருளாக அளிக்கப் பட்டுள்ளது.

பதிப்பு 1955 செப்டம்பர்

**47. கந்தசாமி சுவாமிகள் பிள்ளைத் தமிழ்ப் பதிகம்**
**ஆசிரியர் கவியரசு கு. நடேச கவுண்டர்**

பிள்ளைத் தமிழிற்குரிய ஒவ்வொரு பருவத்திற்கும் ஒவ்வொரு ஆசிரிய விருத்தமாக மொத்தம் பத்துப் பாடல்கள் கொண்டது இப்பதிகம். தமிழ் இலக்கியப் பரப்பில் இத்தகைய பிள்ளைத் தமிழ்ப் பதிகங்கள் சிலவும், பருவத்திற்கு மூன்று பாடல்கள் உள்ளன சிலவும், ஐந்து செய்யுள்கள் உள்ளன சிலவும் அருகிக் காணப்படுகின்றன. நடேச கவுண்டர் அவர்களின் இந்தச் சிறு நூலே பிறகு பருவத்துக்கு 5 பாடல்கள் உள்ளனவாக விரிக்கப் பெற்றுப் பதிப்பாகி உள்ளது (காண்க: இந்நூலின் வரிசை எண் 5)

பதிப்பு 23-11-1955

### 48. வண்ணச் சரபர் பிரிவுழி இரங்கல் துறை வண்ணம்
### ஆ. . . ர் திரு அருணாசலத் தொண்டைமான்

அகப்பொருள் வண்ணப் பாடல் பற்றி ஏற்கெனவே கூறப்பெற்றுள்ளது. (வரிசை எண். 15) இந்த திரு. அருணாசலத் தொண்டைமான் வண்ணச் சரபம் சுவாமிகளின் மாணவரும், அவர் திருமலையிலிருந்து உருண்டபோது அருகில் இருந்தவரும் ஆவார். தமிழகத்தின் பலமாவட்டங்களிலும் மாவட்டத் துணைத்தலைவராக இருந்து, தஞ்சையில் கலைக்கூடம் நிறுவி, சிற்பத் திறனாய்வாள ராகவும், கம்பராமாணயச் சொற்பொழிவாளராகவும் தகுபுகழுடன் விளங்கிய திரு. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களின் பாட்டனார் இந்த வண்ண ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

காதலனின் பிரிவாற்றாமையால் வருந்துகின்ற தலைவியின் துன்பம் எவ்வாறு எளிய சொற்களால் சித்திரிக்கப்பட்டுள்ளதோ அவ்வாறே பாட்டுடைத் தலைவராகிய தண்டபாணி சுவாமிகளின் பெருமையும் ஆண்கலையில் அழகாகப் பேசப்பட்டுள்ளது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள இலக்கணச் சூடாமணி என்னும் யாப்பிலக்கண நூலில் அதன் குறிப்புரையாசிரியர் இந்த வண்ணத்தை முழுமையாக மேற்கோள் காட்டியுள்ளார்.

பதிப்பு 26-6-1956

### 49. இராமானந்த சுவாமிகள் அருள் வாழ்க்கை வரலாறு
### தொகுப்பாசிரியர் திருவாமாத்தூர் தி.செ. முருகதாச ஐயா

சிரவையாதீன நிறுவனர் தவத்திரு இராமானந்த சுவாமிகளின் இரண்டாம் ஆண்டுக் குருபூசை நினைவு மலராக வெளியிடப்பட்ட இந்நூலில் அவருடைய வாழ்க்கை வரலாறு விரிவாகக் கூறப்பெற்றுள்ளது.

பதிப்பு 26-6-1956

### 50. சிரவை யமக அந்தாதி மூலமும் உரையும் (முதல் 50 பாடல்கள்)
### ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்
### உரையாசிரியர் நூலாசிரியரே

கௌமார மடாலயத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைப் போற்றும் 100 யமகக் கட்டளைக் கலித்துறைகளைக் கொண்ட இந்த அந்தாதியின் முதல் 50 செய்யுள்கள் மட்டும் நூலாசிரியரே எழுதியுள்ள பதவுரையுடன் இதில் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இது மிகக் கடினமான யமக அந்தாதிகளில் ஒன்றாதலின் நூலாசிரியரே பதவுரையும் எழுதியிருப்பது மிகச் சிறப்பானது.

எனினும் இதற்கு விசேடஉரை, இலக்கணக் குறிப்புகள் முதலியன சேர்க்கப்பெற்றால் படிப்பவர்களுக்கு எளிமையாக இருக்கும்.

முதல் பதிப்பு 25-6-1959
இரண்டாம் பதிப்பு 26-11-1985 முழு நூலாக உள்ளது.

**51. திருப்பழனியாண்டவர் திருப்பள்ளியெழுச்சி, மாலை.**
**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

பழனியாண்டவரைப் போற்றும் பனுவல் திரட்டு இது. இதில் இடம் பெற்றுள்ள திருப்பள்ளியெழுச்சியும் மரபு மாறாமல் ஏனையவற்றைப் போன்றே, "எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே" என முடியும் 12 எண்சீர் விருத்தங்களால் பாடப்பட்டுள்ளது. அடுத்து மூன்று பதிகங்கள் உள்ளன.

ஐந்தாவதாகச் சிவகிரித் தண்டபாணியின் மாலை என்னும் பிரபந்தம் அமைந்துள்ளது. இது காப்பு ஒன்று, நூல் 102 என மொத்தம் 103 எழுசீராசிரிய விருத்தங்களால், "பழனிச் சிவகிரித் தண்டபாணியனே" என்னும் மகுடத்துடன் பாடப் பெற்றுள்ளது. இம்மாலையின் பல பாடல்களில் சிலேடையணி பயின்று வந்துள்ளது என்பது சிறப்பாகக் குறிக்கத்தக்கதாம்.

இதில் ஆங்காங்கு அரும்பத உரை தரப்பெற்றுள்ளது.

பதிப்பு 10-12-1959

**ஒரு தகவல்**

இப்பதிப்பில் அமைந்துள்ள ஐந்து சிற்றிலக்கியங்களுக்கும் குறிப்புரை எழுதித்தருமாறு பழனிக்கோவில் நிர்வாகம் புலவர் ப.வெ. நாகராஜன் அவர்களிடம் கேட்டுக்கொண்டது. அவரும் எழுதி முடித்து கி.பி. 2001ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தேவஸ்தானத்திற்கு அனுப்பினார். அக்கையெழுத்துப் பிரதி வேதாரணியத்தில் உள்ள அச்சகத்திற்கு அனுப்பப் பெற்றதாகவும் தெரிகிறது. அதற்குப் பிறகு என்ன ஆயிற்றோ தெரியவில்லை. தக்க தருணம் வரும்போது பழனி தண்டாயுதப் பெருமான் அவற்றை வெளிவரச் செய்வார் என நம்புவதற்கு இப்பொழுதும் இடமிருக்கிறது.

**52. காளப்பட்டி மாரியம்மன் தோத்திரத்திரட்டு**
**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

காளப்பட்டி என்பது சிரவணம்பட்டிக்கு மேற்கே உள்ளதொரு சிற்றூர். இங்குள்ள மாரியம்மன் கோவில் மிகப் பிரசித்தி பெற்றது. பல ஊர்களிலிருந்து மக்கள் இங்கு வருகின்றனர்.

இப்பதிப்பில் இம்மாரியம்மனின் தோத்திரங்களாக அமைந்த பஞ்சகம், மாலை, திருப்புகழ்ப்பாக்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன. இம்மாலை முப்பது எழுசீர் ஆசிரிய விருத்தங்களால் புனையப் பெற்றுள்ளது.. காப்பு வெண்பா, நூற்பயன் விருத்தம் என இரு செய்யுள்கள் நூலின் புறத்துறுப்பாக உள்ளன "காளப்பட்டிவாழ் மாரியம்பிகையே" என்பது இதன் மகுடம்.

இதில் மூன்றாம் பட்டம் தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகளால் இயற்றப்பெற்ற பதிகம் ஒன்றும், திருப்புகழ்ப் பா ஒன்றும், வெண்பாக்கள் மூன்றும் சேர்க்கப் பெற்றுள்ளன.

பதிப்பு 13-6-1962

**53. கௌமார முறைமை மூலமும் உரையும்**
**ஆசிரியர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்**
**பதிப்பாசிரியர் திருவாமாத்தூர் தி.செ. முருகதாச ஐயா**

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் வழங்கப்பெற்ற சாத்திர நூல்கள் பல. அதில் மிகச் சிறப்பானவை நான்கு. அவற்றுள் இரண்டாவது இடத்திற்குரியது கௌமார முறைமை. இந்நூல் கன்மம், பக்தி, ஞானம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றுப் பிரிவிற்கு நூறு விருத்தங்களாக மொத்தம் முந்நூறு விருத்தங்களால் ஆனது. பாயிரமாக 7 கலிவிருத்தங்களும் நூற்பயனாக ஓர் அறுசீர் விருத்தமும் நூலுக்குப் புறநிலையாக அமைந்துள்ளன.

ஏட்டுச்சுவடியில் இருந்து இதனைப் பெயர்த்தெழுதி, தேவையென்று கருதப்பெற்ற இடங்களில் குறிப்புரை வரைந்து பதிப்பித்தவர் சுவாமிகள் பேரர் ஆகிய திரு. முருகதாச ஐயா அவர்கள். சிரவை யாதீனப் பதிப்புகளில் இது ஒரு ஓலைச் சுவடிப் பதிப்பு. மூல நூல், குறிப்புரை அமைப்பு முதலியன மூன்று காண்டங்களிலும் ஒரே மாதிரியாக ஒழுங்காக அமையவில்லை எனினும் காண்டப் பகுப்பு, செய்யுள் முதற்குறிப்பகராதி, விளக்கமான முன்னுரை முதலிய பதிப்புக் கூறுகளுடன் இந்தப் பதிப்பு நன்றாக அமைந்துள்ளது.

சிரவையாதீனத்தின் மூன்றாம் பட்டமாகத் தவத்திரு கஜபூசைச் சுந்தரசுவாமிகள் அவர்கள் அருளாட்சி ஏற்ற புனிதப் பொன்னாளின் நினைவு மலராக மலர்ந்துள்ள இந்தப் பதிப்பு அந்த நிகழ்ச்சிக்கு ஏற்ற தகுதிமிக்க பதிப்பாக அமைந்துள்ளது. சிரவையாதீனத்தின் சிறப்புமிக்க பதிப்புகளுள் குறிப்பிடவேண்டிய பெருமை பெற்றது இது.

பதிப்பு 9-2-1964

## 54. கணபதி வேணுகோபாலசாமி திருக்கோயில் கும்பாபிஷேக மலர் தொகுப்பு நூல்

முன்பு பல சமயங்களில் தனித்தனியாக கணபதி என்னும் ஊருக்குரியனவாக வெளியாகி இருந்த பற்பல தோத்திரப் பிரபந்தங்களின் தொகுப்பு இது. இதில் தவத்திரு. கந்தசாமி சுவாமிகளின் ஆதிவிநயாகர் பதிகம், பிரசன்ன விநாயகர் மாலை, வேணுகோபாலசாமி பதிகம், வேணுகோபால சாமி திருப்புகழ்ப் பதிகம், அத்தனூரம்மை மாலை ஆகிய சிற்றிலக்கியங்களும் கஜபூசைச் சுந்தரசுவாமிகளின் வேணுகோபாலசாமி பதிகம் ஒன்றும், வேறு சில சிறு பிரபந்தங்களும் ஒன்றாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் விதந்து கூறத்தக்க பனுவல்கள் ஏற்கெனவே ஆங்காங்கு சுட்டிக் காட்டப்பெற்றுவிட்டன.

இதில் பதிப்பு எனக் கூறத்தக்க அம்சம் எதுவுமே இல்லை. பழைய அச்சுப்புத்தகங்கள் அச்சகத்திற்கு அளிக்கப்பட்டு மறுபடியும் “அச்சுப்போடப்பட்டுள்ளன” எனினும் பழம் பனுவற் பாதுகாப்புப் பதிப்பு என இதைப் போற்ற வேண்டும்.

பதிப்பு 23-3-1964

## 55. கந்தசாமி சுவாமிகள் தோத்திரத்திரட்டு ஆசிரியர் கவியரசு கு. நடேச கவுண்டர்

இதில் சிரவையாதீனத்தின் இரண்டாம் பட்டம் தவத்திரு கந்தசாமி சுவாமிகளைப் போற்றும் தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ், வாழ்த்துக்கண்ணிகள் ஆகியன இடம் பெற்றுள்ளன. இந்நூலாசிரியராகிய கவியரசு அவர்கள் கந்தசாமி சுவாமிகளிடம் தமிழ் படித்தவர்.

தாலாட்டு 53 ஈரடிக் கண்ணிகளால் ஆனது. திருப்பள்ளி யெழுச்சி மரபின்படியே, “சற்குருவே பள்ளி எழுந்தருளாயே” என்னும் மகுடத்தில் அமைந்த பத்து எண்சீர் விருத்தங்களால் யாக்கப் பெற்றுள்ளது.

முன்பு பருவத்திற்கு ஒரு பாடலாக அமைந்து பிள்ளைத் தமிழ்ப் பதிகமாக இருந்த பனுவல் (காண்க: வரிசை எண். 47) இப்பொழுது பருவத்திற்கு ஐந்து செய்யுள்களாக விரிக்கப்பட்டுள்ளது. பழைய பத்துப் பாடல்களுள் ஒன்று நீக்கப்பட்டு விட்டது. இதன் மொத்தப் பாடற்றொகை 52. (காப்பு 1. காப்புப் பருவம் 6 ஏனைய 9x5=45) கவியரசு அவர்களின் பாடல்கள் பொருட்செறிவு மிக்கதாகவும் குறிப்புப்பொருள் பயப்பதாகவும் இருக்கும். இதில் உள்ள செய்யுள்களும் அவ்வாறே அமைந்துள்ளன.

வாழ்த்துக் கண்ணிகள் 15 ஈரடிக் கண்ணிகளான் இயன்றது. இறுதியாகப் போற்றிக் கண்ணிகள் இரண்டும் வணக்க விருத்தம் ஒன்றும் பெற்று இத்தோத்திரத்திரட்டு நிறைவடைந்துள்ளது.

பதிப்பு 1964

**56. திருமுருகன் திருவிளையாடற் கலிவெண்பா**
**ஆசிரியர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்**

கண்ணிகளால் ஆன நேரிசைக் கலிவெண்பாவால் பாடுவது இப்பனுவல். வண்ணச்சரபருக்கே உரிய ஆற்றொழுக்கமான எளிய நடை, தெளிவான கருத்துகள், யாப்புச் செம்மை ஆகிய தன்மைகள் இதிலும் காணக்கிடைக்கின்றன.

**கோடிவிளை யாடல்செயும் கோலா கலக்குமரன்**
**ஆடியவா றெல்லாம் அறிகில்லேன் - பாடியவை**
**சற்றா யினும்இவற்றைத் தள்ளாது போற்றுவது**
**கற்றாய்ந்த வல்லோர் கடன்**

என்பது நூலின் இறுதியில் உள்ள தனிவெண்பா.

பதிப்பு 26-1-1964

**57. மனுநெறித் திருநூல்**
**ஆசிரியர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்**

இது திருக்குறளைப் போன்ற அமைப்பில் 130 அதிகாரங்களும் 1300 குறள் வெண்பாக்களையும் கொண்ட நூல். அறம் முதலிய நான்கு உறுதிப்பொருள்களை அறத்தில் அறம், அறத்தில் பொருள், அறத்தில் இன்பம், அறத்தில் வீடு, பொருளில் அறம் என்பவை போலப் பதினாறாகப் பகுத்துரைப்பது இந்நூலின் சிறப்பியல்பாகும். வீடு என்பது சொற்களைக் கடந்த ஒன்று ஆதலின் வீட்டுப்பாலில் வீட்டில் அறம், வீட்டில் பொருள் என்னும் இரண்டினை மட்டும் கூறி ஏனைய இரண்டைக் குறிப்பால் உணர வைத்துள்ளார்.

இதனை ஓலைச் சுவடியிலிருந்து பெயர்த்தெழுதி ஆங்காங்கு அருஞ்சொற்பொருள் வரைந்து, அச்சாகுங்கால் மெய்ப்புத் திருத்திப் பதிப்பாசிரியராகப் பணிபுரிந்தவர் தி.செ. முருகதாச ஐயா அவர்கள். இவர்களுடைய பெயரே தலைப்புப் பக்கத்தில் இடம் பெறவில்லை. அணிந்துரை என்ற பெயரில் வேறொருவர் பெயரில் எழுதப்பெற்றுள்ளதும் இவருடையதே என்பது வெள்ளிடைமலை. இப்பதிப்பிற்குப் பதிப்புரையாக ஒரு பக்கம் எழுதித் தொடர்பு

பட்டவர்களுக்கு வாழ்த்துக் கூறும் போது தவத்திரு. சுந்தர சுவாமிகள் போகிறபோக்கில் இவர் பெயரைச் சுட்டிச் செல்கிறார்; அவ்வளவே. தமிழ் இலக்கியப் பதிப்புலகத்தில் எல்லா இடங்களிலும் நிலவி வரும் இது போன்ற உழைப்பு இருட்டடிப்புக்குச் சமய நிறுவனங்களும் விலக்கல்ல என்பதற்கு,

**பொய்த்தது உணரில் புரைதீர்ந்த புண்ணியர்தம்**
**சித்தம்சற்று எய்தும் சினம் (126)**

எனக் கூறும் மனுநெறித் திருநூல் பதிப்பும் ஒரு சான்றாகிறது.

பக்கத்திற்கு ஓர் அதிகாரமாக இந்த நூலின் அச்சும் பதிப்பும் அழகாக அமைந்துள்ளது.

### 58. தியானானுபூதி மூலமும் உரையும்
### ஆசிரியர் வண்ணச்சரபம் சுவாமிகள்
### உரையாசிரியர் தி.மு. செந்தினாயக ஐயா

வண்ணச்சரபம் சுவாமிகள் அருளிய சாத்திர நூல்களில் முதன்மையானதும் தலைமையானதும் இந்நூல். இந்தத் திருநூல்தான் சிரவை ஆதீனத் தோற்றத்திற்கே முழுமுதற் காரணம்; விரிப்பிற் பெருகும். பாயிரமாக மூன்று செய்யுள்களும், நூலாக 33 எண்சீர் விருத்தங்களும், நூற்பயன் வெண்பா ஒன்றுமாக 37 செய்யுள்களை மட்டும் கொண்ட இச்சிறிய பெருநூல் ஆன்மீகச் சாதகர்களுக்கு மிகவும் பயன்மிக்க கைவிளக்கு.

இம்மூல நூலுக்கு நூலாசிரியரின் மைந்தராகிய திரு. தி.மு. செந்தினாயக ஐயா அவர்கள் இயற்றியுள்ள விரிவுரை மிகப் பொருத்தமாகவும் தெளிவாகவும் உள்ளது. எனினும் இவ்வுரையில் வண்ணச்சரபம் சுவாமிகளின் பாடல்களைத்தவிர வேறு எவையும் மேற்கோளாகக் காட்டப் பெறவில்லை. ஆனால் இந்தத் தியானஅநுபூதி நூலில் கூறப்படும் கருத்துகள் தென்மொழி, வடமொழி நூல்களில் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் கூறப்பட்டுள்ளன. அறிஞர் உலகம் ஏற்றுக் கொண்டுள்ள சாத்திர நூல்களின் கருத்துகளோடு ஒப்பிட்டுக் காட்டாததாலேயே - இதில் மட்டும் அல்ல; அம்மரபினர் எழுதும் எல்லாவற்றிலும் வண்ணச்சரபர் தனிமைப்படுத்தப்பட்டார். அதுமட்டுமல்ல தமிழ் இலக்கிய உலகத்திற்கும் சமய உலகத்திற்கும் அறிமுகம் இல்லாதவராகவே ஆகிவிட்டார். இந்த நூலுக்கு ஏராளமான மேற்கோள்களுடன் முத்தி நிச்சயப் பேருரை போன்றதொரு விருத்தி தேவைப்படுகிறது.

இந்த நூல் அமைப்பு நன்றாக உள்ளது. என்றாலும் நூலின் செய்யுள்களும் மேற்கோள் செய்யுள்களும் ஒரே அச்சில் அமைத்திருப்பதைத் தவிர்த்திருக்கலாம். பொதுவாக நல்ல பதிப்பு.

பதிப்பு 19-11-1965

**59. குருபரதத்துவம்**
**ஆசிரியர் வண்ணச்சரபம் சுவாமிகள்**

கௌமார மடாலயத் தண்டபாணி சுவாமி திருக்கோவில் திருக்கட நீராட்டுப் பெருவிழா மலராக வெளியிடப்பெற்றுள்ள இக்காப்பியம் வண்ணச்சரபரின் தன் வரலாறு ஆகும். தமிழில் செய்யுள் வடிவில் அமைந்துள்ள ஒரே சுயசரிதை நூல் இது ஆகும். பாயிரத்துடன் 30 சருக்கங்களும் 1240 விருத்தங்களும் இதில் உள்ளன.

தவத்திரு. தண்டபாணி சுவாமிகளுக்கே உரிய எளிய நடையையும் யாப்புச் செம்மையையும் நூல் முழுவதிலும் பரக்கக் காணலாம். கௌமார சாத்திர தோத்திர நூல் உரைகளில் அடிக்கடி மேற்கோள் காட்டப்பெறுவதாகிய,

**பரிதி ஈசன் பராசக்தி மாயவன்**
**கரிமுகன் குகன் என்னக் கவின்தரும்**
**பெரிய சற்குரு பொற்பதம் பேணுவார்**
**அரிய தாள்மக ரந்தம் அணிந்து உய்வாம்**

என்னும் கலிவிருத்தம் இக்காப்பியத்தின் காப்புச் செய்யுளே. நூற்பெயர்க்காரணத்தையும் கௌமாரத்தின் தலைமையான தத்துவக் கொள்கையையும் இப்பாடல் தெற்றெனை விளக்கக் காணலாம்.

ஏட்டுச்சுவடியிலிருந்து பெயர்த்தெழுதி ஆங்காங்கு அருஞ்சொற்பொருள் எழுதிப் பதிப்பித்திருப்பவர் தி.செ. முருகதாச ஐயா.

பதிப்பு 1-6-1966

**60. சிரவைத் தண்டபாணிக் கடவுள் ஆலயக் குடமுழுக்கு மலர்**

14-9-1972 அன்று கௌமார மடாலயத் திருக்கோவிலில் சிறப்பாக நிறைவேறிய திருக்குட நீராட்டுப் பெருவிழாவின் நினைவாக வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இது. இதில் மடாலய வரலாறு சுருக்கமாகத் தரப்பட்டிருப்பது குறிப்பிடப்பட வேண்டிய செய்தி. 1972இல் நடைபெற்ற திருப்பணிகள் பற்றியும் கும்பாபிஷேகம்

பற்றியும் எல்லாச் செய்திகளும் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. கும்பாபிஷேகம் முடிந்த 51ஆவது நாள் மண்டல பூஜை நிறைவு விழாவில் மலர் வெளியிடப் பெற்றதால் குடமுழுக்கு விழாப் புகைப்படங்களும் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளது.

பதிப்பு 1972 நவம்பர்

**61. பேரூர்ப்பச்சை நாயகி பிள்ளைத்தமிழ்**
**ஆசிரியர். தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

இந்நூலைப் பற்றி ஏற்கெனவே (வரிசை எண். 30) கூறப்பெற்றுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகம் 1974ஆம் ஆண்டு இப்பிள்ளைத்தமிழைத் தமிழ்ப்புலவர் இடைநிலைத் தேர்விற்குப் பாடமாக வைத்தால் அரும்பதக் குறிப்புகளுடன் இந்த இரண்டாம் பதிப்பு வெளியிடப்பெற்றது.

ஒரு தேர்விற்குப் பாடமாக வைக்கப்படும்போது ஒரு நூலை ஆசிரியர்கள் ஆர்வத்தோடு கற்பிக்கவும் மாணவர்கள் ஊக்கத்தோடு கற்றுணரவும் என்னென்ன கூறுகள் இன்றியமையாதனவோ அவற்றுள் ஒன்று கூட இப்பதிப்பில் இல்லை. இதில் அரும்பத உரை ஆசிரியர் யார் என்றும் பெயர் கூட இல்லை. பொதுவாகச் சிற்றிலக்கியம் ஒன்று கல்லூரிப் பாட நூலாகும் பொழுது எவ்வாறு பதிப்பிக்கப்படக்கூடாது என்பதற்கு ஒரு நல்ல முன்மாதிரி இப்பதிப்பு. அடியார்கள் புரிந்தோ புரியாமலோ பாராயணம் செய்து புண்ணியம் சம்பாதிக்க நல்ல பதிப்பு.

முதல் பதிப்பு 1940 பிரமாதி மாசி
இரண்டாம் பதிப்பு 1974

**62. அவிநாசிக் கருணாம்பிகை மாலை**
**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

இந்த மாலை இலக்கியத்தைப் பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது. (வரிசை எண். 10) இதன் இரண்டாம் பதிப்பைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுமாறு செய்திகள் இல்லை.

முதல் பதிப்பு 1927 பிரபவ கார்த்திகை
இரண்டாம் பதிப்பு 16-4-1975

**63. திருப்பேரூர்க்கோவை**
**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

இவ்வாசிரிய சுவாமிகளால் இயற்றப்பெற்ற ஒரே ஒரு ஐந்திணைக் கோவை இந்த அரிய இலக்கியமாகும். இந்த

அகப்பொருட்கோவை இலக்கிய மரபிற்கேற்ப 477 கட்டளைக் கலித்துறைகளால் இயற்றப் பெற்றுள்ளது. திருப்பேரூர் பட்டிப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ள இந்தக் கோவையில் சில புதிய துறைகளும், சில துறைகளுக்கு ஒன்றற்கு மேற்பட்ட காரிகைகளும் காணப்பெறுகின்றன.

இது அகப்பொருள் நுட்பமும் சைவ சமயக் கருத்துகளும் நிறைந்த சுவையானதொரு சிற்றிலக்கியம் ஆகும். சமயக் கருத்துகள் அகப்பொருள்துறைகளோடு மிக இயல்பாகப் பொருந்தும்படி இயற்றப் பெற்றிருப்பது இதன் சிறப்பியல்பு ஆகும்.

*தந்ததெய்வம் தரும்எனச் சேறல்,*

**ஆற்றுஇட்ட பொன், அணி ஆரூரர்க்**
**குக்குளத்து அன்றுஅளித்து இன்பு**
**ஊற்றுஇட்ட பாபுனை பேரைப்**
**பிரான்வெள்ளி ஓங்கல்மிசை**
**மாற்றுஇட்டு அறியாபொன் நேர்அணங்கு**
**எய்த மனது இரங்கி**
**நேற்றுஇட்ட தெய்வம்இன் றும்தரும்;**
**நம்பு;என் நிசச்சொல் நெஞ்சே. (41)**

இக்கருத்துடை அடைகொளியை விரித்து அகத்துறைப்பொருளுடன் இணைத்துப் பார்ப்பது எத்துணை சுவையான அநுபவம்! இத்தகைய பல காரிகைகளை இக்கோவையில் கண்டு மகிழலாம்.

பதிப்பு 21-12-1975

**64. இரத்தினாசலப் பதிகம், கந்தசாமி சுவாமிகள் வாழ்க்கை வரலாற்று வண்ணம், சிரவை மும்மணிக்கோவை**

**ஆசிரியர்கள் தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள்**
**புலவர் ப.வெ. நாகராஜன்**

முதல் இரு நூல்கள் தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகளால் இயற்றப்பெற்றவை. இவற்றுள் வண்ணத்தைப் பற்றி ஏற்கெனவே (வரிசை எண். 43) கூறப்பெற்றுள்ளது.

சிரவை மும்மணிக்கோவை என்பது தவத்திரு. சுந்தர சுவாமிகளைப் போற்றுவது; அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த செய்யுள்கள் அந்தாதித் தொடை பெற்று அமைந்து பத்துமுறை மடங்கி வந்து முப்பது பாடல்களில் நிறைவுறுவது மும்மணிக்கோவை ஆகும். இந்த மும்மணிக் கோவையில் அகவல்கள் தோறும் தவத்திரு. இராமானந்த சுவாமிகள்

பற்றிய குறிப்பும், வெண்பாக்கள் தோறும் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பற்றிய குறிப்பும் இடம் பெற்றிருக்கக் காணலாம். எனினும் எல்லாப் பாடல்களிலும் பாட்டுடைத் தலைவர் சுந்தர சுவாமிகளே.

இச்சிற்றிலக்கியத்தில் திரிபு, யமகம், மடக்கு, நடுவெழுத்தலங்காரம், சிவலிங்க பந்தம் ஆகிய சித்திரக் கவிகளும் ஓர் அகத்துறைக் கட்டளைக் கலித்துறையும் இடம் பெற்றுள்ளன. காப்பு, வாழி என இரு வெண்பாக்கள் புறத்துறுப்பாக இணைந்துள்ளன.

முதல் பதிப்பு வண்ணம் மட்டும் 24-11-1951
இரண்டாம் பதிப்பு இப்பதிப்பு 22-12-1975
முதல் பதிப்பு மும்மணிக்கோவை 22-12-1975
இரண்டாம் பதிப்பு 23-11-2003 தோத்திர மஞ்சரியில் உள்ளது.

**ஒரு செய்தி**

இந்தச் சிரவை மும்மணிக்கோவையைக் கருத்துரையுடன் திருச்சி திருவானைக்காவலைச் சேர்ந்த பேரா. திருமதி. பிருந்தாஸ்ரீ அவர்கள் பதிப்பித்து, 23-11-2003 அன்று கௌமார மடாலயத்தில் நடைபெற்ற தவத்திரு. கஜபூசைச் சுந்தர சுவாமிகளின் பவளவிழாக் கருத்தரங்கத்தில் வெளியிட்டுள்ளார். இப்பதிப்பு சிரவை ஆதீனப் பதிப்பு ஆகாது.

**65. சிரவைக் கௌமார மடாலயத் தோத்திரத் திரட்டு**
**ஆசிரியர் தவத்திரு அரங்கமுத்து சுவாமிகள்**

இத்தோத்திரத் திரட்டில் முருகப் பெருமான் திருப்புகழ்ப் பதிகம், இராமானந்த சுவாமிகள் திருப்புகழ் மாலை (24 பாக்கள்), கந்தசாமி சுவாமிகள் பாமாலை (142 எழுசீர் விருத்தங்கள்) முருகன் வெண்பா மாலை (100 பாக்கள்), முருகன் பவனிச்சிறப்பு (13 இரட்டையாசிரியம்), ஏகபாதக் கட்டளைக் கலித்துறைகள் ஆகியன அடங்கியுள்ளன.

பதிப்பு 1975

**66. சிரவை முருகன் குருமணிமாலை**
**ஆசிரியர் தவத்திரு அரங்க. முத்து சுவாமிகள்**

இம்மாலை மூன்று கனிச்சீரும் ஒரு மாச்சீரும் இணைந்து வந்த 108 கலிச்சந்த விருத்தங்களால் புனையப்பட்டுள்ளது. காப்பு வெண்பா தனியாக உள்ளது. கருணைக்குருமணியே என்பது

இம்மாலைப் பிரபந்தத்தின் மகுடம். அடுத்து எழுசீர்ப் பதிகம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

பதிப்பு 5-12-1976

**67. திருப்பேரூர்க் கலம்பகம் மூலமும் உரையும்**
**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**
**உரைஆசிரியர் புலவர் ப.வெ. நாகராஜன்**

சிரவைக் கந்தசாமி சுவாமிகளால் இயற்றப் பெற்ற ஒரே கலம்பக இலக்கியம். ஐம்பதுக்கு மேற்பட்ட யாப்பு வகைகளையும் இருபத்து மூன்று கலம்பக உறுப்புகளையும் பெற்றுள்ள இலக்கிய நயம் மிக்க இச்சிற்றிலக்கியம் தமிழில் உள்ள மிகச் சிறந்த சிலவற்றோடு ஒப்ப வைத்து எண்ணத்தக்கது ஆகும். இச்சுவாமிகளில் இலக்கியங்களிலேயே மிக அதிகமாகப் படிக்கப் பெற்றதும் மேற்கோள் காட்டப்பட்டதும் இதுவே. இதற்கு அமைந்துள்ள உரையும் தெளிவானதாகவும் இன்றியமையாத செய்திகள் அனைத்தையும் பெற்றுள்ளதாகவும் அமைந்துள்ளது.

பதிப்புப் பார்வையில் இந்நூற்பதிப்பில் சில குறைபாடுகள் காணப்படினும் பொதுவாக நல்ல பதிப்பு. இதன் படிகள் அனைத்தும் தீர்ந்துவிட்டதால் இயன்ற அளவு விரைவில் திருந்திய இரண்டாம் பதிப்பு வெளிவர வாய்ப்புள்ளது.

பதிப்பு 23-1-1978

**ஒரு தகவல்**

இந்தத் திருப்பேரூர்க் கலம்பகத்தை ஆய்வுப் பொருளாகக் கொண்டு திருமதி. ச. பத்மினி என்பவர் கோவைப் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்.) பட்டம் பெற்றுள்ளார்.

**68. சண்முகமாலை**
**ஆசிரியர் தவத்திரு இராமானந்த சுவாமிகள்**

இந்த மாலை இலக்கியத்தைப் பற்றி ஏற்கெனவே கூறப்பெற்றுள்ளது. (வரிசை எண். 1) இது நான்காவது பதிப்பு.

முதல் பதிப்பு 1907
இரண்டாம் பதிப்பு 1921
மூன்றாம் பதிப்பு 1935
நான்காம் பதிப்பு 24-1-1978

### 69. சிரவைத் தண்டபாணிக் கடவுள் பிள்ளைத்தமிழ்
### ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

இந்த நூலைப் பற்றி ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது. (வரிசை எண். 45)

முதல் பதிப்பு 1927
இரண்டாம் பதிப்பு 15-6-1979

### ஒரு குறிப்பு

இந்த இரண்டாம் பதிப்பைப் பின்பற்றிக் கோவை இராமநாதபுரம் திரு. அருணகிரிநாதர் அருள்நெறிக் கிருத்திகைக் கழகம் 1980இல் மருதமலை அலங்காரத்தை வெளியிட்டுள்ளது.

### 72. வெள்ளக் கிணறு விநாயகர் பதிகங்கள், பத்திரகாளியம்மன் மாலை
### ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

இவ்வூரைப் பற்றி முன்னர்க் குறிப்பிடப்பெற்றுள்ளது. (வரிசை எண். 25) இவ்வூரில் கொங்கு வேளாளர்களில் ஆதி கூட்டத்தாரின் குல தெய்வம் ஆகிய பத்திரகாளியம்மன் ஆலயம் உள்ளது. இக்கோயிலில் 1980இல் நடைபெற்ற திருக்குட நீராட்டுப் பெருவிழாவையொட்டி இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் விநாயகருக்குரிய பதிகங்கள் இரண்டும், பத்திரகாளியம்மன் மாலை ஒன்றும் இடம் பெற்றுள்ளன. மாலைப் பிரபந்தம் காப்பு வெண்பா ஒன்று, நூலாக எழுசீர் ஆசிரிய விருத்தங்கள் 30 என மொத்தம் 31 செய்யுள்களானியன்றது. "வெள்ளக் கிணற்று ஊர்ப் பத்திரகாளிஎம் தாயே" என்பது இதன் மகுடம். இப்பதிப்பில் ஆங்காங்கு அருஞ்சொற்களுக்குப் பொருள் கொடுக்கப் பட்டுள்ளது.

பதிப்பு 5-3-1980

### 73. சூரிய மாலை
### ஆசிரியர் வண்ணச்சரபம் சுவாமிகள்

சிரவையாதீனச் சூரிய பகவான் ஆலய மண்டலாபிஷேக நிறைவு நாளன்று வெளியிடப்பெற்ற அரிய சிறுநூல் இது. இந்த மாலை உதயம், உச்சம், அஸ்தமனம் என மூன்று பகுதிகளாகப் பப்பத்து இரட்டையாசிரிய விருத்தங்களால் யாக்கப் பெற்றுள்ள ஓர் அரிய துதி நூல். தமிழ்மொழியில் சூரிய பகவானைப் போற்றும்

நூல்கள் மிகக் குறைவே. (இவ்வாசிரிய சுவாமிகளின் ஞாயிறு ஆயிரம் 100 பதிகங்களைக் கொண்டது. இதைத் தவிர ஏறத்தாழ 200 பாடல்கள் சூரிய பரமாகப் பாடியுள்ளார்). இதன் மூன்று பகுதிகளும் வெவ்வேறு மகுடங்களைக் கொண்டவை. வழக்கம் போலக் காப்பு, நூற்பயன் என இரு வெண்பாக்கள் புறத்துறுப்பாக அமைந்துள்ளன. இம்மாலையில் சூரியனைப் பற்றிய பல புராண வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளுக்கே உரிய எளிய ஆற்றொழுக்கான நடை, யாப்புச் சீர்மை என்பனவற்றோடு பொருண்மையாலும் அரிய செய்திகளைக் கொண்ட நூல்.

பதிப்பு 19-5-1982

**74. தியான முறை, நீதி வாக்கியம்**
**ஆசிரியர் தவத்திரு. இராமானந்த சுவாமிகள்**

இச்சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ள உரைநடைச் சாத்திர நூல் தியானமுறை. இது இரு பாகங்களாக அமைந்து தியானத்தைப் பற்றிய பல செய்திகளைச் சாத்திர, தோத்திர மேற்கோள்களுடன் தெளிவாக விளக்குகிறது. சமயவழிப்பட்ட தியானத்தில் ஈடுபட விழைபவர்களுக்கு மிக்க பயன்தரும் அளவிற் சிறிய, அரிய நூல்.

அடுத்ததாகிய நீதி வாக்கியம் பெரும்பாலும் ஆன்மீக வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிய 147 ஒழுக்க முறைகளைக் கூறுகிறது. ஒவ்வொரு வாக்கியமும் ஓர் அகவலடியைப் போல அமைந்திருப்பதால் இந்நூலை ஒரு 147 அடி நிலைமண்டில ஆசிரியப்பாவாகவும் கொள்ளலாம்.

முன்னுரை முதலிய எதுவுமே இல்லாமல் ஆசிரியர் பெயர் தவிர வேறு எந்தக் குறிப்புமற்ற சாத்துகவி ஒன்றினை மட்டும் கொண்டுள்ள பதிப்பு.

பதிப்பு மே 1962

**75. கௌமார மடாலயத் தோத்திரத் திரட்டு**
**ஆசிரியர். தவத்திரு அரங்க முத்து சுவாமிகள்**

இச்சுவாமிகளால் இயற்றப்பெற்ற சித்திமகோர்க்கட தேசிக மாலை (23 கட்டளைக்கலித்துறை), தண்டபாணிக் கடவுள் பாமாலை (31 கட்டளைக் கலித்துறை), இராமானந்த தேசிக மணிமாலை (36 எழுசீர் விருத்தம்), இராமானந்த சுவாமிகள் சரித்திர வண்ணம்,

நால்வர் சிறப்பு, 10 யமகக் கட்டளைக் கலித்துறைகள் ஆகியவற்றின் தொகுப்பு இத்தோத்திரத் திரட்டு.

கவிஞர் சிரவை. கோபு அவர்கள் அருஞ்சொற்பொருள் எழுதியிருக்கிறார். யமகப் பாடல்களுக்கு மட்டும் முழுஉரை உள்ளது.

பதிப்பு 25-11-1982

**76. பேரொலியலந்தாதி மூலமும் உரையும்**
**ஆசிரியர் வண்ணச்சரபம் சுவாமிகள்**
**உரையாசிரியர் திரு. தி.செ. முருகதாச ஐயா.**

ஒலியலந்தாதி என்பது பாட்டியல் கூறும் பல (96 என்பது சரியன்று) பிரபந்த வகைகளுள் ஒன்று. 64 கலைகளால் ஆன முப்பது வண்ணப்பாக்கள் அந்தாதித்து வருதல் என்பது இதன் இலக்கணம். இது பெயரோ, வடிவமோ இல்லாத பரம்பொருளை முன்னிலைப் படுத்தி இயற்றப் பெற்றுள்ள பனுவல். தத்துவச் செறிவுள்ள அரிய நூல்.

நூலாசிரியரின் பெயரரான திரு. தி.செ. முருகதாச ஐயா இதற்கு உரை வரைந்துள்ளார். இவ்வுரை சில இடங்களில் பொழிப்பாகவும், சில இடங்களில் கருத்தாகவும், சில இடங்களில் குறிப்புரையாகவும் மிகச் சுருக்கமாக அமைந்துள்ளது. மூலநூலின் பெருமிதத்திற்கு உரை பெருமை சேர்ப்பதாகக் கூற முடியாது.

பதிப்புக் கண்ணோட்டத்திலும் தேவையான கவனம் செலுத்தப்படாமல் குறிப்பிட்ட நாளில் "எப்படியாவது அச்சுப் போட்டு" வெளியிட்டு விட வேண்டும் என்று நிறைவேற்றப்பட்ட அவசரப் பதிப்பு, அதனால் பிழைகள் - அச்சுப்பிழையும் உரையாசிரியப் பிழையும் - மிகுந்து விட்டன.

2-9-1985 அன்று கௌமார மடாலயம் தண்டபாணிசாமி திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழா நினைவு மலராக வெளியானது.

பதிப்பு 2-9-1985

**77. சிரவையமக வந்தாதி மூலமும் உரையும்**
**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**
**உரையாசிரியர் நூலாசிரிய சுவாமிகளே**

இந்நூலின் முதல் 50 கட்டளைக்கலித்துறைகள் மட்டும் ஒரு பதிப்பாக வந்த செய்தி ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

(வரிசை எண். 50 ) இதில் நூல் முழுவதும் - பிற்பகுதி மட்டும் அல்ல - நூலாசிரியரே இயற்றிய பதவுரையுடன் கொடுக்கப்பட்டுள்ளது. மூளையைக் கசக்கிப் பிழிய வைக்கும் கடினமான நூல்களுள் இது ஒன்று.

முதல் பதிப்பு 1-50 பாடல்கள் மட்டும் 25-6-1959
இரண்டாம் பதிப்பு முழுநூல் 26-11-1985

**78. அவிநாசிக் கருணாம்பிகையம்மன் யமக அந்தாதி – மூலமும் உரையும்**

**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**
**உரையாசிரியர் புலவர் ப.வெ. நாகராஜன்**

இந்த யமக அந்தாதியின் 30 கட்டளைக் கலித்துறைகளும் ககர மோனை பெற்றே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று. முப்பதாவது காரிகை, நூற்பயன் ஆகிய செய்யுள்களும் அவற்றிற்குரிய உரையும் உரையாசிரியர் இறுதியில் சேர்த்திருந்த உரையுரிமைக் கட்டளைக் கலித்துறை ஒன்றும் அச்சகத்தில் தொலைந்து விட்டது. பதிப்பித்தவர்கள் கவனிக்காததால் இது ஒரு குறை நூலாகவே பதிப்பிக்கப்பட்டு விட்டது.

பொறுப்புள்ள பதிப்பாசிரியர்கள் அமையாத போது நூல்கள் எவ்வாறு சிதைவடையும் என்பதற்கு இப்பதிப்பும் ஓர் எடுத்துக்காட்டு.

பதிப்பு 6-12-1988

**79. முருகபக்தர்கள் பேரவை 5 மாவட்ட மாநாட்டு மலர், கோவை**

கோவை, பெரியார், சேலம், தருமபுரி, நீலகிரி ஆகிய ஐந்து மாவட்ட முருக பக்தர்கள் பேரவை மாநாடு 1988 டிசம்பர் 25,26 தேதிகளில் கௌமார மடாலயத்தில் நடைபெற்றதன் நினைவு மலர்.

பதிப்பு 25-12-1988

**80. தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள் மணிவிழாமலர்**
**மலர்ப்பொறுப்பாளர் – கவிஞர் பெ. சிதம்பரநாதன்**

19-11-1989 அன்று சுவாமிகளின் அறுபது ஆண்டுகள் நிறைவு மணிவிழாவையொட்டி வெளியிடப்பெற்ற அழகிய சிறப்பு மலர். நிறையப் படங்களும், நல்ல கட்டுரைகளும், கவிதைகளும் எனச் சாரமான செய்திகள் நிறைந்த தரமான மலர். ஒரு பக்கம் கூட வர்த்தக

விளம்பரம் இல்லாமல் முந்நூறு பக்கங்களுக்குமேல் நல்ல தாளில் சிறப்பாக அச்சிடப்பெற்றுள்ள அரிய நினைவு மலர்.

அருட்செல்வர் உயர்திரு நா. மகாலிங்கம் அவர்களின் செயலாற்றலுக்கும் கொடை வளத்திற்கும் ஒரு சான்று இந்த மணி விழா மலர்.

பதிப்பு 19-11-1989

**81. தவத்திரு சுந்தரசுவாமிகள் பிள்ளைத்தமிழ்ப் பதிகங்கள்**
**ஆசிரியர்கள் தவத்திரு மருதாசல சுவாமிகள்**

திருநெல்வேலி சிவதாசன் என்னும் கவிஞர் தி.சு. ஆறுமுகனார் கௌமார மடாலயத்தில் பழங்காலம் தொட்டுப் பற்பல நற்பணி ஆற்றி வரும் தம்பி சுவாமிகள் என்னும் தவத்திரு மருதாசல சுவாமிகள் பருவத்திற்கு ஒரு பாடலாக இப்பிள்ளைத்தமிழை இயற்றியுள்ளார். நூலாசிரியரே ஆங்காங்கு குறிப்புரை எழுதியுள்ளார்.

ஏராளமான அரிய சிற்றிலக்கியங்களைப் படைத்து வழங்கியுள்ள நெல்லை சிவதாசன் என்னும் கவிஞர் திரு. தி.சு. ஆறுமுகனார் அவர்களால் இயற்றப்பெற்றது மற்றொரு பிள்ளைத்தமிழ்ப் பதிகம்

இந்த இரண்டும் சேர்ந்தது இந்தப் பதிப்பு

பதிப்பு 29-7-1990

**82. முருக பக்தர்கள் பேரவை முதல் மாநில மாநாட்டுச் சிறப்பு மலர், பழனி.**
**மலர் வடிவமைப்பு. திரு. பழ. தரும. ஆறுமுகம்.**

1992 ஜனவரி 11, 12 தேதிகளில் பழனியில் நடைபெற்ற முருகபக்தர்கள் பேரவையின் முதல் மாநில மாநாட்டையொட்டி வெளியிடப்பட்டது இந்த நினைவு மலர். நிறையப் படங்களும், கட்டுரைகளும், கவிதைகளும் மலரை அணி செய்கின்றன. முருக வழிபாட்டைப் பற்றிய பல செய்திகளைத் தாங்கியுள்ள நல்ல நினைவு மலராக இதுஅமைந்துள்ளது.

பதிப்பு 11-1-1992

**83. ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி**
**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

ஈச்சநாரி என்பது கோவைக்குத் தெற்கே பொள்ளாச்சிப் பெருவழியில் உள்ளதொரு புகழ்மிக்க விநாயகத்தலம். அந்த

விநாயகரைப் போற்றுகின்ற பதிற்றுப் பத்தந்தாதி இது. இந்த நூலாசிரிய சுவாமிகள் இத்தகைய பதிற்றுப்பத்தந்தாதி இலக்கியம் இரண்டு மட்டுமே இயற்றியுள்ளார்; மற்றொன்று குருந்தமலைப் பதிற்றுப்பத்தந்தாதி. பொதுவாக மாலை அந்தாதி வகை இலக்கியங்களுக்கு நூற்பயனாக ஒரு பாடலை அமைப்பது சுவாமிகள் மரபு. இப்பதிப்பில் காப்பாகக் கட்டளைக் கலித்துறை ஒன்றும் நூலாகப் பல்வகை விருத்தங்கள் நூறுமே உள்ளன; நூற்பயன் காணப்பெறவில்லை.

இந்தப் பதிற்றுப் பத்தந்தாதிக்குச் செம்மையான மூலப்படி எழுதி வைக்கப்பெற்றிருக்கவில்லை. பழைய குறிப்பேடுகள், தனித்தாள்கள் ஆகியவற்றிலிருந்து சுவடிக் கலைஞர் திரு. ஆர். கிருஷ்ணன் அவர்கள் அரிதின் முயன்று தேடிக் கண்டுபிடித்துள்ளார். நூலின் தன்மை, பதிப்பு முறை முதலியவற்றை வரலாறாக ஆவணப்படுத்தும் முறையான பதிப்புரை எழுதப்படாமையின் இத்தகைய முக்கியச் செய்திகள் கூறப்படவில்லை.

பதிப்பு 17-5-1992

**84. ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி**
**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

இது மேலே உள்ள அதே பதிப்பு தான். பல பிரதிகளில் ஒரு முன்னுரையும் ஈச்சநாரி விநயாகர் படமும் சேர்க்கப் பெற்ற அட்டை தனியாக அச்சிடப்பெற்றுத் தனிவெளியீடாகக் காட்டப்பட்டுள்ளது. இதற்கான காரணம் விளங்கவில்லை.

பதிப்பு 1993

**85. தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திர வண்ணம்**
**ஆசிரியர் தவத்திரு மருதாசல சுவாமிகள் (தம்பி சாமி)**

இஃது ஓர் எண்கலை வண்ணம். இதன் முதல் ஆறு கலைகளில் அறுசமயத் தெய்வங்களாகவும், ஏழாவதில் சமயாதீத சமயத் தலைவராகச் சற்குருநாதர் தவத்திரு. கந்தசாமி சுவாமிகளையும் போற்றப்பெறுவது கௌமார நெறிக்குச் சாலப் பொருத்தமானதாகும். எட்டாவதாகிய ஈற்றுக்கலையில் அக்குருநாதரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

கலைவண்ணங்களின் வகைப்பாடுகள் பற்றி ஆய்வு செய்பவர்கள் கவனிக்க வேண்டிய ஒரு படைப்பு. தவத்திரு தம்பி சுவாமிகளின் எண்பதாம் ஆண்டு நிறைவு நினைவு மலராகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பதிப்பு 28-10-1993

**86. தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள் மோட்ச தீப மலர்**

சிரவையாதீனத்தின் மூன்றாம் பட்டத்தில் வீற்றிருந்து கௌமார மடாலயத்தின் புகழைப் பாரெங்கும் பட்டொளி வீசிப் பரவச் செய்த கௌமார மகரிஷி, திருப்பணிச் சக்ரவர்த்தி, தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள் அவர்கள் முருகனடியார்களுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும் கோயிற் கலைஞர்களுக்கும் நிகழ்ந்த பேரிழப்பாக 14-6-1994 அன்று குருவருளில் கலந்தார். அச்சுவாமிகளின் மோட்ச தீப வழிபாடு 23-6-1994 அன்று நடைபெற்றபோது வெளியிடப்பட்ட நினைவு மலர். இது சுவாமிகளின் வாழ்க்கைக் குறிப்பு, கையறு நிலைப்பாக்கள் என ஒரு பதினான்கு பக்கங்கள் முற்பகுதியாக அமையப் பிற்பகுதியாகத் திருவாசக மூலம் முழுமையாக அமைந்த வழிபாட்டுப்பதிப்பு.

பதிப்பு 23-6-1994

**87. ஸ்ரீவாலை ஜெபமாலை**

**ஆசிரியர் பட்டணம் சுவாமிகள் என்னும் தவத்திரு மாரிமுத்து சுவாமிகள்**

பட்டணம் மாரிமுத்து சுவாமிகள் என்பவர் 1934ஆம் ஆண்டு பழனியில் பரிபூரணமான ஒரு துறவி. இவர் சமாதி ஆலயமும் ஒரு மடாலயமும் சிரவைக் கௌமார மடாலயத்தின் ஆளுகையில் உள்ளது. இது இந்த ஆலயத்தில் திருப்பணிகளைச் செய்து திருக்குடமுழுக்காற்றிய விழா நினைவு மலர்.

தொடக்கத்தில் ஓர் அன்பரால் இயற்றப் பெற்ற இச்சுவாமிகள் துதியும், ஈற்றில் இவர் சமாதியடைந்த நாட்குறிப்பும் விருத்தப் பாக்களில் உள்ளன. ஸ்ரீவாலை ஜெபமாலை நூற்காப்பாக வெண்பா ஒன்று, சித்தர் பாடல்கள் பாணியில் அமைந்துள்ள எண்சீர் விருத்தங்கள் இரண்டு என மூன்று செய்யுள்கள் உள்ளன. நூல் 95 கண்ணிகளைக் கொண்ட நேரிசைக் கலிவெண்பாவாக இயன்றது. இதில் மந்திரசாத்திரக் கருத்துகள் இடம் பெற்றுள்ளன.

பதிப்பு 10-11-1995

**88. குருந்த மலைப்பிள்ளைத் தமிழ் மூலமும் உரையும்**

**ஆசிரியர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள்**

**உரையாசிரியர் தவத்திரு மருதாசல சுவாமிகள் (தம்பிசாமி)**

இப்பிரபந்தம் முன்னர் மூலம் மட்டுமாக வெளிவந்துள்ளது. (வரிசை எண். 40) இப்பொழுது கௌமார மடாலயம் தம்பிசாமி என்னும் தவத்திரு மருதாசல சுவாமிகளின் பொழிப்புரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

முதல் பதிப்பு மூலம் மட்டும் 1949

(தனியார் பதிப்பு மூலம் மட்டும் திருப்பணிக் குழு வெளியீடு 1970)

இரண்டாம் பதிப்பு மூலமும் உரையும் 1996

**89. பிரதோஷ கால வழிபாடு**

கௌமார மடாலயத்தின் அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோவிலில் பிரதோஷ வழிபாட்டின் போது பயன்படுத்துவதற்கு உரிய திருமுறை மற்றும் தோத்திரப் பாடல் திரட்டு. சிரவையாதீன வெளியீடுகளிலேயே மிக அதிகமான பதிப்புகளைக் கண்டு வருவது இச்சிறு திரட்டு நூல்தான். 2004 ஏப்ரல் மாதம் வரை எட்டுப் பதிப்புகள் வந்தாயிற்று. இது தொடர்ந்து வந்து கொண்டே இருக்கவும் வாய்ப்புள்ளது.

முதற் பதிப்பு 16-8-1997

எட்டாம் பதிப்பு 2004

**90. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் வரலாறு**
**ஆசிரியர் திரு. தி.செ. முருகதாச ஐயா**

இதன் முதல் பதிப்பு திருவாமாத்தூர்க் கௌமார சபையின் வெளியீடாக 1964இல் வெளியிடப்பெற்றது. 1998இல் கௌமார மடாலயத்தில் நடைபெற்ற வண்ணச்சரபம் சுவாமிகள் நினைவு நூற்றாண்டு விழாக் கருத்தரங்கத்தில் இந்த இரண்டாம் பதிப்பு சிற்சில மாற்றங்களுடன் சிரவையாதீனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. எளிய உரைநடையில் அமைந்துள்ளதால் பலர் இதனை விரும்பி வாங்கிப் படிக்கின்றனர்.

பதிப்பு 19-6-1998

**91. தவத்திரு இராமானந்த அடிகளார் வரலாறு**
**ஆசிரியர் புலவர் ப.வெ. நாகராஜன்**

முற்கூறப்பெற்ற கருத்தரங்கின் போது வெளியிடப்பெற்ற உரைநடை நூல். எளிய தமிழ்நடையில் சுருக்கமாக (76 பக்கங்கள்) அமைந்துள்ளதால் பலரும் வாங்கிப் படித்து வருகின்றனர். சிரவை

யாதீன வரலாற்றை அறிய விருமபுபவர்களுக்கு இது மிகப் பயனுடைய கையேடு.

பதிப்பு 19-6-1998

**92. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆய்வு மாலை தொகுதி 1**

**(கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு)**

**பதிப்பாசிரியர்கள் முனைவர் த.கோ. பரமசிவம் முதலியோர்**

தண்டபாணி சுவாமிகள் நினைவு நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் கௌமார மடாலயத்தில் 1998 சூன் மாதம் 19, 20, 21 ஆகிய மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் ஓலைச் சுவடித்துறையோடு இணைந்து நடத்தப்பெற்ற இதில் மொத்தம் 172 ஆய்வுக்கட்டுரைகள் அரங்கேறின. அவற்றில் 71 கட்டுரைகளின் தொகுப்பு இந்த முதல் தொகுதி.

**93. மேற்படி ஆய்வு மாலை தொகுதி 2**

எஞ்சிய 101 ஆய்வுக் கட்டுரைகள் அடங்கியது. இந்த இரண்டாம் தொகுதி. இக்கட்டுரைகளில் 172 ஆய்வாளர்கள் வண்ணச்சரபம் சுவாமிகளைப் பற்றிப் பல்வேறு நோக்கில் ஆய்வு செய்து தம் கருத்துகளை ஆவணப்படுத்தியுள்ளனர்.

சிரவையாதீனத்தின் இலக்கியப் பணிகளை நாடறியச் செய்த நல்ல கட்டுரைத் தொகுப்புகளாக இந்தக் கட்டுரைத் தொகுதிகள் அமைந்துள்ளன.

பதிப்பு இரு தொகுதிகளும் 19-6-1998

**94. படைவீட்டுத் திருப்புகழ்**

**ஆசிரியர் வண்ணச்சரபம் சுவாமிகள்**

முருகப் பெருமானுக்குரிய ஆறுபடை வீடுகளை ஆறு ஆறாகப் பெருக்கி 36 தலத்திற்கு ஒரு திருப்புகழ்பாவாகப் பாடப்பெற்ற இனிய தோத்திர நூல். வழிபாடுகளிலும், தமிழிசை அரங்குகளிலும் பாடுவதற்கேற்ற நல்ல இசைத்தமிழ் நூல்.

பதிப்பு 19-6-1998

**95. திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம்**

**ஆசிரியர் வண்ணச்சரபம் சுவாமிகள்**

**பதிப்பாசிரியர் புலவர் ப.வெ. நாகராஜன்**

திருவாமாத்தூரில் எழுந்தருளியுள்ள அழகியநாதரைப் போற்றும் 100 பதிகங்களால் ஆகிய பிரபந்தம் இது. முத்தகச் செய்யுள்கள் 100 சேர்ந்து ஒரு சதகம் ஆவது போல இப்பதிகங்கள் நூறு இணைந்து பதிகச் சதம் ஆகியுள்ளது. பாயிரம் 5 நூல் 1000 நூற்பயன் 1 என மொத்தம் 1006 செய்யுள்கள் கொண்டது இந்தப் பதிகச் சதகம்.

இதில் பதிப்பாசிரியரால் எழுதப்பெற்றுள்ள திருவாமாத்தூர்ப் பதிகச் சதக யாப்பமைதி என்னும் கட்டுரை யாப்பியல் ஆய்வாளர்களுக்குப் பெரும்பயன் தருவதாகும். எளிமையான சொற்களால், திருத்தமான யாப்பில், எந்தச் செய்தியையும் எப்படியும் சொல்லும் சுவாமிகளின் மொழியாற்றல் வியப்பிற்குரியது.

பதிப்பு 19-6-1998

**96. பிரதோஷ கால வழிபாடு**
**(பார்க்க வரிசை எண். 89)**
**இரண்டாம் பதிப்பு**

பதிப்பு 1998

**97. மணிவிழா மாண்பு என்னும் சஷ்டிபூர்த்தி விரத மான்மியம்**
**மொழிபெயர்ப்பாசிரியர் புலவர் ப.வெ. நாகராஜன்**

வடமொழி ஸ்காந்தத்தில் உள்ளதாகத் தெலுங்கு எழுத்தில் அமைந்துள்ள 70 வடமொழிச் சுலோகங்களும் தமிழ் எழுத்தில் தரப்பட்டுள்ளதோடு வரலாறும் உரைநடையில் எழுதப்பட்டுள்ளது.

ஒருவர் தம் அறுபதாவது ஆண்டு நிறைவை விரிவான வேள்வி முதலியவற்றுடன் வீட்டிலோ அல்லது திருக்கடையூர், கோவில்பாளையம் முதலிய சிறப்பிற்குரிய சிவத்தலங்களிலோ கொண்டாடுவர். அந்த வேள்வியை உள்ளிட்ட சமயச் சடங்குகளால் முதுமை தள்ளிப் போகும் என்றும், நோயற்ற நீண்ட வாழ்வும், செல்வமும், வாரிசுகளுக்கு வளர்ச்சியும் ஏற்படும் என்றும் யயாதி மன்னன் கதையைக் கொண்டு இந்நூல் கூறுகிறது.

பதிப்பு 4-3-1999

**98. தவத்திரு கந்தசாமி சுவாமிகள் வரலாறு**
**ஆசிரியர் புலவர் ப.வெ. நாகராஜன்**

சிரவையாதீனத்தின் இரண்டாம் குருமகாசந்நிதானமாக இருந்து கொங்கு மண்டலத்தின் பெருங்கவிஞர் பெருமானாக 15000

செய்யுள்களுக்குமேல் இயற்றியருளியவர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள். இவருடைய நினைவுப் பொன்விழாவையொட்டிக் கௌமார மடாலயம் ஓர் ஆய்வுக் கருத்தரங்கத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. அப்பொழுது இந்த உரைநடை வரலாற்று நூலும் வெளியிடப்பட்டது. இவருடைய வாழ்க்கை வரலாறாக வெளிவந்துள்ள முதல் நூல் இதுதான். எளிய நடையில் சுருக்கமாக (82 பக்கங்கள்) எழுதப்பட்டிருப்பதால் அன்பர்கள் பலரும் படித்துப் பயன் பெறுகின்றனர். இவர் நூல்களில் பலர் ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்), முனைவர் (பிஎச்டி) பட்டத்திற்கு ஆய்வு செய்கின்றனர். இந்நூலின் பிற்சேர்க்கையாகச் சுவாமிகளால் இயற்றப்பெற்றுள்ள இலக்கியங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. ஆய்வு மாணவர்களை உள்ளத்தில் வைத்துக் கொண்டே எழுதப்பட்ட வரலாறு இது.

பதிப்பு 20-11-1999

**99. கந்தசாமி சுவாமிகள் ஆய்வு மஞ்சரி**
**(கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு)**
**பதிப்பாசிரியர் புலவர் ப.வெ. நாகராஜன்**

முற்சொன்ன ஆய்வுக் கருத்தரங்கு 1999 நவம்பர் 20, 21ஆம் தேதிகளில் கௌமார மடாலயத்தில் நடைபெற்றது. இதில் 21 ஆய்வுக் கட்டுரைகள் அரங்கேறின. அவற்றின் தொகுப்பாகப் பதிப்பிக்கப் பட்டதே இந்த ஆய்வு மஞ்சரி. இச்சுவாமிகளால் இயற்றப் பெற்றுள்ள மொத்த இலக்கியங்கள் பதிகங்கள் உட்பட 218. இவற்றுள் 16 பிரபந்தங்களே இந்தக் கருத்தரங்கில் ஆய்வுப் பொருளாக அமைந்தன எனில் இன்னும் எத்தனை ஆய்வுக் களங்கள் உள்ளன என அறியலாம்.

சுவாமிகளின் இலக்கியங்களைப் பற்றி ஆய்வாளர்களின் பலவிதமான கண்ணோட்டத்தை இத்தொகுப்பில் காணலாம்.

பதிப்பு 20-11-1999

**100. பிரதோஷ வழிபாடு**
**மூன்றாம் பதிப்பு**

பதிப்பு 1999

**101. திண்டுக்கல் தேனி மாவட்ட முருக பக்தர்கள் பேரவை**
**மாநாட்டு மலர்**
**மலர்க்குழுத்தலைவர் - முனைவர் இரத்தின கிருட்டினமூர்த்தி**

திண்டுக்கல் தேனி மாவட்டங்களின் முருக பக்தர் அமைப்புகளின் பேரவை மாநாடு 7-5-2000 அன்று பழனியில் சிறப்பாக நடைபெற்றது. அதில் வெளியிடப்பெற்ற நினைவு மலர் இது. சில பழைய இலக்கியப் பகுதிகளும், சில புதிய கவிதை. கட்டுரைகளும் நல்ல படங்களும் மலரில் மணம் பரப்புகின்றன.

பதிப்பு 7-5-2000

**102. கொங்கு நாட்டுத் திருக்கடையூர் (கோயில் பாளைய வரலாறு)**
**ஆசிரியர் புலவர் ப.வெ. நாகராஜன்**

இந்தத் தலத்தைப் பற்றிய செய்தி முன்னர்க் கூறப்பட்டுள்ளது. (வரிசை எண். 24). இத்தலத்தில் 2000ஆம் ஆண்டில் விரிவாகத் திருப்பணிகள் மேற்கொள்ளப் பெற்றன. அப்பொழுது இந்தத் தலத்தின் பழமை, சமய, அரசியல் வரலாற்றுப் பெருமை போன்ற செய்திகளை மக்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களை இந்தக் கோவிலின்பால் ஈர்ப்பதற்காக எழுதப்பெற்ற உரைநடை நூல் இது.

சற்றும் உயர்வு நவிற்சி இல்லாமல் பழைய சரிதங்களை எளிய நடையில் கூறியதால் வெளியீட்டின் நோக்கம் நிறைவேறிவிட்டது. கொங்கு நாட்டு வரலாற்றாராய்ச்சியாளர்களுக்குப் பயன்படும் இந்நூல் முழுவதும் விற்கப்பட்டு அத்தொகை திருப்பணிக்கு வழங்கப்பட்டு விட்டது.

பதிப்பு 2000

**103. கோவில் ஒன்று கூப்பிடுகின்றது.**
**ஆசிரியர் புலவர் ப.வெ. நாகராஜன்**

சிரவை யாதீனகர்த்தர் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சோழநாட்டுத் தலங்கள் சிலவற்றை வரலாற்று ஆய்வு நோக்கில் தரிசிக்க ஒரு பயணம் மேற்கொண்டார். அந்த வரலாற்றாய்வுப் பயணத்தில் இந்தச் சொற்பொழிவாளரும் உடனிருந்தார். அதில் பழைய சோழர் தலைநகராமாகிய பழையாறையின் ஆய்வு சிறப்பிடம் பெற்றிருந்தது. அப்பர் பெருமானின் வரலாற்றோடு தொடர்பு கொண்டுள்ள பழையாறை வடதளியின் இன்றைய கவனிப்பாரற்ற நிலை சுவாமிகளை மிகவும் கலக்கிவிட்டது.

பழையாறை வடதளியின் சமயச் சிறப்பையும், அவ்வூரின் வரலாற்றுச் சிறப்பையும் பொதுமக்களுக்கு எடுத்து உணர்த்தி, அவ்வாலயத்தில் திருப்பணிகளை மேற்கொள்ள வைக்க வேண்டும்

என எண்ணினார். அதற்காக உருவானதே இந்தச் சிறிய வெளியீடு. இதில் பழையாறையின் பழஞ்சிறப்பும் இன்றைய நிலையும் குறைந்த பட்சமாகச் செய்ய வேண்டிய பணிகளும் கூறப்பெற்றுள்ளன.

இவ்வெளியீட்டிற்குப் பிறகு அக்கோவிலில் இருமுறை உழவாரப் பணியும் மிகச்சிறிய அளவில் பழுதுபார்த்தலும் நிறைவேறியுள்ளதாகத் தெரிகிறது. இந்தச் சமய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்பணியில் அந்தப் பகுதி மக்களுக்கு உண்மையான ஆர்வம் இல்லை என்பது வேதனையான உண்மை.

பதிப்பு 2000

**104. பிரதோஷ கால வழிபாடு**
**(பார்க்க, வரிசை எண். 89)**

நான்காம் பதிப்பு
பதிப்பு 2000

**105. முருக பக்தர்கள் பேரவை ஆறு மாவட்ட மாநாட்டு மலர்**
**பதிப்பாசிரியர் புலவர் ப.வெ. நாகராஜன்**

கோவை, நீலகிரி, ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி ஆகிய ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த முருக பக்தர் அமைப்புகளின் மாநாடு 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 24, 25 தேதிகளில் ஈரோட்டில் வெகு விமரிசையாக நடைபெற்றது. அதன் நினைவாக வெளியிடப் பெற்ற சிறப்பு மலர் இது. இதுவரை அச்சிடப்பெறாத ஓரிரு கௌமார நூல்களும், நிறையக் கட்டுரைகளும், கவிதைகளும், அழகிய படங்களும் மலரில் மணம் புரப்புகின்றன. முருக வழிபாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பும் அன்பர்கட்கும் ஆய்வாளர் களுக்கும் ஓர் அரிய கருத்துக் கருவூலம்.

பதிப்பு 24-12-2000

**106. பிரதோஷ கால வழிபாடு**

ஐந்தாம் பதிப்பு
பதிப்பு 2001

**107. தவத்திரு குமரகுருபர சுவாமிகள் அருளாட்சி விழா மலர்**
**பதிப்பாசிரியர் புலவர் ப.வெ. நாகராஜன்**

ஒருவர் சிரவையாதீனத்தின் தலைவராக முடிசூடும் போது பழனிக் கோயிலில் அருளாட்சி ஏற்பதே மரபு. தவிர்க்க முடியாத

சூழ்நிலைகளால் இச்சுவாமிகள் சிரவைக் கௌமார மடாலயத்திலேயே அருளாட்சி ஏற்க நேரிட்டது. கௌமார அன்பர்களின் உள்ளத்தில் இஃது ஒரு குறையாக இருந்தது. அதன் காரணமாகச் சுவாமிகள் பட்டமேற்ற ஏழாம் ஆண்டு நிறைவைப் பழனி ஆலயத்தில் முடிசூட்டு விழாவாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த அருளாட்சி விழா பழனியில் 2001 டிசம்பர் 8,9 தேதிகளில் மிக விரிவாக நடைபெற்றது. அந்த விழா நினைவு மலர் இது.

இந்த மலரில் சிரவை ஆதீன வரலாறு, பணிகள், பதிப்புகள் முதலியவற்றைப் பற்றிய சரியான தகவல்களும், பல சமய இலக்கியக் கட்டுரைகளும், கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

பதிப்பு 8-12-2001

**108. பிரதோஷ வழிபாடு ஆறாம் பதிப்பு**

**109. பிரதோஷ வழிபாடு ஏழாம் பதிப்பு**
**பார்க்க, வரிசை எண். 89**

இரண்டு பதிப்புகளும் 2002இல் வெளியிடப்பட்டுள்ளன.

**110. அருளுரைக் கோவை (கஜபூசைச் சுந்தரரின் கட்டுரைத் திரட்டு)**
**பதிப்பாசிரியர்கள் சுவடிக் கலைஞர் திரு. ஆர் கிருஷ்ணன்**
**சிரவை ஆதீனப் புலவர் திரு. கு. சிவலிங்கம்**

தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகளின் 75ஆம் பிறந்த நாள் விழாவையொட்டிச் சிரவையாதீனம் ஓர் இலக்கியக் கருத்தரங்கத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. அவ்விழாவில் சுவாமிகள் அவ்வப்பொழுது எழுதிய கட்டுரைகளையெல்லாம் திரட்டி அதனையே நினைவு மலராக வெளியிட முடிவெடுக்கப்பட்டது. அவ்வாறு தொகுக்கப்பெற்ற 49 கட்டுரைகளின் தொகுப்பே இந்த அருளுரைக் கோவை. சுவாமிகளின் எழுத்துகள் அனைத்தையும் ஒருசேரப் படிக்கும் வாய்ப்பளித்தது நல்ல பணி.

இந்த நூலை மதிப்பிட்ட திறனாய்வாளர் இதில் சில பதிப்புத் தவறுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். அவை உண்மையேயாயினும் குறிப்பிட்ட கால அளவிற்குள் கட்டுரைகளைத் தொகுத்துப் பதிப்பித்த பதிப்பாசிரியர்களின் பணி பாராட்டிற்குரியது. மலராக அல்லாமல் நூலாக இப்பதிப்பு முழுமையாகவோ பகுதி பகுதியாகவோ வெளிவரும் போது அக்குறைபாடுகள் நீக்கப்பட்டு விடும் என நம்பலாம்.

பொதுவாகச் சுந்தர சுவாமிகளின் அன்பர்களுக்கு இது பாதுகாத்து வைத்துக் கொள்ளத்தக்கதொரு நினைவுப்பொருள்.

பதிப்பு 22-11-2003

**111. திருவடி (கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு)**
**பதிப்பாசிரியர்கள் முனைவர் கி. சுப்பிரமணியன்**
**முனைவர் சு. வேங்கடராமன்**

முற்கூறப்பெற்ற கருத்தரங்கத்திற்குத் தவத்திரு வண்ணச்சரபம் சுவாமிகள், கந்தசாமி சுவாமிகளின் இலக்கியங்கள், பதினொன்றாம் திருமுறை, நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ஆகியன ஆய்வுப் பொருளாக அமைக்கப்பட்டிருந்தன. ஆய்வாளர்களின் 53 கட்டுரைகள் இதில் அரங்கேறின. அவற்றின் தொகுப்பே இப்பதிப்பு. சுவாமிகளின் திருவடிகளில் கட்டப்பெறுகிற மலர்களாக உருவகப் படுத்திப் பதிப்பாசிரியப் பெருமக்கள் இதற்குத் திருவடி எனப் பொருத்தமாகப் பெயர் சூட்டியுள்ளனர்.

இந்நூலில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத் தொடர்பாக 22 கட்டுரைகளும், பதினொன்றாம் திருமுறையைப் பற்றிப் பதினைந்தும், கந்தசாமி சுவாமிகளின் நூல்களைப் பற்றிப் பத்துக் கட்டுரைகளும், வண்ணச்சரபர் தொடர்பாக ஆறு கட்டுரைகளும் உள்ளன. நூல் உருவாக்க வேகத்தில் அச்சகத்தில் சிலபல தவறுகள் (பாரங்கள் மிகுதல், குறைதல், வேறு நூலின் பக்கம் இணைதல் போல) நேர்ந்து விட்டன எனினும் இலக்கியச் சுவை நோக்கில் பயனுள்ள நல்ல பதிப்பு.

பதிப்பு 22-11-2003

**112. தோத்திரமஞ்சரி (கஜபூசைச் சுவாமிகளின் புகழ் மலர்கள்)**
**ஆசிரியர்கள் கவிஞர் சிரவை கோபு**
**புலவர் ப. வெ. நாகராஜன்**
**பதிப்பாசிரியர்கள் சுவடிக்கலைஞர் ஆர். கிருஷ்ணன்**

நூலாசிரியர்கள் இருவரும் அவ்வப்பொழுது தவத்திரு. கஜபூசைச் சுந்தர சாமிகளைப் புகழ்ந்து பாடிய பனுவல் திரட்டு. கவிஞர் கோபு அவர்கள் சிரவைத் தேசிக மாலை (30 செய்யுள்கள்), சிரவைத் தேசிகர் பிள்ளைத்தமிழ் (பருவத்திற்கு 3 பாடல்), சிரவைத் தேசிகர் பஞ்சகம், சிரவைக் குருமணி சித்திரப் பதிகம் என நான்கு நூல்களை இயற்றியுள்ளார். புலவர் நாகராஜன் சிரவை மும்மணிக்கோவை, சிரவைத் தேசிகர் திருத்தசாங்கம், சிரவைத் தேசிகர் சித்திரப் பஞ்சகம், சிரவைத் தேசிகர் திருப்புகழ் சட்கம்,

சிரவைக் குருமணிப் பஞ்சகம் என ஐந்து பனுவல்களை இயற்றியுள்ளார். இருவர் படைப்புகளிலும் சித்திரக் கவிகள் உள்ளன. அவற்றிற்கு ஓவியமும் பந்தத்தில் படிக்கும் முறையும் பொருளும் கொடுத்திருப்பது வாசகர்களுக்கு மிகப் பயனுடையதாகும்.

சித்திரக்கவிகளுடன் அமைந்த நூலைப் பதிப்பிப்பதில் இடர்ப்பாடுகள் அதிகம். எனினும் பதிப்பாசிரியர் தம்பணியைப் போற்றுமாறு செய்திருக்கிறார். அச்சுப் பிழைகளை ஒரு பாதியாவது திருத்தியிருந்தால் பதிப்பின் தரம் உயர்ந்திருக்கும்.

பதிப்பு 22-11-2003

**113. பிரதோஷ வழிபாடு எட்டாம் பதிப்பு**
**பார்க்க, வரிசை எண். 89**

பதிப்பு 2004

## பின்னுரை

இன்னும் மூன்று ஆண்டுகளில் தன் நூற்றாண்டு நிறைவைக் காண உள்ள சிரவையாதீனத்தின் பதிப்பு வரலாற்றை அதன் தொடக்கக் காலத்திலிருந்து இன்று வரை தொகுத்துப் பார்த்த அநுபவம் கால ஊர்தியில் ஒரு நூற்றாண்டு பின்நோக்கிச் சென்றதைப் போல உள்ளது. இந்தச் சிங்க நோக்குப் பார்வையில் ஆதீனப் பதிப்புகளை மூன்று கால கட்டமாகப் பிரித்துப் பார்க்கலாம் எனத் தோன்றுகிறது.

### முதல் காலம் (1907 முதல் ஏறக்குறைய 1957 வரை)

கௌமார மடாலயத்தில் வழிபாடுகள், செபம், தியானம், பஜனை, சமய நூல் கற்றல், கற்பித்தல் எனப் பரபரப்பில்லாமல் அமைதியாக ஆக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். அந்தக் காலத்துப் பதிப்புகளில் இன்றைய செம்பதிப்பியல் கண்ணோட்டத்துடன் ஆய்வாளர்கள் தேடும் பதிப்புக் கூறுகள் எதுவும் இல்லாவிட்டாலும் பதிப்பிக்கப்படும் நூலின் மீது உண்மையான பக்தியும், படித்துணரும் ஆர்வத்தோடு கற்றலும் இருந்தது. இதனால் மூல நூல்களைச் செப்பமாகப் படி எடுத்து, அச்சுப் பிழைகளைக் கவனமாகத் திருத்தி வெளியிட்டுள்ளனர். அந்தக் காலகட்டத்தில் அச்சகங்களும் ஆதீனத்தின் மீது உண்மையான அபிமானம் உள்ளவர்களுடையனவாக இருந்தன. அந்த அச்சக உரிமையாளர்கள் ஆதீன நூல்களை அச்சிடுவதை ஒரு பணம் பெறும் கூலித்தொழிலாகக் கருதாமல் சமயத் தொண்டாகவே எண்ணிச்

சிறப்பாகப் பணிபுரிந்தனர். இவர்களுள் சென்னைக் கேசரி அச்சக உரிமையாளர் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியவராவார்.

### இடைக்காலம் ஏறக்குறைய 1957 முதல் 1997 வரை

சிரவை யாதீனத்தின் புகழ் பெருகிப் பெருவிழாக்கள், இடைவிடாத தலப் பயணங்கள், கணக்கற்ற திருக்கோவில் திருப்பணிகள், திருக்குட நீராட்டு விழாக்கள், இலக்கியச் சொற்பொழிவுகள் என்பனவற்றோடு கல்வி நிலையங்களின் மேலாண்மை, அரசுத் துறைகளுடன் தொடர்பு எனப் பரபரப்பான வேலைகள் பெருகி மடாலயம் என்பது ஓர் அலுவலகம் போலச் செயல்பட வேண்டிய சூழல். காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை அன்பர்கள் வந்து கொண்டே இருப்பார்கள். அவர்களோடு பேசி அனுப்பியாக வேண்டும்.

இந்த நிர்வாக அலுவலகத்தில் பொறுமையாகவும் அமைதியாகவும் நடைபெற வேண்டிய தத்துவ இலக்கிய ஆய்வுகளுக்கு நேரமோ - ஏன் அவசியமோ இருக்கவில்லை. இலக்கியப் பணிகளுக்காக மட்டுமே ஒரு தனிக்கட்டமைப்பு இருந்தால்தான் முடியும் என்ற நிலை உருவாகி விட்டது. இதனை நன்கு உணர்ந்திருந்த தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள் அவர்கள் சில ஏற்பாடுகளைச் செய்தார். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த அளவு அம்முயற்சிக்குத் தக்க ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. இந்தக் கால கட்டத்தில் அச்சுக் கூடங்களும் இலாப நோக்கம் மட்டுமே உடைய தொழிற் கூடங்களாகி விட்டன.

இந்தக் காலகட்டத்தில் ஆதீனத்திலிருந்து வெளியான நூல்களில் மிகப்பல நூல்கள் அருமையானவைகளாக இருந்தும் பதிப்பு நோக்கில் பயனற்றவை ஆகிவிட்டன. பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குப் பாடநூலாக வைக்கப்படும் வாய்ப்புக் கிடைத்தும் அதனையும் முறையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஒரு பள்ளிக் கூடத்தின் ஆண்டு விழா மலரில் அந்தப் பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது எந்த ஆண்டில், மலர் வெளியிடப்படுவது எந்த ஆண்டில் என்னும் குறிப்பே இல்லை என்னும் ஒன்றைக் கொண்டே பதிப்புத்துறையில் எவ்வளவு கவனம் செலுத்தப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். என்றாலும் இலக்கியங்களை அழித்து விடாமல் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகச் சுவாமிகள் பதிப்பித்துக் கொண்டே இருந்தார். சுவாமிகள் அவ்வாறு மூல நூல்களை அச்சிட்டு வழங்கியிராவிட்டால் அவையாவும் எலிகளுக்கும் கறையான்களுக்கும் இரையாகி என்றோ அழிந்திருக்கும். இன்றும் சிரவை ஆதீன நூல்கள் கிடைக்கின்றன என்றால் அதற்கு

முதற் காரணம் இந்த இடைக்காலப் பதிப்புகளே. இந்த நன்றி மறப்பது நன்றன்று.

## இக்காலம் ஏறக்குறைய 1997 முதல்

சிரவையாதீனத்தின் நான்காவது பட்டமேற்றிருக்கும் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் அவர்கள் அடிப்படையில் ஓர் அறிவியற் பட்டதாரி. தொடர்ந்து தமிழ் முதுகலை முடித்து முறையான இலக்கிய ஆய்வில் ஈடுபட்டுள்ளார். மேலும் தமிழ்த்தாத்தாவின் என் சரித்திரத்தை நேரம் கிடைக்கும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டே இருக்கிறார்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் மற்றும் சிரவை கந்தசாமி சுவாமிகள் ஆகிய இருபெரும் கவிஞர்களின் இலக்கியங்கள் தமிழ் அறிஞர்களிடையே பரவி இலக்கிய வரலாற்றில் இடம் பிடிக்காததற்கு ஒரே காரணம் அவற்றிற்கு முறையான பதிப்புகள் இல்லாமைதான் எனத் தெளிவாக உணர்ந்துள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றில் இவர்களுக்கு உரிய இடம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். எனவே ஆதீனத்திலிருந்து எதிர்காலத்தில் வரக்கூடிய பதிப்புகள் மரபு மாறாத உரையுடனும், தெளிவான விளக்கங்களுடனும் இலக்கியத் தரம் வாய்ந்தனவாக இருக்க வேண்டும் என விழைகிறார். ஆசைப்பட்டால் போதுமா? அதற்கான கட்டமைப்பு வசதிகளையும் செய்து கொடுத்து வருகிறார்.

இளைஞர்களுக்கு ஓலைச் சுவடியியல் பயிற்சி, கோடை விடுமுறையில் இலக்கண வகுப்புகள், திருமடத்தில் மாதக் கருத்தரங்கங்கள், தவத்திரு. கஜபூசைச் சுந்தர சுவாமிகளின் பெயரில் ஒரு சிறப்பு நூலகம், கௌமார இலக்கியங்களைப் பற்றி எம்.பில்., பி.எச்டி. ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் என ஓர் ஆய்வு நிறுவனத்திற்கு வேண்டிய அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் செய்து வருகிறார். அறிவியல் முன்னேற்றங்களான கணிப்பொறி, நிலைமின்படி (Xerox) இணையதளம் ஆகியவற்றையும் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புகள் உள்ளன. இவை எல்லாவற்றையும் சுவாமிகள் சிரவையாதீனத்தின் எதிர்காலப் பதிப்பாசிரியர் களுக்காகவே செய்து வருகிறார்.

பதிப்பிக்க நிறைய நூல்கள் உள்ளன; பதிப்புப் பணிக்குத் தேவையான கருவிகள் உள்ளன; செம்மையாகப் பணிகள் நடந்தால் இன்றைய சூழ்நிலையில் பணம் கிடைப்பதும் சற்றும் கடினமல்ல. எனவே இனிமேல் கௌமார மடாலயத்திலிருந்து தரம் வாய்ந்த செம்பதிப்புகள் தொடர்ந்து வெளியாகும் என எதிர்பார்க்கலாம். இது

ஆசை மட்டுமல்ல; அவசியம். வெளியாகா விட்டால் இத்தனை நூல்களும் "மறைந்து போன தமிழ் நூல்கள்" பட்டியலில் இடம் பெற்று விடும்.

தவத்திரு குமரகுருபர சுவாமிகளின் அருளாட்சிக் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படும் காலமாக அமையும் என்னும் நம்பிக்கையுடன் இவ்வுரையை நிறைவு செய்கிறேன்.

## பிற்சேர்க்கை

### சிரவைக் கௌமாரச் சபை நூல் வெளியீடுகள்

| எண் | நூல் | ஆண்டு |
|---|---|---|
| 1. | சண்முக மாலை | 1907? |
| 2. | ஆத்தும ராம சரித்திரம் என்னும் தத்துவ விசாரணை | 1913 |
| 3. | இராமானந்தத் திரட்டு | 1921 |
| 4. | இராமானந்தப் பிரதாபம் | 1921 |
| 5. | சற்குரு சரித வண்ணக்கோவை | 1921 |
| 6. | ஆத்தும ராம சரித்திரம் | 1924 |
| 7. | இராமானந்த சுவாமிகள் சிந்துத் திரட்டு | 1926 |
| 8. | சங்கரா சாரிய வைபவம் | 1927 |
| 9. | வள்ளி நாயக மாலை | 1927 |
| 10. | அவிநாசிப் பிரபந்தத் திரட்டு | 1927 |
| 11. | மருதமலைப் பிரபந்தத் திரட்டு | 1927 |
| 12. | பக்தமான்மியம் | 1928 |
| 13. | பக்தமான்மிய சாரம் என்னும் குருதோத்திர மாலை | 1928 |
| 14. | திருவாமாத்தூர் சுந்தரத்தம்மை பரிபூரணப்பாக்கள் | 1928 |
| 15. | இரங்கசாமிக் கவுண்டன்புதூர் தோத்திரத்திரட்டு | 1929 |
| 16. | வண்ணத்திரட்டு | 1929 |
| 17. | இரத்தினாசலப் பிரபந்தத் திரட்டு | 1929 |
| 18. | இரத்தினாசல யமக அந்தாதி | 1929 |
| 19. | வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் தோத்திரத் திரட்டு | 1929 |
| 20. | இராமானந்த சுவாமிகள் ஜாதகத்திரட்டு | 1929 |
| 21. | சீடாசாரம் | 1929 |
| 22. | குன்னத்தூர்ப்புதூர்த் தோத்திரத் திரட்டு | 1931 |
| 23. | பக்தி விசேடத்திரட்டு | 1931 |
| 24. | கீரநத்தம் தோத்திரத் திரட்டு | 1932 |

25. இராமானந்த சுவாமிகள் நெஞ்சுவிடு தூது 1933
26. இராமானந்த சுவாமிகள் பிள்ளைத் தமிழ் 1934
27. இதோபதேசத் திரட்டு 1934
28. (சௌரி) உடையாம்பாளையம் தோத்திரத்திரட்டு 1934
29. சண்முகமாலை மூன்றாம் பதிப்பு 1935
(இரண்டாவது இராமானந்தத் திரட்டு)
30. நீதி வாக்கியத் திரட்டு 1935
31. கோயிற்பாளையத் தலபுராணம் 1936
32. கணபதி கண்ணப்பசாமி பரிபூரணப் பாடல்கள் 1937
33. வெள்ளக் கிணறு இராமானந்தாசிரமத் தோத்திரத் திரட்டு 1937
34. விளாங்குறிச்சி இட்ட சித்தி விநாயகர் பதிகங்கள் 1937
35. அன்னியூர்த் தலபுராணமும் தோத்திரப் பதிகங்களும் 1937
36. கணபதி, கணபதிப் புத்தூர் விநாயகர் தோத்திரங்கள் 1937
37. வெள்ளியங்கிரித் தோத்திரப் பிரபந்தங்கள் 1938
38. தே. அருணாசலக் கவுண்டர் பரிபூரணப் பாக்கள் 1939
39. பேரூர் சாந்தலிங்க சுவாமி பிள்ளைத் தமிழ் 1940
40. பேரூர்ப் பச்சை நாயகி பிள்ளைத் தமிழ், மாலை 1940
41. கணுவாய் இராமசாமிஐயா பிணி நிவர்த்திப் பதிகம் 1940
42. வெள்ளக்கிணறு பார்வதியம்மை பரிபூரணப் பாக்கள் 1940
43. தவத்திரு. இராசு சுவாமிகள் பரிபூரணப்பாக்கள் 1940
44. வெள்ளானைப்பட்டித் தோத்திரப் பிரபந்தத் திரட்டு 1940
45. கணபதி அத்தனூரம்மை மாலை 1941
46. பேரூர்த் தோத்திரப் பிரபந்தத் திரட்டு 1941
47. பூளைமேடு தோத்திரப் பிரபந்தத் திரட்டு 1941
48. சிரவணம்பட்டிப் பலதெய்வத் தோத்திரத் திரட்டு 1941
49. கணுவாய் இராமசாமிஐயா பரிபூரணப் பாக்கள் 1941
50. குருந்தமலைப் பிரபந்தத் திரட்டு 1942
51. குன்னத்தூர்ப்புதூர் அருவசெட்டியார் பரிபூரணப் பாக்கள் 1942
52. தேவம்பாளையம் கந்தசாமி பரிபூரணப் பாக்கள் 1942
53. மாதை தி.மு. செந்தினாயக ஐயா பரிபூரணப்பாக்கள் 1942
54. மேட்டுப்பாளையம் விநாயகர், பாலதண்டபாணி தோத்திரம் 1942
55. குரு(ரி)டி மலை பொன்னூற்றம்மை பதிகம் 1943
56. மடாலய அரசடி வரசித்தி விநாயகர் பதிகம் 1943
57. (சவுரி) உடையாம்பாளையம் தோத்திரம் 1943
58. கீரநத்தம் (கீரணம்) பலதெய்வத் தோத்திரத் திரட்டு 1943

59. (சின்னவேடம்பட்டி) உடையாம்பாளையத் தோத்திரத் திரட்டு 1943
60. கணபதி வேணுகோபாலசாமி பதிகம் 1943
61. சிரவணம்பட்டி ரதாரோகண விநாயகர் தோத்திரம் 1943
62. கணபதிப்புத்தூர் பிரசன்ன விநாயகர் தோத்திரம் 1944
63. காரைமடை ரங்கநாத மாலை 1944
64. இராமநாதபுரம் விநாயகர், வரதராஜர் தோத்திரம் 1944
65. கணபதி ம.சு. சின்னையசாமி பரிபூரணப் பாக்கள் 1944
66. இட்ட சித்தி விநாயகர் மாலை 1944
67. முதலிபாளையம் திருவருள் விநாயக மாலை 1944
68. முதலிபாளையம் இராமானந்த மடாலய வேற் பதிகம் 1944
69. காளப்ப நாயக்கன் பாளையத் தோத்திரம் 1945
70. கீரநத்தம் மாரியம்மன் பதிகம் 1945
71. சிரவை பாலசந்திர விநாயகர் குமரகுருபரர் தோத்திரம் 1945
72. மொண்டி பாளையம் வெங்கடேசப் பெருமாள் மாலை 1945
73. பாரியூர்க் கொண்டத்துக் காளியம்மன் பதிகம் 1946
74. கீரநத்தம் விநாயகர், கரிவரதராஜர் தோத்திரம் 1946
75. தேவராயபுரம் பலதெய்வத் தோத்திரப்பிரபந்தம் 1946
76. குன்னத்தூர்ப் புதூர் மாகாளியம்மன் பதிகம் 1946
77. சிரவைபுரப் பதிகம் 1947
78. குருந்தமலை குழந்தை வேலாயுதசாமி மாலை, ஆஞ்சநேயர் துதி 1947
79. குருந்தமலை கம்பீர விநாயகர் பதிகம் 1947
80. முருகன் துதிமாலை - பிடித்த பதிகம் 1947
81. பிச்சனூர் சண்முகானந்த சுவாமிகள் பரிபூரணப்பாக்கள் 1947
82. பல்லடம் கரைப்புதூர் உப்பிலியபாளையம் தோத்திரம் 1947
83. குன்னத்தூர்ப்புதூர்த் தோத்திரத் திரட்டு, 1947
இகபர சாதன விளக்கம்
84. முருகன் துதி மாலை - பதிக அந்தாதி 1947
85. மேட்டுப்பாளையம் விநாயகர் பால தண்டபாணி தோத்திரம் 1947
86. விளாங்குறிச்சி சுப்பணகவுண்டர் பரிபூரணப் பாக்கள் 1947
87. மகாத்மா காந்திஜி இரங்கற்பாக்கள் 1948
88. கோயில்பாளையத் தோத்திரப் பிரபந்தத் திரட்டு 1948
89. திருப்பூர் பலதெய்வத் தோத்திரத் திரட்டு 1948
90. தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பரிபூரணப்பாக்கள் 1948
91. குருந்தமலை குழந்தை வேலாயுதசாமி பிள்ளைத்தமிழ் 1948
92. குனியமுத்தூர் குமரகுருபரர் தோத்திரத்திரட்டு 1949

93. குன்னத்தூர்ப்புதூர் கரிவரதராஜர் தோத்திரப்பதிகம் 1949
94. சிரவை கந்தசாமி சுவாமிகள் தோத்திரப் பதிகம் 1949
95. உதகமண்டலம் சீனிவாச மாலை 1950
96. கந்தசாமி சுவாமிகள் வாழ்க்கை வரலாற்று வண்ணம் 1951
97. பூவாத்தாள் பரிபூரணப்பாக்கள் 1952
98. திருத்துடிசைப் பிரபந்தத் திரட்டு 1952
99. மழைப்பதிகம் - வண்ணச்சரபர் 1952
100. சிரவைத் தண்டபாணிக் கடவுள் பிள்ளைத்தமிழ் முதல் பதிப்பு 1953?
101. பத்திராசல இராமச்சந்திரன் பிள்ளைத் தமிழ் 1955
102. கந்தசாமி சுவாமிகள் பிள்ளைத்தமிழ்ப் பதிகம் 1955
103. குன்னத்தூர்ப்புதூர் மாகாளியம்மன் தோத்திரம் 1956
104. வண்ணச்சரபர் பிரிவுழி இரங்கல்துறை வண்ணம் 1956
105. கீரநத்தம் தவத்திரு. மருதாசல சுவாமிகள் பரிபூரணப்பாக்கள் 1956
106. இராமானந்த சுவாமிகள் மோட்சி தீப நினைவுமலர் 1956
107. இரத்தினகிரிக் குமரக்கடவுள் பாமாலை 1957
108. கணபதி அத்தனூரம்மை பொன்னூசல் 1958
109. இராமானந்த சுவாமிகள் வாழ்க்கை வரலாறு - 2ஆம் குருபூசை மலர் 1958
110. சிரவையமக அந்தாதி முதல் 50 பாடல்கள் மட்டும் 1959
111. விளாங்குறிச்சி செல்வ விநாயகர் பதிகம் 1959
112. திருப்பழனி பழனியாண்டவர் திருப்பள்ளியெழுச்சி, மாலை 1959
113. விளாங்குறிச்சி காமாட்சியம்மன் பாமாலை 1961
114. பல்லடம் அரசூர்த் தோத்திரத் திரட்டு 1961
115. கணபதி மாரியம்மன் பாமாலை 1961
116. கோவை ஆர்.எஸ்.புரம் இரத்தின விநாயகர் பதிகங்கள் 1961
117. மருதமலையாண்டவர் பதிகங்கள் 1961
118. கணபதி காமாட்சியம்மன் பதிகம் 1962
119. கணபதி மாரியம்மன் பதிகம் 1962
120. காளப்பட்டி மாரியம்மன் தோத்திரத்திரட்டு 1962
121. மேட்டுப்பாளையம் சௌடாம்பிகை தோத்திரப் பதிகம் 1962
122. இராமானந்த சுவாமிகள் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் 1962
123. கௌமார முறைமை 1964
124. தவத்திரு. சபாபதி சுவாமிகள் பரிபூரணப்பாக்கள் 1964
125. கணபதி வேணுகோபால ஆலயக் கும்பாபிஷேக மலர் 1964
126. தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத் திரட்டு 1964

127. முருகப்பெருமான் திருவிளையாடற் கலிவெண்பா 1964
128. மநுநெறித் திருநூல் 1964
129. மணிகாரம்பாளையம் கணபால விநாயகர் தோத்திரம் 1964
130. காளப்பட்டி மாகாளியம்மன் பதிகம் 1965
131. கீரநத்தம் சென்னியாண்டவர் பதிகம் 1965
132. இருவர் இரட்டை மணிமாலை 1965
133. கந்தர் கலிவெண்பா 1965
134. தியானாநுபூதி மூலமும் உரையும் 1965
135. இரத்தினகிரி குமரக்கடவுள் பாமாலை இரண்டாம் பதிப்பு 1966
136. ஆவாரம்பாளையம் சோபநகர் இஷ்டசித்தி விநாயகர் பதிகம் 1966
137. குருபர தத்துவம் - கௌமார மடாலயக் குடமுழுக்கு மலர் 1966
138. தவத்திரு அரங்கப்ப சுவாமிகள் பரிபூரணப்பாக்கள் 1966
139. தவத்திரு சின்னசாமி சுவாமிகள் பரிபூரணப்பாக்கள் 1966
140. தெற்கு நந்தவனம் தவத்திரு சுந்தரசுவாமிகள் பரிபூரணம் 1967
141. காளப்ப நாயக்கன் பாளையம் குட்டியப்ப சாமி பதிகம் 1967
142. திருப்பதி திருவரங்கம் தோத்திரப்பாக்கள் 1968
143. கணபதி ஓதியப்பக் கவுண்டர் பரிபூரணப்பாக்கள் 1968
144. விளாங்குறிச்சி சுப்பண கவுண்டர் பரிபூரணப்பாக்கள் 1969
145. திருப்பதி சிரவை தோத்திரம், பசுந்தமிழ்ப் பண்பு 1970
146. சிவபுராணம் 1971
147. தெனமநல்லூர்க் கரிய காளியம்மை பதிகம் 1971
148. திருமதி தாயம்மாள் பரிபூரணப்பாக்கள் 1971
149. இராமானந்த சுவாமிகள் கிளிக்கண்ணி 1972
150. முருகப் பெருமான் 108 போற்றி இரண்டாம் பதிப்பு 1972
151 கௌமார மடாலயம் தண்டபாணி சுவாமி கோவில் கும்பாபிஷேக மலர் 1972
152. கணபதி அத்தனூரம்மை திருப்பொன்னூசல் இரண்டாம் பதிப்பு 1973
153. பாபநாயக்கன் பாளையம் சாமி பரிபூரணப்பாக்கள் 1974
154. சின்னவேடன்பட்டி விக்னவிநாயகர் தோத்திரப்பாடல்கள் 1974
155. அப்பன் சாமி (திரு. வேலாயுதக் கவுண்டர்) பரிபூரணப்பாக்கள் 1974
156. பேரூர்ப் பச்சை நாயகி பிள்ளைத்தமிழ் இரண்டாம் பதிப்பு 1974
157. அவிநாசிக் கருணாம்பிகை மாலை இரண்டாம் பதிப்பு 1975
158. திருப்பேரூர்க் கோவை 1975
159. இரத்தினாசலப்பதிகம், கந்தசாமி சுவாமிகள் வாழ்க்கை வரலாற்று வண்ணம், சிரவை மும்மணிக்கோவை 1975

160. சிரவை மடாலயத் தோத்திரத் திரட்டு 1975
161. சிரவை முருகன் குருமணிமாலை 1976
162. கணபதி ஆதிவிநாயகர் பதிகங்கள் 1976
163. சிரவை குமரக்கடவுள் தோத்திரம், திருப்பள்ளியெழுச்சி 1977
164. திருப்பேரூர்க் கலம்பகம் மூலமும் உரையும் 1978
165. சண்முக மாலை நான்காம் பதிப்பு 1978
166. மொண்டி பாளையம் வெங்கடேசப் பெருமாள் தோத்திரம் 1978
இரண்டாம் பதிப்பு
167. சிரவைத் தண்டபாணிக் கடவுள் பிள்ளைத்தமிழ் 1978
இரண்டாம் பதிப்பு
168. தவத்திரு சுந்தர சுவாமிகள் பொன்விழாமலர் 1978
169. மருதமலை அலங்காரம் இரண்டாம் பதிப்பு 1979
170. சிரவை மடாலயத் தோத்திரப் பதிகங்கள் 1979
171. வெள்ளக்கிணறு விநாயகர், பத்திரகாளியம்மன் மாலை 1980
172. கனககிரித் திருப்புகழ் 1981
173. சூரியமாலை 1982
174. தியானமுறை, நீதி வாக்கியம் 1982
175. சிரவை மடாலயத் தோத்திரத்திரட்டு 1982
176. அங்கித் தொழுவு காளியம்மன் திரட்டு 1984
177. திருமலை முருகன் பதிகம் (முதலாவது) 1984
178. அருட்செல்வர் நா. மகாலிங்கம், டாக்டர் ஜி. பக்தவத்ஸலம், 1984
டாக்டர் கே. மோகன்தாஸ் பாராட்டுப்பாக்கள்
179. பேரொலியலந்தாதி 1985
180. கோவை சித்தாபுதூர் ஜகந்நாதப்பெருமாள் பதிகம் 1985
181. சிரவையமக அந்தாதி மூலமும் உரையும் 1985
182. திருமலை முருகன் பதிகம் (இரண்டாவது) 1987
183. சிரவை முருகன் திருப்பள்ளியெழுச்சி, மாதவாரப் பதிகங்கள் 1988
184. அரசாட்சி 1988
185. அவிநாசிக் கருணாம்பிகை யமகவந்தாதி மூலமும் உரையும் 1988
186. முருகபக்தர்கள் பேரவை, 5 மாவட்ட மாநாட்டு மலர் (கோவை) 1988
187. ஆத்திசூடி கொன்றை வேந்தன் ஆங்கிலத்துடன் 1988
188. தவத்திரு சுந்தர சுவாமிகள் மணிவிழாமலர் 1989
189. சிரவை முருகன் திருப்பள்ளியெழுச்சி, மாத வாரப் பதிகங்கள் 1989
190. தவத்திரு சுந்தர சுவாமிகள் பிள்ளைத்தமிழ்கள் இரண்டு 1990
191. முருகபக்தர்கள் பேரவை பழனிமாநாட்டுச் சிறப்பு மலர் 1992

192. சிரவைத் தண்டபாணி மாலை, குமரகுருபரக் கடவுள் மாலை 1992
193. உடையாம்பாளையம் மாரியம்மன் பாமாலை 1992
194. ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி 1992
195. ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி, சற்குரு பதிகம் 1992
196. கீரநத்தம் மருதாசலசாமி 37ஆவது குருபூசைமலர் 1993
197. கந்தர் கலிவெண்பா உரைநடைத் தெளிவுடன் 1993
198. தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திர வண்ணம் 1993
199. சபரிமலை ஐயப்பசாமி பதிகம் இரண்டாம் பதிப்பு 1993
200. திருவாசகம் தவத்திரு சுந்தரசுவாமிகள் மோட்ச தீபமலர் 1994
201. கீரணம் மருதாசல சாமி 38ஆவது குருபூசை மலர் (சஷ்டி கவசம்) 1994
202. தவத்திரு இராம ருஷ்ணசாமி பரிபூரணப் பாக்கள் 1994
203. தவத்திரு. சுந்தரசுவாமிகள் முதலாண்டுக் குருபூசை மலர் 1995
204. கீரணம் மருதாசல சாமி 39ஆவது குருபூசைமலர் 1995
205. ஸ்ரீவாலை ஜெபமாலை 1995
206. குருந்தமலை குழந்தை வேலாயுதசாமி பிள்ளைத்தமிழ் உரையுடன் 1996
207. அறுசமயத் துதி நூல் 1996
208. பிரதோஷகால வழிபாடு முதல் பதிப்பு 1997
209. திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருப்பாவை உரையுடன் 1997
210. விநாயகர் துதிப்பாமாலை 2 அகவல் 1 கவசம் 1997
211. வண்ணச்சரபம் சுவாமிகள் வரலாறு இரண்டாம் பதிப்பு 1998
212. தவத்திரு இராமானந்த அடிகளார் வரலாறு 1998
213. தண்டபாணி சுவாமிகள் ஆய்வுமாலை முதல் தொகுதி 1998
214. தண்டபாணி சுவாமிகள் ஆய்வுமாலை இரண்டாம் தொகுதி 1998
215. படைவீட்டுத் திருப்புகழ் 1998
216. திருவாமாத்தூர்ப் பதிகச் சத்கம் 1998
217. பிரதோஷ கால வழிபாடு இரண்டாம் பதிப்பு 1998
218. திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை உரையுடன் 1998
219. மணிவிழா மாண்பு என்னும் சஷ்டிபூர்த்தி விரத மான்மியம் 1999
220. தவத்திரு கந்தசாமி சுவாமிகள் வாழ்க்கை வரலாறு 1999
221. தவத்திரு கந்தசாமி சுவாமிகள் ஆய்வு மஞ்சரி 1999
222. பிரதோஷகால வழிபாடு மூன்றாம் பதிப்பு 1999
223. சைவத் தமிழ்த் திருமணம் 2000
224. திண்டுக்கல் தேனி மாவட்ட முருக பக்தர்கள் மாநாட்டு மலர் 2000
225. சனிப்பெயர்ச்சி - பலன்களும் பரிகாரங்களும் 2000
226. கொங்குநாட்டுத் திருக்கடையூர் 2000

227. கோவில் ஒன்று கூப்பிடுகின்றது 2000

228. பிரதோஷகால வழிபாடு நான்காம் பதிப்பு 2000

229. திருமதி வள்ளியம்மாள் நடராஜன் நினைவு மலர் 2000

230. முருகபக்தர்கள் பேரவை 6 மாவட்ட மாநாட்டு மலர் (ஈரோடு) 2000

231. பிரதோஷகால வழிபாடு ஐந்தாம் பதிப்பு 2001

232. நவராத்திரித் துதிகள் 2001

233. தவத்திரு குமரகுருபர சுவாமிகள் அருளாட்சி விழாமலர் 2001

234. பிரதோஷ கால வழிபாடு ஆறாம் பதிப்பு 2002

235. தெனமநல்லூர் கரியகாளிஅம்மன் பதிகங்கள் 2002

236. திருக்கயிலாயத் திருமுறைப் பாக்கள் 2002

237. திரு. எஸ்.எம். விசுவநாதக் கவுண்டர் நினைவுப்பாமலர் 2002

238. பிரதோஷ கால வழிபாடு ஏழாம் பதிப்பு 2002

239. அருளுரைக் கோவை 2003

240. திருவடி 2003

241. சுந்தர சுவாமிகள் தோத்திர மஞ்சரி 2003

242. பிரதோஷ கால வழிபாடு எட்டாம் பதிப்பு 2004

243. கந்தர் அநுபூதி 2004

244. முருகன் 108 போற்றி மூன்றாம் பதிப்பு 2004

245. தேர்வில் வெற்றி பெற - சகலகலாவல்லி மாலை 2004

246. மழைப்பதிகம் கந்தசாமி சுவாமிகள் 2004

## ஆண்டு அறியப் பெறாத பதிப்புகள்

1. அப்பர் பெருமானின் போற்றித் திருத்தாண்டகங்கள் (நூல் இல்லை)
2. முருகப்பெருமான் போற்றி 108 முதல் பதிப்பு (நூல் இல்லை)
3. சிரவைச் சிவபெருமான் சந்தப் பதிகம். (நூல் பார்க்கப் பெற்றது).

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
## சென்னை - 600 113

**அண்மை வெளியீடுகள் :**

| | |
|---|---|
| தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | 45.00 |
| பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் | 35.00 |
| அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார் | 55.00 |
| சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் | 40.00 |
| மூதறிஞர் மு.இராகவையங்கார் | 40.00 |
| மா.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை | 50.00 |
| தட்சிணாமூர்த்தி குருமுகம்–100 | 50.00 |
| நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை.சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி–1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி–2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி–3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 180.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| Agreement in Dravidian Languages | 100.00 |
| நாடகவியல் | 70.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ.நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி–யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| வ.உ.சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம்–நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| கருவூரார் பல திரட்டு | 70.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |
| திருமணம் செல்வக்கேசவராய முதலியார் | 30.00 |

510 **சிரவையாதீனப் பதிப்புகள்** 30.00